மே 2026

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

312

விலை
ரூபா 100/=



பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

312

ஒளி : 26 சுடர் : 12

ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்

ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானலக்ஷ்மி
ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. இலங்கை
தொலைபேசி: + 94 11 258 6013
+ 94 71 736 2862
மின்னஞ்சல்: editor@gnanam.info

சந்தா விபரம் : இலங்கை Rs. 1500/=
வெளிநாட்டுச் சந்தா $ 100
(தபால் செலவு உட்பட)

வங்கி விபரம்
G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

## இதழினுள்ளே.....

### கவிதைகள்

- தேன்தமிழினி 14
- சி.உதயகுமார் 15
- ருட்யார்ட் கிப்ளிங்/ அன்னலட்சுமி இராஜதுரை 24
- யோகேந்திரன் பிரசாந் 27
- குமாரசூரியர் யர்சினி 39
- கீத்தா பரமானந்தன் 41

### சிறுகதைகள்

- எம்.எம்.எம்.இப்றாகீம் 02
- ஹசிப் உர் ரஷீத் இப்தி/ சு.முரளிதரன் 12
- கலாபூஷணம் என். தியாகராசா 16
- பவானி (நெதர்லாந்து) 25
- வெல்லாவெளி விவேகானந்தம் 28
- கலைமாமணி கா.தவபாலன் 38
- சுந்தரி மணியன் (தமிழ்நாடு) 40
- கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் 44

### கட்டுரைகள்

- தமிழ்மணி அகளங்கன் 06
- பேராசிரியர் சபா ஜெயராசா 21
- லத்பான் றோஸின் 35

### பத்தி

- பேராசிரியர் துரை. மனோகரன் 42

### வாசகர் பேசுகிறார் 47

- ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
- புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.
- ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.

# ஆசிரியர் பக்கம்...




## அனைவருக்கும் அன்பு வணக்கம் !

### என்று தணியும்...?

இந்தியாவில் இலக்கியத்துக்காக வழங்கப்படும் உயரிய விருதுகளில் **ஞானபீட விருது** குறிப்பிடத்தக்கதாகும். 1965இல் தொடங்கிய இவ்விருது ஆரம்பகாலங்களில் ஓர் எழுத்தாளரின் குறிப்பிட்ட படைப்பினைப் பாராட்டி, வழங்கப்பட்டது. அதன்பின்னர், கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக **வாழ்நாளில் ஒருவர் ஆற்றிய இலக்கியப் பங்களிப்பை கௌரவிக்கும்வகையில்** இந்த விருது வழங்கப்பட்டுவருகிறது. இந்தப் பின்னணியில் **அகிலன்** எழுதிய சித்திரப்பாவை (1968) நூலுக்கு 1975ஆம் வருடம், ஞானபீட விருது வழங்கப்பட்டது. இது, தமிழுக்குக் கிடைத்த முதலாவது ஞானபீட விருதாகும். அதற்கடுத்து 2002ஆம் வருடம், இலக்கியத்துக்கு ஆற்றிய பங்களிப்பிற்காக **ஜெயகாந்தனுக்கு** இவ்விருது வழங்கப்பட்டது. இந்தத் தொடரில், இம்முறை ஞானபீட விருதானது **வைரமுத்து** அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஞானம் இதழின் வாழ்த்தினைத் தெரிவிக்கின்றோம்.

வைரமுத்துவின் கவிதைகளும் நாவல்களும் பிற நூல்களும் இலக்கியத் தரம் கொண்டவை என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். இருப்பினும், அவரின் திரைப்படப் பாடல்களே அவரது வாழ்நாளின் அதிகப்படியான பங்களிப்பு என்பதை வைரமுத்துவினாலும் மறுக்கமுடியாது.

தற்போது ஞானபீட விருது வழங்கப்பட்டுள்ளமை சார்ந்து பல வாதங்கள் எழுந்தவண்ணம் உள்ளன. விருதுகள் ஒவ்வொன்றையும் அந்தந்த தராதரத்தில் வைத்து நோக்கவேண்டும்.

இன்றைய தமிழுலகில் விருதுகளைக் காணும்போது பல வினாக்கள் மனதில் எழுகின்றன. விருதினை எந்த அமைப்பு வழங்குகின்றது? அந்த அமைப்பு விருதினைத் தீர்மானிக்கும் முறை என்ன? தற்போது விருதைத் தீர்மானிக்கும் குழுவில் யார் இருக்கின்றார்கள்? யாரெல்லாம் இந்த விருதை இதற்கு முன்னர் பெற்றுள்ளார்கள்? தற்போது யாருக்கு வழங்கப்படுகின்றது? அவரின் எந்தப் பங்களிப்பிற்காக வழங்கப்படுகின்றது? எந்தக் காலகட்டத்தில் விருது வழங்கப்படுகின்றது? அரசியல் பின்னணி எதுவும் உள்ளதா? என பல கேள்விகள் கோவையாக எழும்புகின்றன.

1963ஆம் வருடம் **அகிலனின் வேங்கையின் மைந்தன்** நாவலுக்கு **இந்திய** அரசு தமிழுக்கான **சாஹித்திய விருதை** வழங்கியது. **அவ்வருடம் வெளிவந்த** அனைத்து வகை தமிழ் நூல்களிலும் சிறந்ததாக வேங்கையின் மைந்தன் தெரிவானது. இந்திய சாஹித்திய அமைப்பானது ஒரு படைப்பாளியின் நூலுக்கு விருது வழங்கிவிட்டால், அவரின் பின்னைய படைப்புகளுக்கு விருது வழங்குவதில்லை. பின்னர், 1968ஆம் வருடம் அகிலன் எழுதிய **சித்திரப்பாவை** நூலுக்கு, இந்திய தமிழ் சாஹித்திய விருது கிடைக்காவிடினும், ஏழு வருடங்களின் பின்னர் (1975ஆம் வருடம்) அகில இந்திய மொழிகளில் சிறந்த படைப்பாகத் தெரிந்து, **ஞானபீட விருது** வழங்கப்பட்டது. இருப்பினும் சித்திரப்பாவை நாவலின் யதார்த்ததன்மை பற்றி இன்றுவரை விமர்சனங்கள் தொடர்கின்றன.

**இலங்கை அரசின் சாஹித்திய** பரிசுகளின் தெரிவு இவற்றிலிருந்து வேறுபட்டது. தாராளத் தன்மை அதிகம்கொண்டது. குறித்த ஆண்டில் வெளிவந்த அனைத்து தமிழ் நூல்கள் என்று நோக்காது, நாவல், கவிதை, சிறுகதை, நாடகம், சிறுவர் இலக்கியம், என பதினைந்து–இருபது வகைப்படுத்தி, ஒவ்வொரு வகையிலும் அந்த வருடத்தில் வெளிவந்த நூல்களுக்குள் தெரிந்து, விருது வழங்கப்பெறும். முன்னர் விருது பெற்றவரும் தனது பிறிதொரு நூலுக்கு மீண்டும் பெற்றுக்கொள்ளலாம்.

விருதாட்டங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.. கொடுத்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.. வாங்கிக்கொண்டுதான் போகிறார்கள்.. நாங்களும் கடந்துகொண்டுதான் இருக்கிறோம்...

என்று தணியும் எங்கள் விருதுகளின் மோகம்..!



# உறக்கமில்லா இரவுகள்



எம்.எம்.எம். இப்றாகீம்

கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையம் என்றுமில்லாதவாறு அன்று பரபரப்பாகக் காணப்பட்டது. அதற்கு முந்திய நாள் அந்த காவல் நிலையத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட குடியிருப்பு வீட்டுத்தோட்டமொன்றில் பொலிசார் நடாத்திய போதைப்பொருள் வியாபார ஒழிப்பு நடவடிக்கையின் காரணமாக அத்தோட்டத்தில் நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்குப் பிறகு காரணமின்றி நடமாடிய பலரையும் கைது செய்து, காவல் நிலையத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.

அவ்வாறு கொண்டுவரப்பட்டவர்களை பிணையில் மீட்டுச் செல்வதற்காகத்தான் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் உறவு முறைக்காரர்களின் ஒருவரான தகப்பன், தாய், மனைவி, சகோதரன், சகோதரி என்று யாராவது ஒருவர் வந்திருந்தனர். அந்தப் பதின்மூன்று வயதுச் சிறுவன் உபைதின் உறவினர்கள் எவரையும் தவிர.

அந்த குடியிருப்பு வீட்டுத்தோட்டம் ‘தெமள வத்த’ தோட்டம் என்று பெயரிடப்பட்டிருந்தாலும் வீரகேசரிப் பத்திரிகை அலுவலகத்துக்கு எதிராகச் செல்லும் வீதியில் அது அமைந்திருந்ததனால் அதை வீரகேசரித்தோட்டம் என்றே அழைப்பது வழக்கமாகிவிட்டது.

கொழும்பின் ஏனைய இடங்களான கும்பனித் தெரு, வாழைத்தோட்டம், தெமட்டகொட, மருதானை, கொட்டாஞ்சேனை, ஆமர் வீதி, பஞ்சிகாவத்தை, மட்டக்குளி போன்ற இடங்களிலும் உபைத் வாழும் வீரகேசரித் தோட்டம் போல பல குடியிருப்பு தோட்டங்கள் அமைந்திருந்தன. அந்தத் தோட்டங்களில் இரண்டு பேர்ச்சுக்கும் குறைவான நிலப்பரப்பில் தனிக்கூரை வீடுகள், சிறுசிறு மாடி வீடுகள் என நிலமற்று, ஒன்றை ஒன்று நெருங்கியதாக வீடுகள் அமைந்திருந்தன. ஒரு சில வீடுகள் மாத்திரம் இரண்டு பேர்ச்சுக்கு சற்று கூடிய நிலப்பரப்பில் மாடி வீடுகளாக அமைந்திருந்தன.

தன்னை மீட்டு செல்ல யாராவது வருவார்களா என்ற ஏக்கத்துடன் கலங்கிய கண்களுடன் காவல் நிலையத்தில் போடப்பட்டிருந்த பிளாஸ்டிக் கதிரை ஒன்றில் காவல் நிலைய வாயிலைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தான் பதின்மூன்று வயது நிரம்பிய சிறுவன் உபைத். அவனுக்கு தான் கைது செய்யப்பட்ட காட்சி நினைவுக்கு வரத்தொடங்கியது.

கிராண்ட் பாஸ் வீதியில் இருந்து அவனது வீட்டுக்குச் செல்லும் வீதி இரு முச்சக்கர வண்டிகள் வழிவிட்டுச் செல்லக்கூடிய வீதியாக அமைந்திருந்தது. அவற்றின் இருமருங்கிலும் பெரிய மாடிவீடுகள் அமைந்திருந்தன. அந்த வீதியின் சுமார் ஐநூறு மீட்டர் தூரத்தில் அந்த வீதி இரு கிளைகளாக பிரிந்து சென்றது.

பிரிந்து செல்லும் அந்த வீதிகளின் இரு மருங்கிலும் சிறிய பல ஒழுங்கைகள். அந்த இரண்டு அடி அகலமான ஒழுங்கைகளின் இருமருங்கிலும் இரண்டு பேர்ச்சுக்கும் குறைவான நிலத்தில் ஒன்றை ஒன்று பார்த்தமாதிரி அமைக்கப்பட்டிருந்த தீப்பெட்டிகளை அருகருகாக அடுக்கியது போன்ற வீடுகள். இப்படியான ஒரு ஒழுங்கையில்தான் கைது செய்யப்பட்ட உபைதின் வீடும் அமைந்திருந்தது. சிறுவன்

உபைதும் இவ்வாறான ஒழுங்கை ஒன்றின் நடுப்பகுதியில்தான் தனது நண்பனின் வீட்டுக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான்.

யாரோ வருவது போன்ற காலடி ஓசை கேட்டு நிமிர்ந்த உபைத், கால்நடையாக ரோந்து வந்த பொலீசாரை கண்டதும் பதட்ட மடைந்தவனாக தனது கையில் இருந்த புத்தக பையை அவனது நண்பனிடம் கொடுத்து வீட்டுக்குள்ளே புகுந்து கொள்ளுமாறு சைகை செய்துவிட்டு பொலீசார் வந்து கொண்டிருந்த திசையின் எதிர்புறமாக ஓடிச்சென்றான்.

மறுவீதியில் கால்நடை ரோந்தாக வந்த பொலீசாரிடம் அகப்பட்டுக்கொண்டான்.

"ஏய்... பையா.... என்னத்துக்கு இந்த நேரம் ஓடி வருகிறாய்.....?" தனது கையொன்றினால் உபைதின் கையை இறுகப் பற்றிக்கொண்ட ஒரு பொலீஸ்காரன் தனது முரட்டுக் குரலில் அதட்டினான். உபைதின் உடல் நடுங்கியதே தவிர அவனிடமிருந்து வார்த்தைகள் வெளி வரவில்லை. அதன் பெறுபேறாகத்தான் உபைத் காவல் நிலையம் கொண்டுவரப்பட்டிருந்தான்.

"பாருங்க இவனைத் தேடி ஒருத்தரும் வரல்லயே.... மத்த எல்லாருக்கும் பிணையெடுக்க யாராவது வந்திருக்கினம். இவன் சின்னப் பையன் எண்டத்துக்கு பொல்லாத ஆளா இருப்பான் போல...." பொலீஸ் சார்ஜண்ட் ஒருவன் சிங்களத்தில் தனது அபிப்பிராயத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டான்.

"அதுதான் பாருங்கோவன்..... அவன்ட தாய், தகப்பண்ட டெலிபோன் நம்பரும் தெரியாது எண்டு சொல்லுறான்...." இன்னொரு பொலீஸ் காரர் சார்ஜனை ஆதரித்து பேசினார்.

"ஓங்கள் எல்லாருக்கும் தெரியும்தானே..... போதைப் பொருளுக்கு அடிமையாகியிருந்த பதினாறு வயது புத்தளத்து முஸ்லிம் பொடியன் ஒருத்தன் திறிவீலர் உரிமையாளர் ஒருவரை கூட்டிப் போய் அவரிட்ட இருந்த பணத்தையெல்லாம் எடுத்துக்கிட்டு அவரைக் கொலை செஞ்சி போட்டிருந்ததும்.... இப்ப அவன் பிடிபட்டிருக்கிறதும்...." பொலீஸ் சார்ஜன்ட் உபைத் மீது சந்தேகத்தை உண்டாக்கினார்.

"நம்மட காவல்துறை அறிக்கைப்படி ரெண்டாயிரத்தி இருபத்தினாலாம் ஆண்டில போதை பொருள் பாவனை, போதைப் பொருள் வியாபாரம் சம்பந்தமாக இருபத்தொரு வயசுக்குக் குறைஞ்ச இரண்டாயிரம் பேர் கைது செய்யப்பட்டிருக்காங்க.... ஹெரோயின், ஐஸ், தூள் பாவிக்கிற டீன் ஏஜ் மாணவர்கள் இரண்டாயிரத்து இருநூற்றி அம்பத்தேழு பேர் கைது செய்யப்பட்டிருக்காங்களாம்... ஸ்கூல் பையன் எண்டு பாக்கக்கூடாது.... வவுனியா புனருத்தாபனக் கேம்புக்கு இவன அனுப்போணும்...." இன்னொரு பொலீஸ்காரன் இப்படி சொன்னான்.

பொலீசார் சிங்களத்தில் உரையாடிக் கொண்டது உபைதுக்கு ஓரளவு புரிந்தபோது அவனை பயமும் ஆட்கொள்ளத் தொடங்கிற்று.

நண்பகல் பன்னிரெண்டு மணியாகிக் கொண்டிருந்தது அன்றைய கடமைக்கு உரிய நேரத்துக்கு வந்த சிறுவர், மகளிர் பொலீஸ் பிரிவுக்குப் பொறுப்பான அந்தப் பெண் பொலீஸ் பரிசோதகரின் கண்களுக்கு உபைத் தென்பட்டான். வருகை பதிவேட்டில் கையொப்பமிட்ட அந்த பெண் பொலீஸ் பரிசோதகர் உபைத் பொலீஸ் நிலையம் அழைத்து வரப்பட்டிருப்பதை ஏனைய போலீஸ்காவலர்களிடம் விசாரித்தறிந்துகொண்டார்.

உபைத்தின் முகத்தைப் பார்த்து புன்முறுவல் பூத்த அந்தப் பெண் பொலீஸ் பரிசோதகர் "வாங்க மகன்..... ஓங்கள விசாரிக்க வேணும்..." என்று நல்ல தமிழில் கதைத்து பையன் உபைத்திடமிருந்து உண்மையை அறிவதற்காக தனது அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றார்.

விசாரணையை முடித்துக்கொண்ட பெண் பொலீஸ் பரிசோதகர். காவல் நிலையத்துக்கு பொறுப்பான தலைமையக பொலீஸ் பரிசோதகரிடம் தான் பெற்றுக்கொண்ட தகவல்களை கூறி, பையன் உபைதின் வீட்டை பரிசோதிக்க செல்ல அனுமதிபெற்றுக்கொண்டார்.

பகல் ஒரு மணியளவில் பெண் பொலீஸ் பரிசோதகர், ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள், உபைத் ஆகியோரை ஏற்றிக்கொண்டு காவல் நிலையத்துக்குரிய 'திறீவீலர்' சென்று கொண்டிருந்தது.

பாதையோரமாக அந்த முச்சக்கர வண்டி நிறுத்தப்பட்டதும், உபைத் இரு பொலீசாரினதும் பாதுகாப்புடன் அவனுடைய வீடு அமைந்திருந்த இரண்டடி அகல ஒழுங்கையால் சென்று வீட்டை காண்பித்ததும் உபைதையும், பொலிஸ் கான்ஸ்டபிளையும் முச்சக்கர வண்டிக்குள் சென்றிருக்குமாறு பணித்த பெண் பொலீஸ் பரிசோதகர் வீட்டு கதவைத் தட்டினார்.

கதவைத் திறந்த உபைதின் தாய் காவல் துறை உத்தியோகத்தரை கண்டதும் அதிர்ச்சி அடைந்தாள். கலவரத்துக்குள்ளாகிவிட்டதை மாத்திரம் அல்ல அவளது வறுமையையும் அவளது முகத்தோற்றம் எடுத்துக்காட்டியது.

"இதுதானே உபைத் வீடு....?" பெண் பொலீஸ் பரிசோதகர் உறுதிசெய்து கொள்வதற்காக கேட்டார். ஆம் என்பதுபோல தலையசைத் தாள் தாய்.

"உபைத் எங்கே...."

"ஸ்கூல் போயிருக்கார் மேம்..." உபைதின் தாயின் முகம் வறுமையை காண்பித்தாலும் அவளது பேச்சு படித்தவள் என்பதை காட்டிற்று.

தோட்டத்தில் அக்கம் பக்கத்தவர்கள் வீட்டுக்குள்ளே என்ன நடக்கின்றது என்பதை வேடிக்கை பார்க்க வீடு அமைந்து இருந்த ஒழுங்கையால் அங்கும் இங்குமாக சென்று பார்வையை வீட்டினுள்ளே செலுத்தி சென்றனர்.

"உபைதின் வாப்பா எங்கே....? "

"அவர் பிட்டகொட்டுவயில பிஸ்னசுக்குப் போயிருக்கார் மேம்..." உபைதின் தாய் பொலீஸ் பரிசோதகருக்கு மறுமொழி பகிர்ந்தாள்.

"என்ன சாமான் பிஸினஸ் பண்ணுறது...?"

"தலை முடி வாருற சீப்பு, கப்புறுபோல, அல்ப்பனெத்தி, பூட்டுசி, காதுக் குடும்பி... ஒன்டிய சாமானக் கொண்டுபோய் பேமண்ட்ல உலாத்திச் திரிஞ்சி விற்பாங்க மேம்..... நான் பின்னேரத்தில சின்னசின்ன சோட் ஈட்ஸ் செஞ்சி விப்பன்...." உபைதீன் தாயார் விளக் கினார்.

"அவருக்கு என்னமும் நடந்துட்டுதோ......" என்று உபைதின் தாயார் சஞ்சலப்படத் தொடங்கினாள்.

"பயப்படவேண்டாம் அம்மா... அவருக்கு ஒண்டும் நடக்கல..... சின்ன ஒரு கிளறி பிகேஷனுக்குதான் வந்திருக்கன்.." உபைதின் தாயாரை தைரியப்படுத்தினார் பொலிஸ் பரிசோதகர்.

பத்து அடி அகலமானதும் இருபத்தைந்தடி நீளமானதுமான அந்த வீட்டில், தான் இருந்து கொண்டிருப்பது ஒரு பழைய செற்றியில் என்பதையும் சுவரொன்றினால் பிரிக்கப்பட்டி ருப்பது சமையல் அறை, சமையலறைக்கு எதிர்ப்புறமாக இருப்பது குளியலறை என்ப தையும் பொலிஸ் பரிசோதகர் அவதானித்தார். தான் அமர்ந்திருப்பதற்கு இடப்புறமாக மேல் மாடிக்கு செல்வதற்கான பழையகால மரப் பல கையிலான படிகள் போடப்பட்டிருந்தன. மேற் கூரையின் கைமரம் ஒன்றில் தடித்த 'நைலோன்' கயிறு ஒன்றைக் கட்டி தொங்க விடப்பட்டிருந்தது.

"மேல் தட்டுல யாரம்மா இருக்கிறாங்க...?"

"மேம்.... மேல்தட்டில ரெண்டு சின்ன றூம் களும், இதப்போல ஒரு பாத்ரூமும் இருக்கு... ஒரு றூமில என்ட மூத்த மகளும் அவட ஹஸ்பண்ட்டும் இருக்காங்க... மத்த றூமில எண்ட தம்பியும் அவர்ட வைஃபும் இருக் காங்க..... நானும் ஹஸ்பணும் இந்த செற்றிக் கதிரைகளை ஒதுக்கிப் போட்டு அதில்தான் படுப்பம்..." உபைதின் தாய் விபரித்தாள்.

"அது சரி அம்மா... அப்ப உபைத் எங்க படுக்கிறது.....?" ஆச்சரியமாக விசாரித்தார் பெண் பொலிஸ் பரிசோதகர்.

"அதென்னத்தக் கேக்கிறீங்க மேம்..... ஏண்ட தம்பி கொம்பஞ்ச வீதியில கல்யாணம் கட்டி அங்கதான் அவர்ட வைஃபுட குடும்பத் தோட ஈந்த..... இப்ப பன்ரெண்டு வருஷத்துக்கு முந்தி அவங்கள ராவோட ராவா அவங்க இருந்த தோட்டத்து ஊடுகள புல்டோசர் போட்டு இடிச்சு துரத்தி அடிச்சிட்டாங்க.... அந்த வீடுகள் ஈந்த காணிய வெளிநாட்டுக் கம்பனிக்கு வித்து இப்ப அங்க பெரிய ஹவுசிங் கொம்ளக்ஸ் கட்டி கோடிக்கணக்குக்கு வித்தீக்காம்... அண்டைக்கி வைஃபையும் கூட்டிகிட்டு வந்த தம்பிக்கும் அவர்ர வைஃ புக்கும் மேல ஒரு றூமக் குடுத்திட்டு நானும் புள்ளயளும் மிஸ்டரோட

மத்த றூமில தங்கினம், அப்ப எண்ட மகளுக்கு வயசு பதினஞ்சி... எண்ட மகன் உபைதுக்கு ஒரு வயசு மேம்... என்ட தம்பிக்கு அரசாங்கத்தால ஊடும் கிடைக்கல்ல... நட்டஈட்டுச் சல்லியும் கிடைக்கல... மகள் கல்யாணம் கட்டி நாங்க தங்கின றூமிலதான் ஹஸ்பண்டோடயும் அவட கைப்புள்ளயோடயும் இப்ப இருக்கிறா...." உபைதின் தாயிடமிருந்து வார்த்தைகள் மடைதிறந்த ஊற்றுப் போல வெளிவந்தன.

மேல்மாடிக்குச் செல்வதற்கான மரப் பலகைப் படிக்கட்டுக்களை பாவிப்பதற்காக பெண் பொலிஸ் பரிசோதகர் தொங்கிய கயிற்றை பிடித்து ஏறத்தொடங்கியபோது பொலிஸ் பயிற்சியின்போது இவ்வாறான கயிறுகளில் தொங்கிக் காட்டிய சாகசம் அவளுக்கு ஞாபகம் வந்தது.



மேலே சென்று பார்த்தபோது ஒரு அறையில் உபைதின் அக்காவும் அவளது கைக்குழந்தையும் மற்ற அறையில் உபைதின் அம்மாவின் சகோதரனின் மனைவியும் இருந்தனர். விசாரித்தபோது அவர்களின் கணவன்மார் வேலைக்குச் சென்று இருப்பதாக கூறினார்கள்.

நேரம் பிற்பகல் இரண்டு மணியாகிக் கொண்டிருந்தது. உபைதின் தாயார் சற்றுப் பதட்டப்படுவதை பெண் பொலிஸ் பரிசோதகர் அவதானித்தார்.

“என்ன அம்மா கொஞ்சம் டென்சன் ஆகிற மாதிரி இருக்கிறீங்களே....” பெண் பொலிஸ் பரிசோதகர்.

“என்ட மகன் உபைத் பக்கத்தில உள்ள புளுமெண்டால் தமிழ் வித்தியாலயத்தில்தான் படிக்கிறார்.... ஸ்கூள் விட்டு ஒண்டு நாப்பத்தஞ்சிக்கெல்லாம் வீடு வந்திருவார்... இன்னம் அவர காணல்லையெண்டுதான் டென்ஷன் ஆகுறன்...” தாய் பாசம் உபைதின் தாயில் தெரிந்தது.

“மகன் இண்டைக்கு ஸ்கூலுக்குத்தான் போனாரா....?” என்று விசாரித்தபோது “வழக்கம் போல போயிருப்பார்...” என்று சொன்ன உபைதின் தாய் மேலும் ஏதோ சொல்லவேண்டும் என்பது போல பெண் பொலிஸ் பரிசோதகரின் முகத்தை பார்த்தாள்.

“என்னம்மா ஏதோ சொல்ல வேண்டும் போல நினைக்கிறீங்களே...?”

“யேஸ் மேம்.... இந்த ஊட்டுல இரவில தூங்குறதுக்கு உபைதுக்கு இடத்தட்டுப்பாடு... மேல் றூம் ரெண்டிலயும் என்ட மகளும் அவட ஹஸ்பண்டும் அவங்கட கைப்புள்ளயும் என்ட நானாவும் அவர்ட வைஃபும் தூங்குவாங்க.... கீழே நானும் உபைதிட வாப்பாவும் கதிரை செட்டிய அஜஸ்ட் பண்ணி வெச்சிட்டு தூங்குவம்... உபைத் பக்கத்து ஒழுங்கையில இருக்கிற அவர்ட க்ளாஸ் மேட்டோட வீட்டுக்கு முன்னமா ஒழுங்கையில இருந்து இரவு ஒருமணி வரையில படிச்சிட்டு... அந்தப் பையன்ட வீட்டிலேயே தூங்கி எழுந்து அங்க இருந்தே ஸ்கூல் போய் ஸ்கூல் விட்ட பிறகுதான் இஞ்ச வருவார் மேம்....” உபைத் பொலிசில் கொடுத்த வாக்குமூலமும் இப்போது தாய் தந்த வாக்குமூலமும் ஒன்றாகவிருந்தமையும் அவர்களின் வீட்டுச் சூழலும் உபைத் போதைப்பொருள் பாவனையிலோ அல்லது விநியோகத்திலோ ஈடுபடாத ஒரு அப்பாவிப் பையன்தான் என்பதை உறுதி செய்தது.

“மேம்... இந்த பிரச்சினை கொழும்பில் இருக்கிற குடியிருப்பு வீட்டுத் தோட்டங்கள்ள எங்களைப் போல ஏழைக் குடும்பங்கள் எல்லாத்திலயும் இருக்கு மேம்... என்ட தம்பிடீன் ஏஜா இருக்கச்செல்ல நாங்க பஞ்சிகாவத்த தோட்டத்திலதான் இருந்தம்.... அவர் மிகுந்து மாவத்தையில இருக்க ஸ்கூலுக்குதான் போனாரு... அந்த ஸ்கூள்ளயும் இடப் பிரச்சினை.... காலையிலயிருந்து பகல் ஒரு மணி வரைக்கும் அந்த பில்டிங்கில சிங்கள ஸ்கூல் நடக்கும்... தமிழ் மீடிய ஸ்கூள் பகல் ஒரு மணியிலிருந்து பின்னேரம் ஆறு மணி வரைக்கும் நடக்கும்... என்ட தம்பியும் இரவு பன்னிரெண்டு மணியிலிருந்து ரோட்டில நிண்டுட்டு விடிஞ்ச பிறகுதான் ஊட்டுக்கு வந்து பகல் பன்னிரெண்டு மணிவரைக்கும் படுப்பார்.... பிறகு எழுந்து பகல் ஒரு மணிக்கெல்லாம் ஸ்கூலுக்கு போவார்....” உபைதின் தாயின் பேச்சு பெண் பொலிஸ் பரிசோதகரை சஞ்சலத்துக்குள்ளாக்கிற்று.

“அம்மா இப்பிடிப் பிரச்சினையெல்லாம் உங்களுக்குகெல்லாம் கொழும்புத் தோட்டங்களில இருக்கு எண்டு எனக்கு இப்பதான் விளங்குது. அரசாங்கங்களும், சோசியல் சேவிஸ் செய்யுற சொசைட்டிகளும்தான் இதுக்கு முடிவு காணவேனும் அம்மா...” என்று சொன்ன பெண் பொலிஸ் பரிசோதகர் உபைதை அவனது தாயாரிடம் ஒப்படைத்துவிட்டு கலங்கிய கண்களுடன் பொலீஸ் நிலையத்தை நோக்கி புறப்பட்டார், ஒரு அப்பாவிப் பையனைத் தண்டிப்பதிலிருந்து காப்பாற்றிவிட்டேன் என்ற மன நிறைவுடன்.

❍❍❍

இராமாயணச் சிந்தனைகள் 7



# இராவணனுக்கு ஒற்றர்கள் இல்லையா?



தமிழ்மணி அகளங்கன்

## திருக்குறள்

தமிழ்மறை என்று போற்றப்படும் திருக் குறளில், ஒற்றரும் புகழ் நிறைந்த நீதி நூலும், அரசனுடைய இரண்டு கண்கள் என்று அரசன் அறிந்து தெளிந்தவனாக இருக்கவேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

**ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்**
**தெற்றென்க மன்னவன் கண்**

ஒற்றாடல் என்ற பெயரில் ஒரு தனி அதிகாரமே வகுத்து, பத்துக் குறள்களைத் திருவள்ளுவர் பாடியுள்ளார். ஒரு அரசனது சிறந்த ஆட்சிக்கு, பாதுகாப்பான ஆட்சிக்கு ஒற்றர்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை திருவள்ளுவரின் திருக்குறட் பாக்கள் சிறப்பாக விளக்கிநிற்கின்றன.

“எல்லாரிடத்தும் நிகழ்பவை எல்லாவற் றையும் எப்பொழுதும் ஒற்றரைக் கொண்டு விரைந்து அறிதல் அரசனுடைய தொழில்” என்றும். “ஒற்றர் வாயிலாக எல்லாரிடத்தும் நடப்ப வற்றை அறிந்து அவற்றின் பயனை ஆராய்ந் துணராத அரசனுக்கு வெற்றி அடைவதற்குரிய வழி வேறு இல்லை”. என்றும். “ஓர் ஒற்றன் அறிந்து வந்து சொன்ன செய்தியை மற்றுமோர் ஒற்றன் மூலம் அறிந்து இரண்டையும் ஆராய்ந்து உண்மையை அறிந்துகொள்ள வேண்டும்” என்றும் திருவள்ளுவர் கூறுகிறார்.

இராவணனுக்கு ஒற்றர்கள் இல்லையா? அல்லது ஒற்றர்கள் திறமை அற்றவர்களா? என்ற கேள்வி கம்பராமாயணத்தைப் படிக்கும்போது எழுகின்றது. இராவணனின் வீழ்ச்சிக்கு ஆற்றல் மிக்க ஒற்றர்கள் இல்லாமையும் ஒரு காரணமாக இருந்திருக்குமோ என்ற எண்ணமும் எழுகின்றது.

## கரன், தூஷணன், திரிசிரன்

அங்கங்கள் அறுபட்ட நிலையில் சூர்ப் பனகை அழுது புலம்பியவளாக தனது ஒன்றுவிட்ட சகோதரனும் தனக்குப் பாதுகா வலுக்காக இராவணனால் நியமிக்கப்பட்டிருந்த வனுமான கரன் என்பவனிடம் சென்று முறை யிடுகிறாள். அவனது பதின்நான்கு வீரர்கள் இராமனிடம் சென்று போர் புரிந்து இறக்கிறார்கள். பின் பதின்நான்கு சேனாதிபதிகள் பெரும் சேனைகளோடு சென்று இராமனை எதிர்க் கிறார்கள். அவர்களும் கொல்லப்பட, திரிசிரன் என்பவன் தன் சேனையோடு சென்று எதிர்க்கிறான். அவர்களும் கொல்லப்பட, தூஷணன் தன் சேனையோடு எதிர்க்கிறான், அவர்களும் கொல்லப்பட, கரன் பெரும் படையோடு எதிர்த்துப் போர்புரிய அவர்களும் கொல்லப்படுகின்றனர்.

## இராவணனின் ஒற்றர்கள்

இலக்குவனைச் சீதைக்குக் காவலாக்கிவிட்டு இராமன் தனி ஒருவனாக நின்று அறுபது இலட்சம் அரக்கர்களைக் கொன்றழித்ததாக கம்பன் சொல்கிறான். இதன்பின்தான் சூர்ப்பனகை இராவணனிடம் செல்கிறாள். கம்பராமாயணத் தின்படி சூர்ப்பனகை இராவணனிடம் நேரில் வந்து சொல்லும்வரையில் இராவணனுக்கு இவை எவையும் தெரிந்திருக்கவில்லை.

தனது தங்கைக்கு ஏற்பட்ட அவமானமோ, அவலமோ, தனது ஒன்றுவிட்ட சகோதரன் உள்ளிட்ட அறுபது இலட்சம் வீரர்கள் கொல்லப் பட்டதோ தெரியாமல் இராவணன் ஆட்சி புரிந்தான் என்பது நம்பக் கூடியதாகவா இருக்கிறது.? இராவணனது ஒற்றர்கள் எங்கே போயிருந்தார்கள்? என்ற கேள்வி எழுகிற தல்லவா. வான்மீகி இராமாயணப்படி அகம்பனன்

என்பவன் இராவணனுக்கு அச்செய்தியைத் தெரிவித்ததாக வான்மீகி சொல்கிறார்.

தங்கைக்கு ஏற்பட்ட அவமானத்தைத் தனக்கு ஏற்பட்ட அவமானமாகக் கருதாமல், தன் தம்பி முதல் சுற்றத்தாருக்கு அதுவும் தன் கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருந்த வீரர்களுக்கு ஏற்பட்ட பரிதாபத்தை உணராமல் இராவணன் வீணை வாசித்துக்கொண்டு களியாட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்திருப்பானா? அல்லது எதிர்த்துப் போர்செய்து பழிவாங்கச் சென்றிருப்பானா? இந்தச் செய்தியை இராவணன் எப்படி அறியாதிருந்தான்.

சூர்ப்பனகை மூலம் செய்தியை அறிந்தும் இராமனோடு போர் செய்து பழிதீர்க்க முடியாமற் போனமைக்கு என்ன காரணம். என்று இராவணன் சொல்கிறான். சீதை பற்றிய நினைப்பில் ஏற்பட்ட காமத்தீயில் எரிந்து கொண்டிருந்த இராவணன், சூர்ப்பனகையின் ஆலோசனைப்படி சீதையைக் கவர்ந்துவரத் திட்டமிட்டு மாரீசனை நாடுகிறான்.

தனது தங்கைக்குப் பெருந்துன்பத்தைச் செய்து தனது தம்பியர்களையும் பெரும் சேனையையும் அழித்தவர்கள் மானிடர்கள். அவர்கள் எனக்கு ஒப்பானவர்கள் இல்லாத காரணத்தால் அவர்களை எதிர்த்துப் போர் செய்து கொல்வது எனக்குப் பழியாகும். அதனால் அவர்களைப் பழி வாங்குவதற்காக இராமனின் மனைவியைக் கவர்ந்து பழி தீர்க்க விரும்புகிறேன் அதற்கு நீ துணை செய்ய வேண்டுமென்று கேட்கிறான்.

**வெப்பு அழியாது என் நெஞ்சம் உலந்தேன் விளிகின்றேன்.**
**ஒப்பு அழிவு என்றே போர் செயல் ஒல்லேன். உடன் வாழும்**
**துப்பு அழி செவ்வாய் வஞ்சியை வெளவத் துணை**
**கொண்டிட்டு**
**இப்பழி நின்னாற் தீரிய வந்தேன் இவண் என்றான்.**

''எனக்குச் சமனில்லாதவர்களாகிய அற்ப மனிதருடன் நான் போர் செய்ய மாட்டேன்'' என்று நாரத முனிவர்க்கு இராவணன் ஒரு சத்தியம் செய்து கொடுத்தாக இராமாயணம் சொல்கிறது. ''வாரணம் பொருத மார்பும்..'' என்று தொடங்குகின்ற பிரபலமான பாடலில் ''நாரத முனிவர்க் கேற்ப நயம்பட உரைத்த நாவும்'' தோற்றான் என்று இராவணன் இராமனிடம் தோற்றபோது கம்பன் சொல்கிறான் என்பர் உரையாசிரியர்.

ஆனால், கம்பன் அறநிலை - கோவை, வெளியிட்ட கம்பராமாயணம் இராமாவதாரம் யுத்தகாண்டம் - 1 என்ற நூலில் ''நாரத முனிவர் நன்று நன்று என்று ஏற்குமாறு சாமவேதத்தை இசைநயத்தோடு பாடிய நாவும்'' என்று எழுதப்பட்டுள்ளது.

ஆனால் இராவணன் சீதையைச் சிறை எடுத்ததற்கு முதற் காரணமும் முதன்மைக் காரணமும் சீதைமேல் இராவணன் கொண்ட தணிக்கமுடியாத பெருங்காமம்தான் என்று கம்பன் சொல்கிறான். கம்ப இராமாயணப்படி அதுதான் உண்மை. இராம இலக்குவரைப் பழிவாங்குவதுதான் முதன்மை நோக்கமாக இருந்திருந்தால் தான் போருக்குப் போகாது விட்டாலும் தனது சேனையை அனுப்பி இருக்கலாமே! ஏற்கனவே அவனது சேனை மனிதனான இராமனோடு போர் செய்து மடிந்திருக்கிறதே!

## தாடகை வதம்

கம்பன் தாடகையை இராவணனின் தாயின் தாய் என்று குறிப்பிடுகிறான். ஆனால் தாடகை இராவணனின் தாயாகிய கைகசியின் தாய் அல்ல. உறவு முறையில் தான் பாட்டி. தாடகை இயக்கர் குலத்தைச் சேர்ந்தவள். அங்கநாடு என்ற இடத்தில் வாழ்ந்த சத்சரன் என்பவனின் மகனான சுகேதுவின் மகள், இவளது கணவனின் பெயர் சுந்தன். இவன் அகத்திய முனிவரின் ஆசிரமச் சூழலில் மரங்களை அழித்தும் வேறு வகைகளிலும் அகத்தியருக்குக் கோபத்தை ஏற்படுத்தினான்.

அவனது அழிவுச் செயல்களைப் பொறுக்க முடியாத அகத்தியர் தனது பார்வையால் அவனை எரித்து அழித்தார். அதனைக்கண்டு கோபங் கொண்ட தாடகையும் அவளது புத்திரர் களும் அகத்தியரைக் கொல்ல வந்தபோது கோபங்கொண்ட அகத்தியர் அவர்களை அரக்கர்களாகிப் போகும்படி சபித்தார். அதனால் அரக்கர்களாக மாறிய அவர்கள் இராவணனின் தாய் கைகசியின் தந்தையாகிய சுமாலியிடம் அடைக்கலங்கோரி வந்தடைகின்றனர்.

அவன் மாரீசன், சுபாகு ஆகியோரைத் தன் பிள்ளைகள் போலக்கருதிப் பராமரிக்கிறான். அவர்களை சுமாலியின் மகளான கைகசி சகோதரர்களாக உறவு கொண்டாடுகிறாள். அதனால் தாடகை கைகசிக்குத் தாய்போல இருக்கிறாள். இராவணன் முதலியோர் தாடகையைப் பாட்டி என்றும் மாரீசன் சுபாகு ஆகியோரை

மாமன் முறை கொண்டும் அழைக்கிறார்கள். மாரீசன் தாடகையின் மகன் என்றும் சுபாகு சுந்தனின் சகோதரனான உபசுந்தனின் மகன் என்றும் வான்மீகி கூறுகின்றார். தாடகை இராவணனின் இரத்த உறவு வழிப்பாட்டி அல்ல.

இருப்பினும் கம்பன் சொல்வதுபோல தாய்வழி இரத்த உறவு கொண்ட பாட்டியாக இருந்தாலும் இல்லாது விட்டாலும் தனது கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருந்த தாடகையையும் அவளின் மகனும் தன் மாமனுமாகிய சுபாகுவை இராமன் கொன்று இன்னொரு மாமனாகிய மாரீசனைக் காயப் படுத்தித் துரத்தி தனது அரக்க சேனையை அழித்த செய்தியையும் இராவணன் எப்படி அறியாதிருந்தான். இராவணனின் ஒற்றர்கள் இந்தச்செய்தியை இராவணனுக்குச் சொல்ல வில்லையா? அப்படி முக்கியமற்ற செய்தியா இது.

இராவணன் இதை அறிந்திருந்தால் இராமனைப் பழிவாங்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருப்பானா? பின் மாய மானாக உருவெடுத்து வரும்படி மாரீசனிடம் உதவி கேட்டிருப்பானா? பாட்டியையும் தாய் மாமனையும் கொன்றவனைப் பழிவாங்குவதற்கு எது தடையாக இருந்தது. மனிதர்களோடு போர் செய்ய இராவணன் நேரடியாகச் செல்லாது விட்டாலும் தன் சேனைகளை அனுப்பி யிருக்கலாமே!.

அசோகவனத்தில் சீதையுடன் இராவணன் உரையாடும்போது சீதை சொல்கிறாள் "நீ என்கணவனுக்கும் என் தம்பிக்கும் பயந்துதானே என்னை வஞ்சனையாகச் சிறை எடுத்தாய்" என்று. அதற்கு இராவணன் சொல்கிறான் "உன் கணவனோடு நான் போர்செய்து அவனைக் கொன்று விட்டால் உனக்கு உயிர் போன்ற வனாக இருக்கின்ற உன் கணவனின் பிரி வாற்றாமல் நீயும் இறந்துவிடுவாய். அதனைத் தாங்கமுடியாதவனாகி நானும் இறந்துவிடுவேன். அதனால்தான் வஞ்சனையால்க் கவர்ந்தேன்" என்று.

தாடகை வதம் சீதை சிறை எடுப்புக்கு முன்னர் நடந்ததால் இராமனை இராவணன் கொல்வதில் எந்தப் பிரச்சனையும் இல்லையே! அப்படியிருக்க இராவணன் ஏன் இராமனைப் பழிவாங்காதிருந்தான்.

### காவல்த் தெய்வம்

அனுமான் ஆகாயமார்க்கமாகத் தாவிப் பாய்ந்துவந்து இலங்கை மாநகருக்கு வெளியே நின்று நகருக்குள் செல்ல வழிதேடுகிறான். மதில் வாசல் மிகுந்த காவலோடு காணப் படுகின்றது. அதனால் மதிலின்மேல் ஏறி உள்ளே புக முயல்கிறான். அப்போது இலங்காதேவி என்றும் இலங்கைமாதேவி என்றும் அழைக்கப்படுகின்ற இலங்கையின் காவல்த் தெய்வமாக இருக்கும் ஒருபெண் அனுமானை எதிர்த்துப் போர் செய்கிறாள். போரில் தோல்வியடைந்த இலங்காதேவி தான் பிரம்மதேவனின் கட்டளைப்படி இந் நகருக்குக் காவலாக இருந்ததாகவும் இன்றோடு அது நிறைவடைந்ததாகவும் கூறிச் செல்கிறாள்.

அனுமான் இலங்கை நகருக்குள் புகுந்து சீதையை அசோகவனத்தில் கண்டு உரையாடி சோலை மரங்களை அழித்து அட்டகாசம் செய்து பல காவல் வீரர்களைக் கொல்லும் வரையில் இராவணனுக்கு இவை எவையுமே தெரியாது. தனது மாநகரின் காவல்த்தெய்வம் அனுமானிடம் தோற்று தன் காவல்ப் பணியை விட்டுச் சென்றதும் தெரியாது. அப்படிஎன்றால் இராவணனின் ஒற்றர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்.?

### வாலி வதம்

சீதையைத் தேடி அனுமான் இலங்கைக்கு வந்து சீதையை அசோகவனத்தில் சந்தித்து பின் இராவணனின் மகன் அட்சய குமார னையும் ஐந்து சேனாதிபதிகளையும் கொன்று சோலைகளை அழித்து அட்டகாசம் செய்கிறான். பின் இராவணனது மூத்த குமாரனான இந்திரஜித் என்பவனால் கட்டி இழுத்துக் கொண்டு செல்லப்பட்டு இராவணன் முன் நிறுத்தப் படுகிறான்.

"நீ யார்?" என்று இராவணன் கேட்க, இராமனைப் பற்றிச் சொல்லி "தென் திசையில் சீதையைத் தேடும் பொறுப்பிலிருந்த வாலியின் மகனான அங்கதனின் தூதுவன் நான்" என் கிறான் அனுமான். வாலியின் பெயரைக் கேட்டதும் "வாலி சுகமாக இருக்கிறானா? அவனது இராச்சியம் நன்றாக இருக்கிறதா?" என்று ஆவலோடும் அக்கறையோடும் கேட்கிறான் இராவணன். இதனைக் கம்பன்,

**வாலி சேய் விடுத்த தூத!**
**வன்திறல் ஆய வாலி வலியன் கொல்!**
**அரசின் வாழ்க்கை நன்றுகொல்!**

என்று கேட்பதாகச் சொல்கிறான். அதற்கு அனுமான் பதில் சொல்லும் போது ''அஞ்சலை அரக்க! பார்விட்டு அந்தரம் அடைந்தான் அன்றே! வெஞ்சின வாலி மீளான். வாலும்போய் விளிந்ததன்றே!'' என்கிறான்.

''அரக்கனே! அஞ்சாதே! வாலி இறந்து விட்டான். கொடிய கோபங் கொண்டவனான வாலி இனித் திரும்பி வரமாட்டான். அவனது வாலும் போய்விட்டது.'' என்கிறான். இராவணனும் வாலியும் நண்பர்கள் என்று கம்பராமாயணம் சொல்கிறது.

இராவணன் வாலியுடன் போர்செய்ய விரும்பி அவன்முன் வந்து நின்றான். வாலிக்கு, தன் முன்னால் போர் செய்ய வந்து நிற்ப வனின் பாதிப்பலமும் பாதி வரங்களும் தாமாகவே வந்து சேர்ந்துவிடும் என்பதை இராவணன் அறியாதிருந்ததால் வாலி இலகு வாக இராவணனை வென்று தன் வாலில் கட்டிக்கொண்டு மலைக்கு மலை தாவி அட்ட திக்குகளுக்கும் சென்று சிவ பூசை செய்தானென்றும், அப்போது மலைகளிலே அடிபட்ட இராவணன் ஓயாது அழுதான் என்றும் கம்பன் சொல்கிறான். இதனால் இராவணனுக்கு வாலியின் வாலின் மேல் பயம் இருந்தது இனி அந்தப் பயம் தேவையில்லை என்று பரிகாசமாகச் சொல்கிறான் அனுமான்.

சிவபெருமான் வீற்றிருந்த திருக்கைலாய மலையைத் தோள்கொண்டு தூக்க முயன்ற போது, சிவபெருமான் தன் கால் விரலால் அழுத்த அதிலிருந்து விடுபட முடியாமல் இராவணன் நீண்ட காலங்கள் அதிலே அழுந்தி அழுதான் என்றும், இப்படி இரண்டு தடவைகள் ஓயாது அழுததால்தான் அவனுக்கு இராவணன் என்ற பெயர் வந்தது என்றும் இராமாயணம் சொல்கிறது. இராவணன் என்பதற்கு ஓயாது அழுதவன் என்பது பொருள் என்கின்றனர்.

வாலியின் வாலில் கட்டுண்ட இராவணனின் துன்பத்தைப் பார்த்து வாலி இராவணனுக்கு விடுதலை அளித்தான் என்றும் அதன் பின் இருவரும் நட்புப் பூண்டுகொண்டனர் என்றும் இராவணனது இராச்சியத்திற்கு வாலியே காவல் என்றும் கம்பன் சொல்கிறான்.

வாலியின் ''வால் செலாதவாய் அலது இராவணன் கோல் செலாது. அவன் குடை செலாது'' என்று அனுமான் இராமனுக்குச் சொல்லி யிருக்கிறான். அதாவது இராவணனது இராச்சிய பரிபாலனம் வாலியின் பாதுகாப்பிலேயே நடை பெறுகிறது என்று சொல்லி வாலியைக் கொல்ல வேண்டிய அவசியத்தை இராமனுக்கு அனுமான் சொல்வதாகக் கம்பன் பாடியுள்ளான்.

கம்பனின் கூற்றுப்படி, அந்த நண்பனான வாலியை, தனது இராச்சியத்துக்குப் பெருங் காவலாக இருந்த வாலியை இராமன் கொன்ற சம்பவம் இராவணனுக்குத் தெரிந்திருக்க வில்லை. வாலியைக் கொன்றபின் கார் காலம் முடியும்வரை சுக்கிரீவன் சீதையைத் தேடும் முயற்சியில் இறங்கவில்லை என்று கம்பன் சொல்கிறான். கார்காலம் என்பது தமிழ்க் கணக்குப்படி இரண்டு மாதங்கள்தான். ஆனால் கம்பனோ நான்கு மாதங்கள் இராமனோடு சுக்கிரீவன் முதலானோர் தங்கியிருந்து அதன்பின்பே சீதையைத் தேடப் புறப்பட்டதாக இராவணனிடம் சொல்கிறான்.

''ஆயவன் தன்னொடு ஆண்டுத் திங்கள் ஓர் நான்கு வைகி..." அதாவது நான்கு மாதங்கள் தங்கியிருந்து அதன்பின்பே தேடத் தொடங்கினோம் என்று அனுமான் இராவணனுக்குச் சொல்வதாகக் கம்பன் சொல்கிறான். தனது இராச்சியத்துக்குக் காவலாக இருந்தவனும் தனது நண்பனுமாகிய வாலி கொல்லப்பட்ட சம்பவத்தை நான்கு மாதங்கள் கழித்தும் அறியாதவனாக இராவணன் இருந்திருப்பானா? இராவணனின் ஒற்றர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? அனுமான் மூலமாக அறிந்த பின்னாவது இராமனைப் பழிவாங்கப் புறப்பட்டானா? இதுதான் நட்புக்கு இலக்கணமா? மூவுலகையும் ஆளும் முறைமை இதுதானா?

## இராவணன் போரை விரும்பினான்

சீதையைத் தேடி இலங்கைக்குள் வந்து தன் மகன் அக்கனையும் தன் ஐந்து சேனாதிபதி களையும் பெருஞ்சேனையையும் அழித்த அனுமானோடு போர் செய்யத் தன் மகன் இந்திரஜித்தையும் பெரும் சேனையையும் அனுப்புகிறான் இராவணன். குரங்குகள் மனிதர்களைவிட அற்ப சாதியினர் இல்லையா?

குரங்குகளை வெல்வது கொல்வது பழியாகும் என்று கருதி இராவணன் எதிர்த்துப் போர் செய்யாமல் இருக்கவில்லையே!

அனுமான் இலங்கையை அழித்தபின் தனது அமைச்சர்களோடும் தம்பியர்கள் புத்திரர்களோடும் மந்திராலோசனை நடத்துகிறான். விபீடணனைத் தவிர கும்பகர்ணன் உட்பட அனைவருமே ஒத்த கருத்தாக இராமனைத் தேடிச்சென்று போர் செய்ய வேண்டுமென்றே சொல்கிறார்கள். இராவணனும் அக்கருத்தை வரவேற்கிறான்.

கும்பகர்ணன் சொல்கிறான்

**ஊறுபடை ஊறுவதன் முன்னம் ஒரு நாளே**
**ஏறுகடல் ஏறிநரர் வானரரை எல்லாம்**
**வேறுபெய ராதவகை வேரோடும் அடங்க**
**நூறுவதுவே கருமம்...**

"அந்தப் பகைவர்களின் மிகுந்த படை இங்கு பெருகி வருவதற்கு முன்பே ஒரே நாளில் இப்பெரிய கடலைக் கடந்து சென்று அந்த மனிதர்களையும் குரங்குகளையும் எல்லாம் வேறு இடங்களுக்குப் பெயர்ந்து செல்ல இயலாதபடி வேருடன் முழுவதையும் அழித்தொழிப்பதே நாம் செய்யவேண்டிய செயலாகும்" என்று கும்பகர்ணன் சொல்ல இராவணன் சொல்கிறான்.

**நன்று உரை செய்தாய்.! குமர! நான் அது நினைந்தேன்.**
**ஒன்றும் இனி ஆய்தல் பழுது. ஒன்னலரை எல்லாம்.**
**கொன்று பெயர்வோம். நமர் கொடிப்படையை எல்லாம்**
**இன்று எழுக! என்க!**

"தம்பி! நல்லதே சொன்னாய். நானும் அதைத்தான் நினைத்தேன். இனி ஒன்றும் ஆராய்வது தீமையாகும். நமது பகைவர்களை எல்லாம் கொன்று திரும்புவோம், நமது அரக்கர்களின் கொடிகளைத்தாங்கிய படையை எல்லாம் இன்றே போருக்கு எழுக என ஆணையிடுவாயாக!" என்கிறான் இராவணன். ஆனால் ஏன் இராமனை எதிர்த்துப் போருக்குச் செல்லவில்லை.

மனிதர்களோடு போர் செய்யமாட்டேன் என்று நாரத முனிவருக்கு வாக்குக் கொடுத்தது உண்மையானால் இப்படி மனிதர்களோடு போர் செய்ய இராவணன் தயாராகி இருப்பானா?

இராமன் சேனையோடு வந்து எதிர்த்தபோது முதல் நாளில் இராவணன் தானே, தன் சேனையோடு இராமனான மனிதனை எதிர்த்துப் போருக்குப் போகிறான். அப்போது இராமனை இராவணன் அற்ப மானுடன் என்று எண்ணவில்லையா? பழிவந்து சேருமே என்று எண்ணவில்லையா?

## விசுவாசமற்ற தொழிலாளிகள்

நித்திரை செய்துகொண்டிருந்த கும்பகர்ணனை இராவணனது பணியாளர்கள் எழுப்புகின்றனர். அந்தச் சந்தர்ப்பத்திலே அவர்கள் சொல்லி எழுப்புவதாகக் கம்பன் பாடிய பாடல்கள் இரண்டைப் பார்ப்போம்.

**உறங்குகின்ற கும்பகன்ன உங்கள்மாய வாழ்வெலாம்**
**இறங்குகின்ற தின்றுகாண் எழுந்திராய் எழுந்திராய்**
**கறங்குபோல வில்பிடித்த காலதூதர் கையிலே**
**உறங்குவாய்! உறங்குவாய்! இனிக்கிடந் துறங்குவாய்.**
**(45)**

இராவணனது பணியாளர்கள் இப்படிச் சொல்லியா எழுப்புவார்கள். எந்த நாட்டிலாவது அரசனது பணியாளர்கள் அரசனது சகோதரனை போருக்குப் போவதற்கு இப்படிச் சொல்லியா எழுப்புவார்கள். உங்கள் மாய வாழ்வு என்றும் உங்கள் எதிரிகளின் வில்லுக்கு இரையாகப் போகிறாய் அங்கே போய்ச் செத்துத் தூங்கு என்றும் சொல்லியா எழுப்புவார்கள்.

இராமனின் படையைச் சேர்ந்தவர்கள் கும்பகர்ணனை எழுப்புவது போல அல்லவா சொல்லி எழுப்புகிறார்கள். இராவணனின் பணியாளர்கள் உங்கள் மாய வாழ்வு என்றா சொல்வார்கள், எங்கள் வாழ்வு என்றல்லவா சொல்வார்கள். தங்களது தலைவனது வாழ்வை மாயவாழ்வு என்று பரிகசித்தா தலைவனின் தம்பியை எழுப்புவார்கள். இராவணன் செய்த காரியம் அவர்களுக்குப் பிடிக்காத காரியமாக இருந்திருந்தாலும் வெளிப்படையாகச் சொல்ல முடியுமா? இராவணனது பணியாளர்கள் நாட்டுப் பற்றில்லாதவர்களாக இராவணனுக்கு அந்நியப்பட்டவர்களாகக் கேவலமானவர்களாகவா இருந்தார்கள்.?

**என்றும் ஈறிலா அரக்கர் இன்பமாய வாழ்வெலாம்**
**சென்று தீய நும்முனோன் தெரிந்து தீமை தேடினான்.**
**இன்று இறத்தல் திண்ணமாக இன்னும் உன் உறக்கமே**
**அன்று அலைத்த செங்கையால் அலைத்து அலைத்து**
**உணர்த்தினார்(46)**

என்றும் அழிவில்லாத அரக்கர்களின் இன்பமான மாயவாழ்வு எல்லாம் சென்று அழிந்துபோக உனது மூத்தவன் தெரிந்து கொண்டே தீமையைச் செய்து அழிவைத் தேடிக்

கொண்டான், இன்று நீ இறப்பது உறுதியாகி விட்டது. இன்னும் உனக்கு உறக்கம் தேவையா? என்று சொல்லியா எழுப்புவார்கள்? மாய வாழ்வு என்றும் தாங்கள் வேறு யாரோ போலவும் கும்பகர்ணனை வேறு யாரோ போலவும் நினைத்துக் கொண்டு எழுப்புவதுபோலவும் சொல்லியா எழுப்புவார்கள்.?

கம்பராமாயணத்தில் பதினொரு பாடல்கள் மட்டுமே எல்லாப் பிரதிகளிலும் ஒரேமாதிரி உள்ளன என்று அறிஞர்கள் ஆராய்ந்து வெளிப் படுத்தியுள்ளனர். ஏனையவற்றில் ஒரு எழுத்தோ, ஒரு சொல்லோ, சொற்தொடரோ கூட மாறியி ருக்கின்றன, இதனைப் **பாடபேதங்கள்** என்று தமிழ் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

கம்பன் பாடாத அல்ல பாடியிருக்க முடியாது என்று கருதப்பட்ட பல பாடல்கள் இடைச்செருகல்களாக கம்பராமாயணத்திலே புகுத்தப்பட்டிருக்கின்றன என்று கண்டு கொண்டு அப்பாடல்களைப் பிரித்தெடுத்து மிகைப் பாடல்கள் என்று சொல்லி டி.கே.சிதம்பரநாத முதலியார் இனங்காட்டியுள்ளார்.

வில்லி பாரதத்திலும் கம்ப இராமாயணத் திலும் இத்தகைய பாடல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. வெள்ளியம்பலத் தம்பிரான் என்ற புலவர் தனது சீடர்களுக்கு கம்பராமாய ணத்தையும், வில்லி பாரதத்தையும் கற்பித்த போது, தான் சில பாடல்களை இயற்றி அவர்களின் பாடல்களுக்கு இடையில் செருகி மாணவர் களை ஏடுகளில் எழுதச் செய்ய அவை கம்பராமாயணப் பாடல்களாகவும் வில்லி பாரதப் பாடல்களாகவும் பரவிவிட்டன என்று சொல்லி அவற்றை ***வெள்ளிப்பாடல்கள்*** என்று பிரித்துள்ளார்கள். இன்னும் பிரிக்க வேண்டிய பல பாடல்கள் உள்ளன.

“என்றும் ஈறிலா அரக்கர்.." என்று தொடங் கும் பாடல் கம்பன் அறநிலை - கோவை வெளியிட்ட கம்பராமாயணம் இராமாவதாரம் - யுத்தகாண்டம் தொகுதி - 1இல் மிகைப் பாடலாகக் காட்டப்பட்டுள்ளது.

இராவணன் முதல் நாள் போர்புரிந்து தோல்வியுற்றுத திரும்பியதைச் சொல்கின்ற பாடலில் வரும் “வெறுங்கையோடு இலங்கை புக்கான்” என்ற வரி “வெறுங்கையே மீண்டு போனான்” என்று மாற்றப்பட்டுள்ளது.

இப்படிப் பல கேள்விகள் என்மனத்தில் எழுகின்றன. இன்னும்பல செய்திகள் கம்ப ராமாயணத்தில் உள்ளன.

❍❍❍

# நன்றி



சாஹித்யரத்னா தி. ஞானசேகரனின் மறைவினையடுத்து அஞ்சலி நிகழ்வுகள், இலங்கையிலும், உலகளாவிய ரீதியிலும் தொடர்ந்தும் நடந்த வண்ணம் உள்ளன. பலரும் நிகழ்வுகளை நடத்துவதற்கு எம்மிடம் திகதிகளை கேட்டவண்ணம் உள்ளனர். மேலும், நேரடியாகவும், தொலைபேசி – மின் னஞ்சல் – அஞ்சல் வாயிலாகவும் அஞ்சலிச் செய்திகள் தொடர்ந்தும் எமக்குக் கிடைத்தவண்ணம் உள்ளன. தமது தோள்கொடுத்து துயரில் பங்கேற்கும் அனைவருக்கும் எமது அன்புடன்கூடிய பணிவான நன்றி.

அத்துடன் ஞானசேகரன் குறித்த அஞ்சலிக்குறிப்புகள், கவிதைகள், கட்டுரைகள் என அன்னார் பற்றிய விடயங்களைப் பலரும் எமக்கு அனுப்புயுள்ளமை மன நெகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. நாம் சென்ற இதழில் குறிப்பிட்டதற்கு அமைய ஓராண்டு நிறைவில் சிறப்புமலர் ஒன்று தயாரிக்கும் எண்ணத்தில் உள்ளோம். பொருத்தம்கண்டு உள்ளடக்குவோம்.

அனைவருக்கும் மீண்டுமொருமுறை நன்றி.

❍❍❍



## சிறுகதை

# கடைசி வரை நின்று விடை கொடுத்தவன்

அன்று பல்கலைக்கழகத்தில் பொறியியல் பாடநெறி கற்கும் மாணவர்களின் இரண்டாம் தவணைக்குரிய ஒவ்வொருக்கும் தனித்தனியாக நடத்தப்படும் 'வைவா' என அழைக்கப்படும் வாய்மொழிப் பரீட்சை. வேகவேகமாய் வந்து மண்டபத்துள் நுழையமுயன்ற ஆகிப்ஜ தடுக்கிறது பேராசிரியர் ஃபைசலின் குரல். "நீ இருபது நிமிஷத்துக்கும் மேல லேட்டா வந்திருக்கிறாய். இப்போ உன்னை உள்ளே விடமுடியாது," குளிர்ச்சியான குரலாக இருந்தாலும் அவரின் உதட்டின் ஓரத்தில் ஒரு மந்தகாச சிரிப்பு.

அந்த சிரிப்பு, விதிகளை மீறிய ஒருவரை தண்டிக்கும் அகங்கார மகிழ்ச்சியினதும் தன்னைவிட கீழானவர்மீது அதிகாரம் செலுத்தும் அட்டகாச பெருமையினதும் குறியீடாக பட்டது.

"வெரி சொரி சேர். ரோட் எல்லாம் புளொக்காக இருந்தது. ஷாஹ்பாக்-லிருந்து நான் ஓடி ஓடி வந்தேன்," என்று களைப்பால் பொங்கும் மூச்சை சமாளிக்க முயன்றபடி ஆகிப் சொன்னான்.

"நாமெல்லாம் டாக்காவில்தான் வாழ்கிறோம், மிஸ்டர்! இங்குள்ள ட்ராஃபிக் புதிய விஷயமில்லை. மற்றவர்களை பார். எல்லாம் எப்படி நேரத்துக்கு வந்திருக்காங்க?" என்று பேராசிரியர் ஃபைசல் ஓரக்கண்ணால் பார்த்தார்.

"மன்னிக்கவும், சேர். இந்த செமஸ்டர்ல இதுதான் முதல் தடவை நான் தாமதமாக வர்றது. எங்க வீட்டுல ஒருத்தர் இறந்துட்டாங்க. அதுக்கான இறுதி கிரியை முடியமட்டும் இருக்க வேண்டியானது..." என்று ஆகிப் மெதுவாகச் சொன்னான்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளை பேராசிரியர் ஃபைசல் வெறுத்தார். குற்ற உணர்ச்சியோடு ஒருவன் தன்னை மன்னிக்க கோருவதும் அவன்மீது அனுதாபம் அல்லது ஒத்துணர்வு கொள்வதும் அதிகாரம் கொண்ட ஒருவருக்கு அவை பலவீனங்கள் என நம்புபவராக இருந்தார். அதனால் கடுமையாக இருப்பதையே சுபாவமாக்கிக் கொண்டிருந்தார்.

என்றாலும் "உள்ளே வா," என்று சற்றே மென்மையாகச் சொன்னார்.

"ஆனா உனக்கு இன்று ஹாப் டே என்று தான் வரவு பதியப்படும். அது மட்டுமல்ல... வைவா மற்ற எல்லாருக்கும் முடிந்தப்பிறகு தான் உனக்கு... அது தான் ரூல்ஸ். விதிகளை நான் மீறமுடியாது."




**ஹசிப் உர் ரஷீத் இப்தி**
**(பங்களாதேஷ் ஆங்கில எழுத்தாளர்)**



**தமிழில்**
**சு.முரளிதரன்**

“விளங்குது, சேர்,’’ என்று ஆகிப் மெதுவாகச் சிரித்தான்.

அவன் கண்களின்கீழ் கருமையான இரத்தப் புள்ளிகள். கண்கள் ஆழமாக உள்நோக்கி சென்றுவிட்டது போல. முகம் நீர்ச்சத்து இழந்த வெளிரிய நீலநிறம். ஆனால், பேராசிரியர் ஃபைசலுக்கு அது புதுசில்லை. 23 ஆண்டுகளாக பொறியியல் மாணவர்களுக்கு கற்பித்துக் கொண்டிருக்கின்றார்.. ஆகிப் கொண்டிருந்த அழுக்கடைந்த கோலம் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டுத்தெரிவதை அவர் உணர்ந்து கொண்டதாக தெரியவில்லை..

மூன்று மணிநேரத்திற்குப் பிறகு ஆகிப்பின் முறை வந்தது. பேராசிரியர் ஃபைசல் சோர்வடைந்திருந்தார். இந்த மாதிரியான சந்தர்ப் பங்களில் மன அழுத்தத்தில் இருக்கும் பட்டதாரி மாணவர்களை அவமானப்படுத்தப்படும்போது அவர்களின் முகங்களில் தோன்றும் கிலே சத்தை அவர் ரசிப்பவராக இருப்பார், ஆனால் அன்று அது ஒரு நீண்ட அமர்வாக இருந்தது. ஆகிப்பின் நிலையை உணர்ந்து சோதனையை வினாக்களை சுலபமாக்கினாரோ தெரியவில்லை. அந்தோ பரிதாபம். அவன் குடும்பத்தில ஓரிழப்பு!

ஆகிப்பினால் சில கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியவில்லை.

ஆனால், அவன் முகத்தில் அது குறித்த அவ மானமோ, பயமோ, ஏமாற்றமோ, தொய்வோ இல்லை.

அது பேராசிரியர் ஃபைசலுக்கு அது சலிப்பைத் தந்தது. மாணவர்களுக்கு எத்தகு குடைச்சல் கொடுத்தும் அவர்கள் அச்சங்கொண்ட சலனத்தை வெளிப்படுத்த மறுப்பதான சமிக்ஞையில் ஒருவர் தான் ஆசுவாசம் கொள்ளமுடியுமா?

“நான் உன்கிட்ட சுலபமான கேள்விகளை கேட்டேன், எப்படியோ நீ அவற்றை பிரச்சனையாக எடுத்து குழம்பிக்கொண்டாய்”. பேராசிரியர் ஃபைசல் சிரித்தார், பாடவிடயங்களை படித்து புரிந்துகொள்ள முயற்சி செய்வதைவிட புரிந்துகொள்ளாமல் இருப்பதற்கு தீவிர முயற்சி எடுத்திருப்பாய் பால. ஆகிப். சரி நீ கிளம்பலாம்.

“மன்னிக்கவும், சேர்... கொஞ்சம் மனசு அலை பாய்ந்தபடி இருந்தது. ஏனென்றால் இதுக்குப் பிறகும் நான் ஒரு ஜனாசாவுக்கு போகணும்,’’ என்றான் ஆகிப்.

பேராசிரியர் ஃபைசல் அதற்காக எதுவும் சொல்வதற்கு சிரத்தை கொள்ளவில்லை. ஆகிப்பை அந்த வாய்மொழிப் பரீட்சையில் சித்தியடையாமல் செய்துவிட்ட ஒரு சிறிய குற்ற உணர்வு அவரை அருட்டியது. ஒருவேளை இவ்வளவு கடுமையாக இருந்திருக்கக்கூடாதோ?. தங்கள் ஆசிரியர்களின் தொடர்ச்சியான நிந்தை களுக்கு உட்படுத்தப்பட்ட பிறகு, மாணவர்கள் அந்த ஆசிரியர்களிடமிருந்து ஒருவித அனுதா பத்தைப் பெற்றுக்கொள்வார்களோ? என்னவோ.

“யாருடைய ஜனாசா?” என்று கோப்புகளை ஒழுங்குபடுத்திக்கொண்டே கேட்டார். கண் தொடர்பு இல்லாத, போலியான அக்கறை தொனித்தது. அதை மட்டும்தான் குறைந்தபட்சம் அந்த பேராசிரியருக்கு செய்யக்கூடியதாக இருந்தது.

**கதையில் தனது மரண சடங்குக்குதானே போகப்போவதாக ஆகிப் சொல்வது தான் அதிரடி திருப்பமாக அமைகின்றது. அவனது ஜனாசா என்பது உடல் ரீதியான மரணத்துக்கு முன்னாலான உணர்வு மரணமென பொருள் கொள்ளலாம். வெள்ளைத் துணியால் தன்னைச் சுற்றிக்கொள்வது தற்கொலையாகவோ அல்லது முழு மனவெழுச்சி முடக்கமாகவோ இருக்கலாம். கல்வி ரீதியாக தன் அதிகாரங்களால் அழுத்தங்களை சுமக்க வைக்கும் சூழமைவில் ஒரு வெடிப்பை ஏற்படுத்த பிறழ் உலக புனைகதைகள்** (dystopian fictions) **வகைக்குள் அடங்கத்தக்கதான இந்த கதையை படைத்துள்ளார். கதை முடிவில்** He was late for a funeral **என்பதை அவன் இறுதிச் சடங்கிற்கு தாமதமாகிவிட்டான் என நேரடியாக மொழிபெயர்ப்பு செய்தாலும் ஆகிப் வாய்மொழி பரீட்சைக்கு தாமதமாக வருவதைக் கொண்டும் ஆங்கிலத்தில்** “Late for your own funeral” **என்ற மரபுத் தொடர் தரும் பொருள் கொண்டும் நோக்க வேண்டுமே எனத்தோன்றுகிறது.**

(மொழிபெயர்ப்பாளர்)



# உறவின் பிழைக்கு தனிமையின் தண்டனை

அந்தப் பயணம் முடியவில்லை,
சோர்ந்த பாதம் சுமந்த செருப்பில்
ஒத்த செருப்பு அறுந்தே போனது.

அப்பிடி என்ன கஷ்ரம் அனுபவித்ததோ!?
தாங்காமல் பாதியிலே நின்றது
– ஒத்தச் செருப்பு.
அதென்னவோ, ஒத்தச் செருப்பே அறுந்தது
பாவம் மத்தச் செருப்பு தனிமையில்.

அந்த ஒத்தச் செருப்பை வைத்து
பயணத்தை தொடர முடியுமா?
அல்லது கால் வலிக்கிறது என
மற்ற காலில் மாத்திப் போடத்தான் முடியுமா?

அறுந்த செருப்புக்கு ஊசி குத்தி
நடக்க முயன்றேன்,
எந்தப் பயனும் இல்லை.
ஒத்த செருப்பு செய்த பிழைக்கு
மத்தச் செருப்புக்கு தண்டனை
– வேலிக் கம்பியில்.

அறுந்த செருப்பின் உறவின் பிழைக்கு,
மத்தச் செருப்பிற்கு தனிமையின் தண்டனை.
இரண்டு காலின் வலியில்
ஒற்றை பயணம் நிறைவு.



**தேன்தமிழினி**
பேராதனைப் பல்கலைக்கழக
இரண்டாம் ஆண்டு மாணவி.

"என்னோடது, சேர்," என்று எழுந்து நின்றான் ஆகிப். "மக்ரிப் தொழுகைக்குப் பிறகு பல்கலைக் கழக மத்திய பள்ளிவாசலில். வர முடிந்தால் வாருங்க… ரொம்ப பெருமையாக இருக்கும்."

அந்தச் சொற்களை கேட்டதும் பேராசிரியர் ஃபைசல் ஒரு பீதிச் சலனத்தோடு அவனைப் பார்த்தார். இது கடந்த 23 ஆண்டுகளில் எப்போதும் யாரையும் பார்த்திருக்காத பார்வை. முதன் முறையாக மெய்மை பூரித்துப் பார்த்தார். அவர் தனது போராடும் மாணவர்களில் ஒருவனின் கண்களைப் பார்த்தார், அவைகளிடம் அவமானத் தையோ அல்லது அவஸ்தையையோ காண முயற்சிக்கவில்லை. அப்படி நோக்கிய போது அங்கே இருந்தது

ஒரு முடிவில்லா இருள். வேறு ஒருவரிலும் இதுவரை கண்டிருக்காத இருள்.

அந்த இருளுக்கு பேராசிரியரின் கருணை கூர்வோ பச்சாதாபமோ தேவையில்லை.

அதற்கு ஒரு நல்ல இரவு உறக்கம் மட்டும் போதும். அதிலிருந்து மீண்டும் எழுந்திருக்க வேண்டாம் என்ற அளவுக்கு.

பேராசிரியர் ஃபைசலுக்கு அவனின் வெற்று கண் குழிகளிலிருந்து தனது பார்வையை விடுவித்துக்கொள்ள முடிவதாக இல்லை. யாருமற்ற கழிப்பறைகளைக் கொண்ட ஒரு கூடத்தில் குழந்தை ஒன்று விம்மிவிம்மி அழும் எதிரொலியை அவரால் கேட்க முடிந்தது. ஆயிரம் அலறல்கள், ஒரு மில்லியன் அழுகை கள் - அவை அனைத்தும் பேராசிரியர் ஃபைசலின் காதுகளுக்குள் ஆழமாக ஒலித்துக் கொண்டே இருந்தன. அவர் காதுகளை மூடிக் கொண்டார், ஆனால் யாருமற்ற கழிப்பறைகள் கொண்ட கூடத்தில் ஒற்றையாய் அழும் அந்த ஒரே குரலை மட்டுமே அவருக்குக் கேட்க முடிந்ததாக இருந்தது.

ஆகிப் தனது களிசானின் பின்பக்க பையி லிருந்து இருந்து ஒரு வெள்ளைத் துணியை உருவி எடுத்தான். அதை தன் உடலில் சுற்றிக் கொண்டான்.

அவன் இறுதிச் சடங்கிற்கு தாமதமாகி விட்டான். *(He was late for a funeral)*

❍❍❍

# முதலமைச்சரை வாழ்த்தி...

விமர்சனங்களாலும்
வீண்பழிகளாலும் என
எவற்றினாலும் வீழ்ந்துவிடாத
இளையபுறா, அது..!

போர்வைக்குள் பதுங்கியிருந்த
ஒரு புறாவின் கனவுகள், இப்ப
பருந்துகளாய் வட்டமிடுகின்றன...

இன்னும் நிறைய கனவுகள்
அந்த புறாவுக்குள் இருக்கும், அவை
ராஜாளிகளாய் பறந்தாலும்
ஆச்சரியப்பட ஏதுமில்லை..!

ஒரு புறாவை
கடித்து குதறிய அத்தனையும்
கோழிகளும் கோட்டானுகளுமல்லவே
முதலைகளும்,
ஓநாய்களும்,
கரடி,
கழுதைப்புலிகளும்,
தேவாங்குகளுமே..!

சின்னப்புறாதானே..! என்ற நினைப்பு
அவைகளுக்குள்..!

இனி
அந்தப்புறா
ஒரு ராஜாளியாய் பறந்து
ஆச்சரியமான புதிர்களை அவிழ்த்து
அதிசயம் காட்டினாலும்
அதிலேதும் ஆச்சரியமில்லைத்தான்..!

புறா,
சமாதானத்தின் குறியீடு என்பதும்
ஆச்சரியம்தான்..!

புறாவை
அதே முதலைகளும்
அதே ஓநாய்களும்
அதே கரடிகளும்
அதே கழுதைப்புலிகளும்
அதே தேவாங்குகளும்
தேடத்தொடங்கிவிட்டன அதிசயமாய்..!

தீக்குச்சித்தணலாய்
காலடியில் ஒதுக்கியவர்களும்
அண்ணாந்து பார்க்க தொடங்கினர்,
அந்தப்புறா
நட்சத்திரமாய்
மின்னிக்கொண்டிருந்தது..!

சூரியனை காட்டிலும்
நட்சத்திரம் பெரியது எனும்
பெரிய மெய்யினை
மெய்யாகவே நம்பலாம்..!

சமரபாகு **சி. உதயகுமார்**
(வல்வெட்டித்துறை - யாழ்ப்பாணம்)

சிறுகதை



# திசைமாறிய பறவைகள்



கலாபூஷணம், கலைக்குரிசில்
**என். தியாகராசா**
(வவுனியா)

"ஏன் நான் இண்டைக்கு நேரத்துக்கு ஸ்கூலுக்குப் போறதில்லையே? நீ உங்கை என்ன பண்ணிக்கொண்டு நிக்கிறாய்?" என்று அவசரப் பட்டான் அரவிந்தன்.

"இந்தா வந்திட்டன். கொஞ்சம் பொறுங்கோ. எனக்கும் அவசரம்தான்" என்றாள் கோமளா.

அரவிந்தனுக்கு இன்று அவனது வகுப்பு மாணவர்களுக்கு கணித பாடம் மாதாந்தப் பரீட்சை வைக்கவேண்டிய அவசரம்.

கோமளாவுக்கு இன்று அவவுடைய வகுப்பு மாணவர்களின் சரஸ்வதி பூசை. இன்றைக்கு மூன்றாம் நாள். புதிதாக எல்லாச் சோடனைகளுடனும் மண்டபத்தை அழகு படுத்தவேண்டும். பதில் அதிபர் இன்று பூசையில் கலந்துகொள்வார். நேரத்துக்கு பூசையை முடித்துக் கொண்டு படிப்பித் தலைத் தொடங்க வேண்டும். அதிபரின் கட்டளை கடுமையானது.

வீட்டின் தலை வாசலுக்கு அருகிலே அரவிந்தன் மோட்டார்ச் சைக்கிளில் (Motor bike) இருந்து கொண்டு, வீட்டு வாசலையே பார்த்துக் கொண்டிருந்தான். 'பிரசாந்' ஸ்கூல் பாக்கை (School Bag) முதுகிலே கொழுவிக்கொண்டு மோட்டார்ச் சைக்கிளின் பக்கத்தில் ஆயத்தமாக நின்றான்.

கோமளா, வீட்டு வாசல்படிகளில் மெதுவாக இறங்கி வெளியே வந்து கொண்டிருந்தாள். அரவிந்தன் ஒருகணம் அசந்துவிட்டான். 'பளிச் பளிச்' என்று மின்னல் அடித்ததுபோல் இருந்தது அவனுக்கு "என்ன சரஸ்வதி பூசைக்குப் போறியோ? அல்லது சின்னத்திரை சூட்டிங்குக்குப் (shooting) போறியோ?" என்றான் கிண்டலாக.

புதிய நூல்சேலை கட்டி, இன்று புதுவிதமாக இரண்டு பின்னல் பின்னி, ஒன்றை முன்னே மார்பிலும் மற்றதை பின்னே முதுகிலும் தொங்க விட்டு, தோளை முட்டும் அளவுக்கு காதிலே சிமிக்கியும், பெரிய வட்டத்தோடும் போட்டு, கழுத்தை நிறைத்துக் கொள்ள கல்லுப்பதித்த தாலிக் கொடியும், வெள்ளைமுத்துச் சங்கிலியும் போட்டு, வலது கையிலே ஆறு சோடி காப்புக்கள், இடது கையிலே அகலமான தங்கச் கைச்செயின், (chain) மணிக்கூடு, இரண்டு கை விரல்களிலும் இவ்விரண்டாக நான்கு மோதிரங்கள். கால்களில் பெரிய வெள்ளிச் சங்கிலிகள், கால் விரல்களில் மெட்டி, இத்தியாதிகளோடு, இன்று புதுவிதமாக நடு நெற்றிக் குங்குமத்துக்கு மேலதிகமாக, அதற்கு மேலே உச்சி தொடங்கும் இடத்திலும் ஒரு பெரிய குங்கமப் பொட்டும் வைத்தவளாக சர்வ அலங்காரங்களோடும் கோமளா வந்தாள்.

“இந்தா இவளை ஒருக்கால் கொஞ்சம் சமாதானப் படுத்திப் போட்டுப் போ கத்துறாள். இனி நீ பின்நேரம் வரும்வரைக்கும் என்ரை பாடு பெரும் பாடுதான்” என்று சொல்லிக்கொண்டு இடுப்பில் ஒரு பெண் குழந்தையோடு குசினிக் குள் இருந்து வெளியே வந்தாள் கோமளா வின் தாய் பாக்கியம்.

“அன்னநடை நடந்தது போதும். கெதியா வா, ஸ்கூலுக்கு நேரமெல்லே போட்டுது” என்று மீண்டும் அவசரப்படுத்தினான் அரவிந்தன்.

“ஐயோ பொறுங்கோ *handbag*ஐ மறந் திட்டன்” என்று சொல்லிக் கொண்டு, தாயிட மிருந்து பிள்ளையையும் வாங்கிக் கொண்டு, வீட்டுக்குள் ஓடினாள் கோமளா.

அப்போது வீட்டுக் கேற்றைத் (*gate*) திறந்து கொண்டு ஒருவர் வளவுக்குள் வந்து கொண்டிருந்தார். “அப்பா ஆரோ வருகினம்” என்றான் ‘பிரசாந்’. இந்த ஆள் இப்ப ஏன் இங்கை இந்த நேரத்தில வாறார். பின்நேரமெல்லே இவரைக் கோமளா வரச்சொன்னவ. என்று நினைத்த அரவிந்தன் “கோமளா இந்தாப்பா இந்த மோட்டர் (*Motor*) திருத்திறவர் வந்து நிக்கிறார். அவரைப் பின்நேரமெல்லே வரச் சொன்னநீர்” என்றான் அரவிந்தன். “ஓம். ஓம். இப்ப வந்திட்டாரே அப்பா! அவரைப் பின் நேரம் வரச் சொல்லுங்கோ” என்று கூறிக் கொண்டு வீட்டு வாசல் படிகளிலே இறங்கிக் கொண்டி ருந்த கோமளா, கேற் (*gate*) அருகில் முற்றத்தில் நின்றவரை நேருக்குநேர் பார்த்ததும் அதிர்ச்சி யடைந்தாள். தலையிலே யாரோ சுட்டியலால் அடித்ததுபோல இருந்தது. தலை சுற்ற, உடம்பு பதற, நடுங்கிக் கொண்டு கீழே இருந்துவிட்டாள். முகத்தை இரண்டு கைகளாலும் மூடிக் கொண்டு பலமாக அழத்தொடங்கினாள். அரவிந்தன் மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கி ஓடி வந்து கோமளாவின் தலையை நிமிர்த்தி “என்னப்பா என்ன நடந்தது?” என்று கேட்டான். இதற்குள் பிரசாந்தும் அழ, குழந்தையும் அழத் தொடங்கியது. அரவிந்தன் கேற்ரோடு (*Gate*) நின்றவரைப் பார்த்து “அண்ணை போட்டுப் பின்நேரம் வாங்கோ. நேரம் கெட்ட நேரத்தில வந்து கழுத்தறுக்கிறியள். சந்தர்ப்பம் தெரியாத ஆசாமியாயிருக்கு” என்றான் சற்று கோபத்தோடு. கோமளாவுக்கு திடீரென்று என்ன நடந்தது? என்ற பதட்டம் அவனுக்கு.

“வேண்டாம் வேண்டாம் அவரை ஏச வேண்டாம். அவர் மோட்டர் திருத்திறவர் இல்லை” என்றாள் கோமளா தளதளத்த குரலில். “அப்ப ஆர்” என்று கேட்டான் அரவிந்தன் அவசர மாகவும் அதட்டலாகவும்.

“அவர்தான் பிரசாந்தின்ரை அப்பா” என் றாள் கோமளா ஈனமான குரலில்.

எல்லாவற்றையும் அவதானித்துக்கொண்டு, முற்றத்திலே நின்ற ஜீவா மாஸ்டர் கேற்றைத் திறந்துகொண்டு மிக வேகமாக வெளியேறி, ஒழுங்கையிலே நடக்கத் தொடங்கினார். போகும்போது பிரசாந்தைக் கூர்மையாகப் பார்த்துவிட்டுத்தான் போனார். “அவர் போறார் அவரைக் கூப்பிடவா?” என்று கோமளாவைக் கேட்டான் அரவிந்தன் சற்று நிதானமாகத் தாழ்ந்த குரலில்.

“வேண்டாம். வேண்டாம். அவரைப் போக விடுங்கோ” என்றாள் கோமளா. ஏமாற்றம், அதிர்ச்சி, ஆச்சரியம், குற்ற உணர்வு எல்லாம் ஒரே நேரத்தில் அவளுடைய இதயத்தைக் குத்திக் கிழித்துக் கொண்டிருந்தன. படிக்கட்டிலே இருந்து சடுதியாக எழும்பிய கோமளா, நேராக அறைக்குள்ளே போய்க் கட்டிலிலே விழுந்தாள்.

அரவிந்தனுக்கு மனக்குழப்பமாக இருந்தது. இந்த நேரத்தில் இவர் எப்படி இங்கே என்று தடுமாறினான். மிக வேகமாக மோட்டார்ச் சயிக்கிளை ஸ்ராட் (*start*) செய்து கொண்டு, வீட்டை விட்டு வெளியேறினான். ஜீவா மாஸ்ட ரைச் சந்தித்துவிட வேண்டுமென்ற ஆவல் அவனுக்கு இருந்தது. ஆனால் ஜீவா மாஸ்டர் எவரது கண்ணிலும் பட்டுவிடக்கூடாது என்ற தீர்மானத்துடன் குறுக்கு ஒழுங்கையால் பிரதான வீதியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். இனி இந்த ஊரில் அவருக்கு ஒரு அலுவலும் இல்லைத்தானே? “எது அன்று அவருக்குரி யதாய் இருந்ததோ அது இன்று மற்றெருவனு டையதாகி விட்டதே.”

“இதென்னடி பிள்ளை வெள்ளிடியாகக் கிடக்கு. அது சரி வந்தது ஜீவா மருமோன் தானே? நல்லாய் பாத்தனிதானே? இவர் எப்பிடி திடீரெண்டு இங்கை வந்து நிக்கிறார். கடவுளே எனக்கு ஒண்டும் விளங்கேல்லையே.” என்று அங்கலாய்த்தாள் பாக்கியம்.

“ஐயோ எல்லாம் உன்னால வந்தவினை தானே அம்மா” என்று தலையிலே அடித்துக்

கொண்டாள் கோமளா. “ஏனடி என்னில பழி போடுறாய். நாலு வருஷமாய்த் தேடாத இட மெல்லாம் தேடி. போகாத இடமெல்லாம் போய், காணாத ஆக்களையெல்லாம் கண்டு, ஆள் இல்லை எண்டதுக்குப் பிறகு தானேடி”

“உந்தக் கதையளை நிப்பாட்டுங்கோ அம்மா. எல்லாம் முடிஞ்சுபோச்சுது. எல்லாரும் என்னை ஏமாத்திப் போட்டினம்.”

“ஆர் ஏமாத்தினது? காணாமல்போன ஆக்க ளைத் தேடுற எல்லா அமைப்புக்களிலும் கடிதம் குடுத்தம். படம் குடுத்தம். விதானையார், பிரதேச செயலாளர். அரசாங்க அதிபர், எண்டு எல்லாரிட்டையும் அலைஞ்சந்தானே? அது மட்டுமே பொலிஸ் ஸ்ரேசன், ஆமிகாம்ப், தடுப்புமுகாம் எண்டுமெல்லே அலைஞ்சம். எல்லாரும் கைவிரிச்சுப் போட்டாங்கள். எத்தின கூட்டங்கள், உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட் டங்கள் எல்லாத்துக்கும் போனமெல்லே. ஐயர் மாரிட்டையும். சாஸ்திரகாறரிட்டையும் அவற்றை சாதகத்தைக் கொண்டுபோயெல்லே காட்டின னாங்கள். “ஆள் இல்லை... ஆள் இல்லை”. இதைத்தானே எல்லாரும் சொல்லீச்சினம். கோவில் கோவிலாய் நேத்தி வைச்சம். பூசை செய்விச்சம். கண்ட பலன் என்ன? காசை தண்ணியா இறைச்சதுதான் ”

“இன்னும் கொஞ்சம் பொறுத்திருக் கலாம்தானே அம்மா” என்றாள் கோமளா கடுங் கோபத்தோடு.

“இப்ப இப்பிடித்தான் சொல்லுவாய். காணாமல் போய் 5 வருஷத்துக்குப் பிறகு தடுப்பில இருந்து வந்த குணசீலன் என்ன சொன்னவன். “எங்களோட பிடிச்ச எல்லாரையும் பத்து நாளைக்குள்ள முடிச்சுப் போட்டாங்கள். அதுக்குள்ள ஜீவா மாஸ்டரும்தான். என்னையும், மோகனையும் ஆக்களை அடையாளம் காட்டவெண்டெல்லே வைச்சிருந்தவங்கள். எங்கை எங்கை எல்லாமோ இருந்தம். கடைசி யாய் புனர்வாழ்வில விட்டெல்லே எங்களை வெளியில விட்டவங்கள்“எண்டெல்லே சொன்ன வன்.” என்றாள் பாக்கியம்.

“அவன் குணசீலன் கெட்டநாய். எங்களுக்குச் சொன்னதோட, சரியாக அறிஞ்சு கொள்ளாமல் ஊர்முழுக்கப் பறையடிச்சுப் போட்டானே! அவசரக்காறன், படுபாவி, முட்டாள், மூதேவி என்றாள்” ஆத்திரத்தோடு கோமளா.

“இனி அவனைத் திட்டி என்ன பிரயோ சனம்.? ஊர்வாயை உலமூடியால மூடேலுமே. ஊரெல்லாம் கதை பரவின உடன துக்கம் விசாரிக்கவெண்டு எத்தினை பேர் எங்களிட்ட வந்தினம்.” கறுவிக் கொண்டாள் அம்மா.



“கோமளா ரீச்சர் இருக்கிறாவோ? எண்டு கேட்டுக் கொண்டு எங்கட வீட்ட வந்தவை யெல்லாம் எங்கட துக்கத்தில பங்கு கொள்ள வந்தவை எண்டே நினைச்ச நீ. எங்களிட்டை வயல்காணி. தென்னந்தோட்டம், பெரிய வீடு வளவு, ரவுணில கடை, நகைநட்டு, பொருள், பண்டம் எல்லாம் தாராளமாய் இருக்கு. இதோட உனக்கு உத்தியோகமும் இருக்கு. இதெல்லாம் எத்தின பேரின்ரை கண்ணை உறுத்தினது தெரியுமே.?” “உங்கட மகள் என்ன முடிவோட இருக்கிறா? தனிச்சுப்போனா. ஒரு கைப்பிள்ளை யுமெல்லே இருக்குது. அவவுக்கு ஏதும் ஒரு

> **ஆர் ஏமாத்தினது? காணாமல்போன ஆக்களைத் தேடுற எல்லா அமைப்புக்களிலும் கடிதம் குடுத்தம். படம் குடுத்தம். விதானையார், பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர், எண்டு எல்லாரிட்டையும் அலைஞ்சந்தானே? அது மட்டுமே பொலிஸ் ஸ்ரேசன், ஆமிகாம்ப், தடுப்புமுகாம் எண்டுமெல்லே அலைஞ்சம். எல்லாரும் கைவிரிச்சுப் போட்டாங்கள். எத்தின கூட்டங்கள், உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட்டங்கள் எல்லாத்துக்கும் போனமெல்லே. ஐயர்மாரிட்டையும். சாஸ்திரகாறரிட்டையும் அவற்றை சாதகத்தைக் கொண்டுபோயெல்லே காட்டினனாங்கள்.**
>
> **"ஆள் இல்லை... ஆள் இல்லை...."**
>
> **இதைத்தானே எல்லாரும் சொல்லீச்சினம்.**

வழியைப் பாருங்கோவன். நல்ல முடிவெடுத்தா எங்களுக்கும் சொல்லுங்கோ. தனியச் சீவிக் கேலாதுதானே? நீங்களும் அவவுக்கு எப்பவும் காவலாய் இருக்கேலுமே? வீட்டில ஒரு ஆம் பிளை இருக்கிறமாதிரி வராதுதானே?'' எண்டு எத்தினை பேர் சாடைமாடையா எனக்குச் சொன்னவை. ஏன் அரவிந்தன் மருமகன் ஒரே பள்ளிக்குடத்தில படிப்பிக்கிற சாட்டில எத்தின தரம் எங்கட வீட்ட வந்தவர்'' "அவர் நேரடியாக என்னைக் கேட்டவர்தானே? ஏன் உன்னையும் கேட்டவர்தானே? அப்பதான் நாங்கள் இரண்டுபேரும் ஒரு பச்சைப்பிள்ளை யோட தனிச்சுப் போனம் எண்ட பயம் எனக்கு வந்தது.'' என்றாள் பாக்கியம்.

"இப்ப உந்த விருத்தாந்தங்கள் எல்லாத் தையும் விடுங்கோ'' என்று தாயை அதட்டின கோமளா நகைகளையும் களட்டி வைத்து, உடைகளையும் மாற்றிக்கொண்டாள். மீண்டும் கட்டிலிலே அமர்ந்து கொண்டாள். அவளது அறைக்குள் இருந்த நிலைக் கண்ணாடி அவளைப் பார்த்துப் பரிதாபமாகச் சிரித்தது.

தானும் ஜீவாவும் கல்வியியல் கல்லூரியில் ஆசிரிய மாணவர்களாகச் சந்தித்துக் கொண்டதும், மனம் ஒருமைப்பட்டு காதலித்ததும். இரண்டு வீட்டாரதும் பலமான எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் திருமணம் செய்து கொண்டதும். 4 வருடங்கள் ஜீவாவுடன் மிக அன்னியோன்யமாகவும், சந்தோசமாகவும் குடும்பம் நடத்தியதும், ஒரே பள்ளிக்கூடத்துக்கு ஒன்றாகத் தனித்தனி சைக்கிள்களில் போய் வந்ததும், ஜீவாவுக்கு தன்மேல் இருந்த பிரியமும், 'பிரசாந்' பிறந்து ஆறு மாதத்தால ஜீவா காணாமல் போனதும், அவரைத் தேடி அலைந்து பட்ட கஸ்டங்களும், ஜீவா இல்லை என்ற உறுதிப்பாட்டின் பின்னர், அரவிந்தனின் தொடர்ந்த வற்புறுத்தலின் பேரிலும், கட்டாயத்தின் பேரிலும் அவனைத் திருமணம் செய்துகொண்டதும், ஒவ்வொன்றாக ஞாபகம் வர, கேவிகேவி அழுதாள். அப்போது தாய் பாக்கியம் வந்து "இந்தா பிள்ளையைப் பிடி'' என்று பிள்ளையைக் கொடுத்து அவளைத் தேற்ற முயன்றாள்.

"அம்மா நான் பாவி. ஜீவாவை ஏமாத்திப் போட்டன். அவசரப்பட்டிட்டன். "இவ்வளவு காலமும் எங்க இருந்தியள்? ஏன் நீங்கள் என்னோட இவ்வளவு காலமும் தொடர்பு கொள்ளேல்ல? இப்ப எங்க இருந்து வாறியள்? ஏன் உங்களைப் பிடிச்சவங்கள்? இதொண்டையும் அவரிட்டை கேக்கேலாமல் போச்சே. அவர் என்னனென்ன கஸ்டங்களை அனுபவிச்சாரோ? இப்ப எங்க ஆரிட்டப் போறாரோ? என்னை நம்பித்தானே வந்திருப்பார். காணாமல் போன அண்டைக்குப் பின்னேரம் வெள்ளக்கிழமை எங்களைக் கோயி லாலை கொணந்து விட்டுட்டுப் பிறகு பாண் வாங்க எண்டெல்லே ரவுணுக்குப் போனவர். நான்தானே படுபாவி அவரை அனுப்பி வைச்சனான். ஐயோ நான் அவருக்காகப் பொறுத் திருக்கேல்லையே. அவருக்குத் துரோகம் செய்துபோட்டனே. தெய்வங்களே எனக்குத் தண்டனையைக் குடுங்கோ.'' என்று அழுதாள். "அரவிந்தன் கைகாரன். தவிச்ச முயல் அடிச்ச

மாதிரி காரியத்தைத் திட்டம் போட்டு சாதிச்சுப் போட்டானே. அவன்ரை அவசரம் என்னை இப்பிடி ஒரு படு கேவலமான நிலமைக்குக் கொணந்து விட்டிருக்கே'' என்று அழுதாள். அங்கலாய்த்தாள் கோமளா.

''சரி உத விடு. அரவிந்தன் மருமோனை இப்ப திட்டி என்ன பிரயோசனம்.? அவரையும் ஒருத்தி ஏமாத்திப் போட்டாள். ஏதோ பள்ளிக்குடக் காதலாம். அவள் பிரான்சில இருந்து வந்து, இவரை இந்தியாவுக்குக் கூப்பிட்டு கலியாணத்தை எழுதிப் போட்டுப் போனவள் 3 வருசமாய் கூப்பிடேல்ல எண்டப் பிறகெல்லோ தெரிஞ்சதாம் அவள் பிரான்ஸில வெள்ளைக்காரனை முடிச்சிற்றாள் எண்டு.''

''உது பழைய கதையம்மா. அரவிந்தன் எங்கட பள்ளிக்கூடத்துக்கு மாறி வந்த அடுத்த நாளே நாங்கள் எல்லாரும் அறிஞ்சிட்டம்.'' என்றாள் கோமளா வெறுப்போடு.

''பிறகென்ன உனக்கும் எல்லாம் தெரிஞ்சிருக் குத்தானே? அரவிந்தன் மருமகன் எத்தினை தரம் இஞ்சை வந்தவர். நீ அவரோட கதைச்சுப் பேசி மனம் விரும்பித்தானே சம்மதம் சொன்னநீ. சம்மதம் எண்டதுக்குப் பிறகு அவர் எவ்வளவு சாமான்களை இஞ்சை கொணந்தவர். நீ எல்லாத்தையும் வாங்கின நீ தானே? நான் உன்னை வில்லங்கப் படுத்தேல்லைத்தானே?

''அதெல்லாம் சரிதான் அம்மா. திருத்த முடியாத பிழையையெல்லே இப்ப விட்டுட்டம். அதெல்லே இப்ப குழப்பமாக இருக்கு.'' என்றாள் கோமளா மனக்குமுறலை அடக்கிக் கொண்டு.

''ஜீவா ஊரில ஆர் ஆரைச் சந்திச்சு என்னென்ன சொல்லுறாரோ? ஊராக்கள் அரவிந்தனையும் என்னையும் பற்றி என்னென்ன கேவலமாய் சொல்லுகினமோ? அரவிந்தன் அவசரமாய்ப் போனார். ஜீவாவைச் சந்தித்தாரோ? ரெண்டு பேருக்குமிடையே என்னவும் பிரச்சினை வந்துதோ ? ஜீவா ஏமாற்றத்தோடயும், ஆத்திரத் தோடையும், கடுங்கோபத்தோடையும் இருப்பார். ஆனால், அவர் நிதானமானவர். அரவிந்தன் ஆத்திரக்காரன், அவசரக்காரன். அடிதடி எண்டு ஏதும் பிரச்சனை வந்திடுமோ? என்னால அவைக் குள்ள சண்டை வந்தா எனக்கு எவ்வளவு மரியாதை கேடு. ஜீவா இங்க வந்து பிரசாந்தைத் தன்னோட விடச் சொல்லிக் கேட்டால் நான் என்ன செய்யுறது? பிரசாந்துக்கு ஜீவாவை ஆர் எண்டு சொல்லுறது? ஐயோ போதும். எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்.'' என்று மேலும் புலம்பினாள் கோமளா.

''நீ தேவையில்லாமல் எல்லாத்தையும் நினைச்சு வீணாக குழம்பவேண்டாம். ஜீவா மருமகன் இனி இங்க வரப்போறதில்லை. எங்கட வளவுக்குள்ள கால் வைச்ச உடனேயே அவருக்கு எல்லாம் விளங்கியிருக்கும். அரவிந்தன் மருமோன் வாசலில நிண்டது, அவர் உன்னோட கதைச்ச விதம், நான் கைப் பிள்ளையோட வாசலுக்கை வந்தது, இதை எல்லாத்தையும் ஜீவா மருமகன் கண்டிட்டார். அதுதான் அவர் ஒண்டும் பேசாமலே போனவர். நாங்கள் அவரைத் தேடி அலைஞ்ச சங்கதியெல்லாத்தையும் ஊர்ச் சனங்கள் கட்டாயம் அவருக்குச் சொல்லுவினம். அரவிந்தன் மருமகன் பின்னேரம் வந்து ஒண்டும் கேக்க மாட்டார். உன்னை முடிச்சது அவருக்கு குரு சந்திர யோகம் அடிச்ச மாதிரியெல்லே. அவற்றை குடும்பத்துக்கு சொந்தமாய் ஒரு வீடு வாசல் கூட இல்லைத்தானே?'' ''நீ ஜீவா மருமகனை ஏமாத்தேல்ல. அது சந்தர்ப்பம் சூழ்நிலையால நடந்த தற்செயலான சம்பவம்.'' என்று சொல்லி முடித்தாள் பாக்கியம்.

தன்னுடைய வாழ்க்கைப் பாதையிலே நெடுந்தூரம் பிரயாணம் செய்வதற்காக ஜீவா மாஸ்டர் தூய்மையான காதலையே முதலீடாக நினைத்து நல்ல துணையாக வந்ததும், இடையிலே விதி வசத்தால் பிரிந்து போனதும், பின்னர் திரும்பி வந்தபோது தன்னுடன் வாழ முடியாமல் தான் தன்னைச் சுற்றி இரண்டாவது கலியாணம் என்ற முள் வேலியைப் போட்டுக் கொண்டதும், அரவிந்தன் காணி. பூமி, சொத்து, பணம். பண்டம் என்பனவற்றை அடிமனதிலே மறைத்து வைத்துக்கொண்டு, தன்னுடைய வாழ்கைப் பாதையிலே சந்தர்ப்பம் பார்த்து இணைந்து கொண்டதும், தவிர்க்கமுடியாத சூழ்நிலையில்-- இனி, ஜீவா இல்லை என்ற நிலையில் அரவிந்தனை ஏற்றுக் கொள்ள வேண்டிய இக்கட்டான நிலமைக்குத் தான் தள்ளப்பட்டதும் கோமளாவின் மனதை மீண்டும் மீண்டும் குழப்பிக் கொண்டிருந்தன. அந்தக் குழப்பத்திலிருந்து கோமளா இப்போதைக்கு மீட்சி பெறமுடியாது.

கோமளாவை ஜீவா மாஸ்டர் மன்னிப்பாரா?

○○○

# தமிழ்ச் சூழலில் பொதுவிய உரையளிக்கை என்ற கலை வடிவம்



பேராசிரியர்
சபா ஜெயராசா

**பொ**துவிய உரையளிக்கை (Public Speech) என்பது தனித்துவம்மிக்க ஒரு கலைவடிவம். நுகர்வோருக்கு அறிவையும், உணர்வையும் உரை வழங்குனர் கடத்தும் கலைச் செயற்பாடு அதன்வழியாக மேற்கொள்ளப்படுகிறது. உரைவழங்குனரும் பெறுனரும் கட்புலனாக உடன்படிக்கை நிலையில் ஒன்றிணைந்து கொள்கின்றனர். விரும்பிய வேளை பெறுனர் வெளியேறலாம்.

பொதுவிய உரையளிக்கை என்பது பொதுவிய உரை கடத்தற்கலை, பேச்சுக்கலை, மேடை உரை அரங்கு என்று பலவாறாக அழைக்கப்படுகிறது.

உலகின் தொன்மையான பண்பாடுகளில் இக்கலை வல்லார் பலர் வாழ்ந்த எமக்குச் சான்றுகள் உண்டு. தொல்சீனப் பண்பாட்டில் வாழ்ந்த ***கொன்பூசியஸ்*** (கி.மு. 551-479) இக் கலையில் வல்லவராக இருந்தமைக்குப் பதிவு உண்டு. பொதுவிய உரையளிக்கைக்கலை, “உலகை மாற்றியமைக்கும் திறனுடையது” என அவர் விளக்கினார்.

தொல்கிரேக்கத்திலும் இக்கலை உன்னத வளர்ச்சி நிலையில் இருந்தது. ***அரிஸ்ரோட்டில்*** (கி.மு. 384-322) அதன் இயல்பை அறிவியல் நிலையில் பகுத்தாராய்ந்தார், அவர் உருவாக்கிய, “அக்கடமியா” என்ற பல்கலைக் கழகத்தில் ***சொல்லாடற் கலை*** (Rhetoric) ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது.

பொதுவிய உரையளிக்கைக் கலையை அடியொற்றியே பல்கலைக்கழகக் கற்பித்தலில் ***விரிவுரை முறை*** உருவாக்கம்பெற்றது. ஆழ்ந்த அறிவை சிக்கனமுறையில் கையளிக்கும் செயற்பாடாக விரிவுரைமுறைக் கற்பித்தல் அமைந்தது.

பொதுவிய, உரையளிக்கையில் பெறுனர் அல்லது நுகர்வோர் பல தரத்தினராக இருப்பர். அறிவு அடுக்கமைவில் வேறுபட்ட நிலைகளில் இருப்பர். அவர்கள் அனைவருக்கும் கவரக் கூடியவாறு அளிக்கை கட்டமைப்புச் செய்ய வேண்டும். இப்பிரச்சினை நிகழ்த்துகைக் கலைகள் அனைத்துக்கும் உண்டு.

எடுத்துக்காட்டாக, ஒரு கருநாடகக் கச்சேரி நிகழும் பொது அவையில் அதனை வரன்முறை யாகக் கற்றவர். அதனை மதிப்பீடு கொள்வ தற்கும், ஏனையோர் புலக்காட்சி கொள்வதற்கு மிடையே வேறுபாடு உண்டு.

பொதுவிய உரையளிக்கையினை நுகர் வோரிடத்தும் அத்தகைய வேறுபாடான கோடல் காணப்படும். அந்நிலையில், உளவியல் நுட்பியலையும் ஈடுபாடு கொண்டு இணங்க வைக்கும் ஈர்ப்பு இயைபியத்தையும் (Persuasion) பயன்படுத்தல் வளர்ச்சி கொண்டது.

கிரேக்க, ரோம, அராபிய, சீன, தொல் பண்டில் பொதுவிய உரையளிக்கைக் கலை வளர்ச்சியுற்றிருந்தமை போன்று தமிழ்நாட்டிலும் அக்கலையின் வளர்ச்சி நீட்சி கொண்டிருந்தது.

அகழ்வாய்வு மற்றும் வரலாற்று ஆய்வு களை அடியொற்றிய தரவுகளின்படி 5500 ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான பண்பாட்டு வரலாற்றை தமிழர் கொண்டுள்ளனர்.

தமிழர் பண்பாடு தன்னளவில் தற்சார்பு (Dependent) கொண்டது. அதாவது பண்பாட்டுத் தனித்துவமுடையது. அதேவேளை உலகளாவிய பண்பாட்டு அமைப்பியலுடன் இசைவு கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

தொல் தமிழர் பண்பாட்டில் கடல் வணிகம், வளர்ச்சியடைந்திருந்தமை போன்று, கடல் கடந்து சென்று அறிவைக் கையளிக்கும் முறைமையும் வளர்ச்சியடைந்திருந்தது.

நாவாய்க் கலை, கட்டடக்கலை, நீர்ப் பாய்ச்சற் கலை, நகரவடிவமைப்புக்கலை, உலோகக் கலை முதலானவை தொன்மையாக தமிழகத்தில்

வளர்ச்சியடைந்திருந்தன. அவ்வாறான அறிவை பிறநாடுகளுக்கு எடுத்துச் சென்று வழங்கும் முறைமை வளர்ச்சியடைந்திருந்தது.

எகிப்திய பிரமிட்டில் கண்டறியப்பட்ட ***சிகைக்கொற்றன்*** என்ற தமிழிய எழுத்து கலையறிவை அங்கு எடுத்துச்சென்ற தமிழனாக இருக்கலாம்.

தொன்மையான தமிழகத்தில் பொதுவிய உரையளிக்கையை மேற்கொண்டோர் பாணர் ''புலவர்'' என அழைக்கப்பட்டனர். அவர்கள் அறிவை உருவாக்குவோராயும், அறிவாற்று னராகவும் *(Mentor)* விளங்கினர். பாணர் மரபிலிருந்தே புலவர் பெருமரவு வளர்ச்சி கொண்டது.

இந்திய வடபுலத்தில் அத்தகைய செயற் பாட்டை மேற்கொண்டோர் ''முனிவர்'' என அழைக்கப்பட்டனர். அறிவுநிலையில், புலவருக்கும் முனிவருக்கும் ஒப்புமை உண்டு. ஆழ்ந்த புலமையோடு அவர்கள் அறிவை மேலும் உருவாக்குவோராயும் இருந்தனர். பிற் காலத்தில் ''நடமாடும் நூலகம்'' என அவர்கள் அழைக்கப்பட்டனர்.

பிறர் திரட்டிய அறிவையும் தாம் உரு வாக்கிய அறிவையும் ஒன்றுசேர தம்முள்ளே களஞ்சியப்படுத்தி வைத்தனர்.

தொன்மையான தமிழகத்தில் வளமான கல்விக் கட்டமைப்பு நிறுவப் பெற்றிருந்தது அரச மாளிகையோடு இணைந்த ''சங்கம்'' உயர் கல்வி நிலையமாக இருந்தது. அது பிளேட்டோவின் ''அக்கடமியா'' என்ற பல்கலைக்கழகத்துக்கு இணையானது. மதுரை, காஞ்சி, காவிரியம்பூம் பட்டினம், முதலாம் நகரங்களில் உயர் கல்வி நிலையங்கள் அமைந்திருந்தன. பெரும்பனு வல்கள் தமிழில் தோன்றுவதற்கு அவை பின் புலமாக அமைந்தன.

கல்வி நிலையங்களுக்குள் மட்டும் அறிவு கட்டுப்பாடிருக்கவில்லை. ***பொது மக்களுக்கு அதனை எடுத்துச் செல்லும் பாலமாக பொதுவிய உரையளிக்கை அமைந்தது***. தற்காலக் கல்வி யியலில் அந்தச் செயற்பாடு அறிவின் நிறைபரவல் *(Dissemination of Knowledge)* முயற்சி என்று குறிப்பிடப்படும்.

''புலவர் இல்லக்கல்வி''யும் அக்காலத்தில் வளர்ச்சியுற்றிருந்தது. புலவர் இல்லக்கல்வி ***குருகுலம்*** எனவும் அழைக்கப்பட்டது. அங்கு பொதுவிய உரையளிக்கைத் திறன்களும் மாணவருக்கு கற்பிக்கப்பட்டன. பொது மக்க ளிடத்து அறிவைப் பரப்பும் செயற்பாட்டிலும் அவர்கள் பணி கொண்டனர். அறிவு என்ற செல்வத்தைப் பொதுமையாக்கல் தமிழர் பண் பாட்டின் ஓர் அலகு.

நிலாப்பள்ளி, மரநிழற்பள்ளி, முதலாம் முறைசாராக் கல்வி நிறுவனங்களும் தமிழ் நாட்டில் இடம் பெற்றிருந்தன. பொதுவிய உரை யளிக்கை அங்கும் இடம் பெற்றது.

''கேட்டல் என்பதன் வழியாக அறிவை நுகரவும், திரட்டவும், திரட்டிய அறிவை செயல் நிலைக்கு உட்படுத்தவும்வல்ல இயங்குநிலை விதந்துரைக்கப்பட்டது. அறநூல்கள் கேள்விச் செல்வத்தை வலியுறுத்தின. எழுத்தறியா மக்களிடத்து அறிவு சென்றடைய ''கேட்டல்'' வழிவகுத்தது.

செவிச் செல்வம், கற்றிலனாயினும் கேட்க, எனைத்தானும் நல்லவை கேட்க, கேள்வியால் தோட்கப்படாத செவி, நுணங்கிய கேள்வியர் முதலிய பல தொடர்களால் கேட்டலின் பதி வீடில்லா நிறைவை வள்ளுவர் விளக்கியுள்ளார்.

தமிழர் வீரயுகத்தில் இருந்த ஐவகை நிலத்தை அடியொற்றிய வாழ்க்கைமுறை, அறநூற்காலத்தில் மாற்றம் அடைந்தது. பல்வேறு சமயங்கள் தமிழ்ப் புலத்தின் பரவலுறத் தொடங்கின. சேரநாட்டு வஞ்சி மாநகரில் ஒன்பது சமயக் கணக்காரர்களைக் கண்ட மணி மேகலை அவர்தம் திறன் கேட்டறிந்தமை பற்றிய குறிப்பு, ''மணிமேகலை''யில் இடம் பெற்றுள்ளது.

ஒவ்வொரு சமயத்தினரும் தத்தமது சமயம் பற்றி விளக்கும் உரையளிக்கைக் கலை வளரத் தொடங்கியது. பேச்சு வழியான சமய மோதலும் அரங்கும் நிகழத் தொடங்கின.

''ஓட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டிமன்றத்துப் பாங்கறிந்து ஏறுமின்'' என்பது ''மணிமேகலை'' தரும் செய்தி. தற்காலத்தில் இடம்பெறும் பட்டிமன்று, வழக்காடு மன்று என்பவற்றின் தொடக்கநிலையாக அது அமைந்தது.

***''பட்டி மன்று'' ''பட்டி மண்டபம்''*** என்ற இரண்டு தொடர்கள் வழக்கில் உள்ளன. ''மண்டப'' என்ற சமஸ்கிருத மொழிச்சொல், தமிழில் மண்டப மாயிற்று.

கோயிற்கட்டடக்கலையில் அது ஆலயத்தின் உள்ளே அமைந்த அரங்கைக் குறிப்பிடும்

**தமிழில் நவீன உரையளிக்கைக் கலையின் தொடக்குனராக விளங்குபவர் ஆறுமுகநாவலர். மேலைப்புல உரையளிக்கைக் கலைநுட்பங்களையும் தமிழர்களின் மரபுவழி நுட்பங்களையும் இணைத்த புதுவீச்சுடன் பொதுவிய உரையளிக்கைக் கலையை முன்னெடுத்தார். பெரியபுராணத்தை வசன நடையில் எழுதும் செயற்பாடும் பொதுவிய உரையளிக்கைச் செயற்பாடும் ஒன்றையொன்று தழுவி நிகழ்ந்தன. வினா எழுப்புதலும் விடை காணலும் என்ற "சோக்கிரடிக்" நுட்பவியலை பேச்சுக் கலையிலும் பாடநூலாக்கத்திலும் நாவலர் பயன்படுத்தினார்.**

சிங்களத்தில் **மடுவ** என்ற சொல் வழக்கில் உண்டு. மணிமேகலையின் ஏட்டுப்பிரதிகளில் ''மன்றில்'', ''மண்டபத்தில்'' இரு சொற்களும் இடம்பெற்றுள்ளன.

புலவர் மரபு என்பது தமிழ்ச் சூழலில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. தல புராணங்களைப் பாடுதல், தனிப்பாடல்களை எழுதுதல், என்பவற்றுடன் உரை வழியான அறிவளிக்கை வழங்கும் செயற்பாட்டிலும் புலவர் ஈடுபட்டு வந்தனர்.

காலனித்துவ காலத்தில் புலவர்களின் பன்முகமான செயற்பாடுகள் பற்றி வரலாற்று ஆய்வாளர் ஆர்.ஏ.வெங்கடாசலபதியால் விரிவாக நோக்கப்பட்டுள்ளன.

காலனித்துவ சூழலில் தமிழ் மொழியும், பண்பாடும், எழுத்தாக்கங்களும், அறிவுக் கைய ளிப்பும் நிலைகுலைந்து விடாது பாதுகாப்புச் செய்யப்பட்டதில் புலவர்களுக்குப் பெரும்பங்கு உண்டு.

காவியக்கதைகள், தொன்மக்கதைகள், நீதிநூற் கதைகள் முதலியவற்றைப் பொதுவிய உரையளிக்கை செய்யும் முயற்சியை புலவர்கள் முன்னெடுத்தனர்.

தமிழில் **நவீன உரை**யளிக்கைக் கலையின் தொடக்குனராக விளங்குபவர் ஆறுமுகநாவலர். மேலைப்புல உரையளிக்கைக் கலை நுட்பங் களையும் தமிழர்களின் மரபுவழி நுட்பங் களையும் இணைத்த புதுவீச்சுடன் பொதுவிய உரையளிக்கைக் கலையை முன்னெடுத்தார். பெரியபுராணத்தை வசன நடையில் எழுதும் செயற்பாடும் பொதுவிய உரையளிக்கைச் செயற்பாடும் ஒன்றையொன்று தழுவி நிகழ்ந்தன.

வினா எழுப்புதலும் விடை காணலும் என்ற ''சோக்கிரடிக்'' நுட்பவியலை பேச்சுக் கலையிலும் பாடநூலாக்கத்திலும் நாவலர் பயன்படுத்தினார்.

அவரைத் தொடர்ந்து அறிவியல் சார்ந்த பொதுவிய உரையளிக்கைக் கலையை தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் வளர்த்தவர் விபுலானந்த அடிகளார். அவர், பொருத்தமான அறிவியற்கலைச் சொற்களை உருவாக்கி எழுத்து நிலையிலும் பொதுவிய உரையளிக்கை நிலையிலும் அறிவியல் தமிழை அறிபரவல் செய்தார்.

தமிழ்ச்சூழலில் வளர்ச்சிபெற்ற மக்களாட்சி சிந்தனை, திராவிட இயக்கம், தனித்தமிழ் இயக்கம், கல்வி இயக்கம் முதலியவை பொதுவிய உரையளிக்கைக் கலைக்கு புத்து யிரும், புதுவளமும் தந்தன.

பொது அறிவூட்டல் அரசியல், சமூகம், கல்விச் சீர்திருத்தம், ஆற்றுப்படுத்தல், முதலாம் பல்வேறு துறைகளில் அறிவும் உணர்வும் கலந்த நிலையில் அந்தக் கலை வளர்ந்து வருகின்றது. ஏனைய ஆற்றுகைக்கலைகள் போல் அதற்கும் கலைவெளியில் தனித்த இடமுண்டு.

நலிவும் தேய்வியம்பலும் *(Cliche)* பிற ஆற்றுகைக் கலைகளில் காணப்படுதல் போல், இக்கலையிலும் இடம்பெற்று வருகிறது. உலகின் புதிய அறிவுப் பாய்ச்சலை உள்வாங்கிக் கொள்ளாத உறைந்துபோன அறிவுச் சோம்பலும் தொடர்கிறது.

இன்னோர் அவலமான நிகழ்ச்சி பெண் களைக் கேலிக்கு உள்ளாக்கி கேட்போரிடத்து நகைச்சுவையைத் தூண்டும் செயற்பாடு.

இது ஒரு கலை வடிவமாக இருத்தலினால் கனதியான திறனாய்வுக்கு உட்படுத்தப்படுதல் அறிவுலகின் தேவையாகிறது. திறனாய்வு குன்றிய சமூகம், அரசியல் நிலையிலும் பண்பாட்டு நிலையிலும், கலையாக்க நிலை யிலும், அளிக்கை நிலையிலும் பின்னடைவைப் பெற்ற வண்ணமே நீடிக்கும்.

❍❍❍

# நேர்மையாய் சேவை புரியும் ஆறு பேரை என்னுடன் வைத்துள்ளேன்

நான் நேர்மையாய்
சேவை புரியும்
ஆறுபேரை என்னுடன்
வைத்துள்ளேன்
(நான் கற்றதெல்லாம்
அவர்கள் எனக்கு
கற்பித்தவையே)
என்ன, எங்கே எப்போது, எப்படி
ஏன், யார்,
என்பது அவர்கள்
பெயர்களாகும்

நான் அவர்களை
தேசம் கடல் என
எல்லா இடமும்
அனுப்புகிறேன்
நான் அவர்களை
கிழக்கிற்கும்
மேற்கிற் கும்
அனுப்புகிறேன்
ஆனால் அவர்கள்
எனக்காக பணி
செய்த பின்பு
நான் அவர்களுக்கு
ஓய்வு வழங்குகிறேன்

ஒன்பதில் இருந்து
ஐந்து மணிவரை
அவர்கள் ஓய்வுபெற
அனுமதிக்கிறேன்
ஏனெனில் அப்போது
நான் பணியில்
தீவிரமாக இருப்பேன்
அத்துடன்அவர்கள்
பசியோடிருக்கும்
நபர்களென்பதால்
காலை உணவு
மதியஉணவு
தேனீர் வேளைக்கும்
ஓய்வினைவழங்குவேன்

ஆனால் பல்வேறு
கருத்துகளை
மனிதர்கள்
கொண்டிருப்பதன்
பின்
நான் ஒருவரை
சிறிது அறிவேன்
அவள் ஒருபோதும்
ஓய்வு பெறாமல்
சேவைபுரியும்
ஒருகோடி பேரை
தன்னுடன்
வைத்திருக்கிறாள்

அவள்தன்கண்களை
திறந்த கணத்தில்
இருந்து அவர்களை
அவள் தனது சொந்த
அலுவல்களுக்கான
வெளிநாடுகளுக்கு
அனுப்புகிறாள்
பத்து லட்சம்
எப்படி கள்
இருபது லட்சம்
எங்கே க்கள்
மற்றும்
எழுபதுலட்சம்
ஏன் கள்

**மூலம்: ருட்யார்ட் கிப்ளிங்**   **தமிழ் வடிவம்: அன்னலட்சுமி இராஜதுரை**




அப்பாடா! இவ்வளவு விருதுகளா?

எத்தனைப் பரிசுகள்!

மாலைச் சூரியன் சற்றே சாய்ந்திருந்தான். தெருவோரத்தில் குவிந்திருந்த பொருட்கள் மீது அவன் மங்கலான ஒளியைத் தூவினான். அந்த ஒளியில் பொன்னிறமாக மின்ன வேண்டிய கோப்பைகள் இன்று மாசுபட்ட உலோகத் துண்டுகளைப் போல சலனமின்றி கிடந்தன. பொன்னாடைகள் சுருண்டு, பிளாஸ்டிக் மூட்டைகளுக்குள் சிக்கித் தவித்தன. பாராட்டுச் சான்றிதழ்களின் மூலைகள் மடிந்து, மழைத் துளிகள் படிந்த தடங்களால் மறைந்து காணப் பட்டன.

“இதுதான் சிறந்த நாவலுக்காக கிடைத்த சாகித்திய விருது…”

ஒருகாலத்தில் மேடைகளில் ஒலித்த குரல்கள் நினைவாய் காற்றில் அலைமோதின. ஆனால் இன்று அதே விருது தூசி படிந்து, பழைய புத்தகங்களின் குவியலில் சாய்ந்துகிடந்தது.


பவானி
நெதர்லாந்து

பாமா.

தமிழுலகில் தனித்த குரலாய் ஒலித்த பெயர். ஒரு சாதாரண ஆசிரியையாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கியவள்.

மாணவர்களின் கண்களில் தூங்கிக் கிடந்த கேள்விகளை எழுப்பத் தெரிந்தவள். பாடப் புத்தகத்தின் வரிகளுக்குள் அடங்காத உலகத்தை அவர்களுக்கு காட்டியவள். “சிந்தியுங்கள்” என்ற ஒரு சொல்லால் பல இளம் உள்ளங்களில் தீப்பொறி ஏற்றியவள்.

எழுத்தாளராக மாறியபின், அவள் சொற்கள் வெறும் கதைகளாக இல்லாமல் உயிருள்ள சாட்சிகளாயின. சமூக அநீதிகளின் சுவர்களில் அவை தட்டின. பெண்களின் உள்ளார்ந்த வலிகளுக்குச் சொற்கள் தந்தன. ஏழைகளின் அன்றாடப் போராட்டத்தை, பசியின் வாசனையுடன் வாசகர்களின் முன்னே கொண்டு வந்தன.

அவளது முதல் நாவல் வெளிவந்த நாளில், புத்தகக் கடைகளின் முன் இளம் வாசகர்கள் வரிசை நின்றனர்.

“புதிய குரல்,” என்று விமர்சகர்கள் எழுதினர்.

“உண்மை பேசும் எழுத்து,” என்று வாசகர்கள் கூறினர்.

அதன்பின் வந்த ஒவ்வொரு நூலும் ஒரு அலைபோல் பரவியது.

விருதுகள் அவளைத் தேடி வந்தன.

மேடைகள் அவளை அழைத்தன.

புகழின் ஒளி அவள் வாழ்வைச் சுற்றி நின்றது.

ஆனால் புகழின் ஒளி, சாயங்காலச் சூரியனைப் போல, மெதுவாக மங்கத் தொடங்கும் என்பதைக் காலம் மட்டும்தான் அறியும்.

கொரோனா.

அந்தச் சொல்லே ஒரு இருள்.

அந்த இருள், அவளது வாழ்க்கையின் நடுவே வந்து நின்றது.

பல ஆண்டுகள் அவளோடு நிழலாய் இருந்த கணவர், அந்த நோயின் கைகளில் இருந்து திரும்பவில்லை. மருத்துவமனையின் வெள்ளைச் சுவர்களுக்குள், அவளது உலகம் சிதறியது.

அவள் அழுதாள்.

ஆனால் அமைதியாக.

வெளியில் அவள் உறுதியாய் இருந்தாள் உள்ளே ஒரு வெற்றிடம் வளர்ந்தது.

இரு பிள்ளைகள் வெளிநாட்டில் தங்கள் வாழ்க்கையை அமைத்தவர்கள்.

"அம்மா, நீங்களும் எங்களோடு வாருங்கள்," என்று பலமுறை கேட்டனர்.

பாமா மெதுவாய் புன்னகைத்தாள்.

"இது எனக்குப் பழகிய நாடு, எனது இலக்கிய நண்பர்கள், என் வாசகர்கள் இவைகளை விட்டு நான் எங்கே போவேன்?" என்றாள்.

அந்த வீட்டில் ஒவ்வொரு சுவரும் அவளது நினைவுகளைச் சுமந்தது.

எழுதிக்கொண்டிருந்த மேசையின் மரத் தட்டில் இன்னும் அவளது விரல்களின் தடம் இருந்தது.

நூலக அறையில் புத்தகங்களின் வாசனை அவளது சுவாசமாக இருந்தது.

அவள் தனிமையில் வாழ்ந்தாள்.

ஆனால் அந்தத் தனிமை அவளுக்கு வெறுமையாகத் தோன்றவில்லை.

அவள் எழுதிக்கொண்டே இருந்தாள்.

ஒரு காலை.

பறவைகள் வழக்கம்போல் கீச்சென்றன.

அருகிலிருந்த ஆலமர இலைகள் மெதுவாய் அசைந்தன.

அந்த அமைதிக்குள், பாமாவின் இதயம் திடீரெனத் துடிப்பை நிறுத்தியது.

அவள் விழுந்தபோது, அறையில் திறந்தபடி இருந்த புத்தகத்தின் பக்கங்கள் காற்றால் அசைந்தன.

அவள் எழுதி முடிக்காத ஒரு வாக்கியம் மேசையில் இருந்தது.

செய்தி பரவியது.

இலக்கிய உலகம் அதிர்ந்தது.

இரங்கல் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

நினைவு அஞ்சலிகள் எழுதினர்.

செய்தித்தாள்கள் அவளது புகைப்படத்தை முதல் பக்கத்தில் வெளியிட்டன.

"தமிழ் இலக்கியத்தின் இழப்பு," என்று தலைப்புகள் முழங்கின.

ஆனால் காலம்

அது ஒருவருக்காக நின்றுவிடாது.

சில நாட்கள்.

சில வாரங்கள்.

புதிய செய்திகள்.

புதிய முகங்கள்.

பாமா ஒரு நினைவாக மாறினாள்.

வெளிநாட்டிலிருந்து வந்த பிள்ளைகள், வீட்டினை விற்க முடிவு செய்தனர்.

அவர்களுக்கு அது ஒரு சொத்து.

ஒரு வீடு.

ஒரு பொருள்.

அவளுக்கோ அது ஒரு உலகம்.

நூற்றுக்கணக்கான புத்தகங்கள்

ஒவ்வொன்றிலும் அவளது கையொப்பம்.

ஒவ்வொரு கோப்பையிலும் ஒரு நினைவு.

ஒவ்வொரு பொன்னாடையிலும் ஒரு மேடை.

"எதனை எடுத்துச் செல்ல முடியும்?"

என்று அவர்கள் பேசிக்கொண்டனர்.

சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுத்தனர்.

மீதமுள்ளவை "பழைய பொருட்கள்" ஆனது.

அவை எல்லாம் வீட்டு வாசலுக்கு வெளியே குவிக்கப்பட்டன.

தெருவோரக் காட்சி.

ஒரு சிறுவன் ஆர்வமாக ஒரு கோப்பையைத் தொட்டான்.

அதன் அடியில் பொறிக்கப்பட்டிருந்த பெயரை அவன் வாசிக்க முடியவில்லை.

அவன் தாய் அவனை அழைத்துச் சென்றாள்.

ஒரு தெருநாய், புத்தகக் குவியலருகே நிழல் தேடி படுத்துக் கொண்டது.

காற்று, சான்றிதழ்களின் மீது தூசியைத் தூவியது.

சிறிது நேரத்தில் குப்பை வண்டி வந்தது.

தொழிலாளர்கள் அவசரமாகக் கைகளை அசைத்தனர்.

பொன்னாடைகள், கோப்பைகள், சாகித்திய விருது. ஒன்றன்பின் ஒன்றாய் இரும்புக் கூண்டுக்குள் விழுந்தன.

ஒரு உலோகச் சத்தம்.

அது ஒரு காலத்தின் முடிவைப் போல ஒலித்தது.

குப்பை வண்டி தொலைவில் மறைந்தது.

மாலைச் சூரியன் முழுதாய் சாய்ந்தான்.

வானம் சிவந்தது.

ஆனால் அந்த இரும்புக் கூண்டுக்குள் மறைந்தது புகழ் மட்டும்.

பாமாவின் சொற்கள் இல்லை.

அவள் எழுதிய நூல்கள் இன்னும் நூல கங்களில் இருந்தன.

ஒரு இளம் பெண் அவளது நாவலை வாசித்து தன் வாழ்க்கையைப் புதிதாய் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு மாணவன் அவளது கட்டுரையைப் படித்து சமூக அநீதியைப் பற்றி கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தான்.

அந்தக் கணங்களில்,

பாமா மீண்டும் பிறந்தாள்.

புகழ் நிலையானதல்ல.

விருதுகள் நிரந்தரமல்ல.

மேடைகள் மாறுபடுகின்றன.

ஆனால் மனிதன் உயிரோடு இருக்கும்போது அவன் விதைத்த சிந்தனை

அவன் தொட்ட மனங்கள்

அவனது எழுத்தின் உண்மை

அவை காலத்தைக் கடந்து நிலைத்திருக்கும்.

பாமாவின் வீடு விலைப்பட்டது.

அவளது வெற்றிக் கிண்ணங்கள், பரிசில்கள், விருதுகள் எல்லாமே குப்பைக்குள் மறைந்தன.

ஆனால் அவளது சொற்கள்..

தமிழின் இதயத்தில் இன்னும் துடித்துக் கொண்டிருந்தன.

**புகழும் பொருளும் நிலையற்றவை;**
**மனிதனின்**
**சிந்தனையும் செயலும்தான்**
**நிலையானவை.**

○○○

# மாதவிடாய்

கற்பெனும் புண்ணியப் பேறுடையாள்
கடைமிடற்றண்ண லுட லோடிணைவாள்
முற்றிடா இளநீர் முலையுடையாள்
முப்புரம் எரித்தவன் பார்வதியாள்
அற்புதமானவள் இவ் இளையாள்
கொற்றவைக் கோலமும் பூண்டிடுவாள்
கள்ளினை போலொரு மாமருந்தாள்
கனவெறி ஒன்றிட கொன்றிடுவாள்
அல்லலை அகற்றிட அவதரித்தாள்
அறம் செய விரும்பென பறைந்திருந்தாள்
அத்தனை ஆற்றலும் கொண்டிருப்பாள்
அரக்கனை வென்றெழும் நுண்ணிடையாள்
ஆயினும் மாவலி ஏற்றிடுவாள்
ஐயிரு நாட்கள் தீட்டினினால்
அணங்கினை அந்நாள் ஒதுக்கிடுவார்
அழுக்கவள் என்றென வெறுத்திடுவார்
உதிரம் ஓடா மல்இருந்தால்
உறவினர் மலடி என்றழைப்பார்
உரியது முறைப்படி தான் நடந்தால்
உடனிருந்துலவிட முகம் சுழிப்பார்

காரியத்தேவைக்கு கார்குழலாள்
கருவறைச் சுவர் உடைபாடுகளால்
காரிகை உடலொடு துன்புறுவாள்
காண்பவர் கழிவென உரைப்பதனால்
ஊன் உடல் கொண்டஇவ்
அமைப்பினினால்
ஒவ்வொரு நாளுமே திளைத்திடுவாள்
ஊழியம் செய்திடும் களைப்பினினால்
உள் மனதில் தினம் மரித்திடுவாள்

**யோகேந்திரன் பிரசாந்**
புவியியல் தகவல் விஞ்ஞானம்
பேராதனைப்பல்கலைக்கழகம்

சிறுகதை



# தகிப்பு



வெல்லாவெளி விவேகானந்தம்

கோவில்தீவுக் கிராமம் காரிருளில் மூழ்கிக் கிடந்தது. சில வீடுகளில் ஓரிரு மின்குமிழ்கள் வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டிருந்தன. எனினும் அங்கு அனேகமான வீடுகளில் அதுவும் இல்லாமல் போய் இருந்தன. அந்த கிராமத்து வீதிகளுக்கு மின் வெளிச்சம் தர அந்த பிரதேசசபை என்னவோ கஞ்சத்தனம் காட்டி இருந்தது. வானத்தில் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன நட்சத்திரங்கள். இரவு எட்டு மணியைத் தாண்ட முன்பே கிராமத்தை அமைதி ஆக்கிரமித்துக் கொண்டது. நாய்கள் ஊளையிடும் சத்தம் அந்த அமைதியான சூழலில் துல்லியமாக் கேட்டது. அங்கு இருந்த அன்னம்மாவின் வீட்டைக் குறி வைத்துச் சிலர் நடந்து போய்க் கொண்டு இருந்தனர். அந்த இருளும் பழக்கப்பட்டு இருந்தது அவர்களுக்கு. கட்டாக்காலி மாடுகள் அண்மையில் போடப்பட்ட "கொங்கறீட்" வீதியில் குறுக்கே அசை போட்டவாறு சொகுசாகப் படுத்துக் கிடந்தன.

அவர்கள் அவற்றை விலத்திக் கொண்டு முன்னேறிப் போயினர். அவர்களை மோப்பம் பிடித்தத் தெரு நாய்கள் பலமாகக் குரைத்தன. அவர்கள் செய்யப் போகும் காரியத்துக்கு அது இடையூறாக இருந்தது. "நாய்கள் நம்மைக் காட்டிக் கொடுத்துவிடும்". வாய் முணுமுணுக்கக்.. குனிந்து கல்லொன்றைக் கையில் எடுத்த குட்டிமணி பின்னால் குரைத்து வந்த நாய்களை நோக்கிப் பலமாக விளாசினான். அந்த இருட்டிலும் அவன் குறி தப்பவில்லை. 'வாள்.. வாள்..' எனக் கத்திக் கொண்டு அவை திரும்பி ஓட்டம் பிடித்தன. காரிருளும் அவர்களைக் கண்டுகொள்ள முடியாதவாறு அவர்கள் செய்யப் போகும் காரியத்துக்குத் துணை புரிந்தது.

"இஞ்சாருங்க.. நீங்க கொஞ்சம் எழும்புங்க. 'பக்கிள்' பலா மரத்தில் இருந்து கத்திது. அதைக் கல் எறிஞ்சி துரத்திடுங்க. என்னால படுக்க முடியல்லங்க.. பயமாக் கிடக்கு". நித்திரை வராமல் படுக்கையில் புரண்டவாறு கிடந்த அன்னம்மா எழுந்து தன் கணவனைத் தட்டி எழுப்பினாள்.

அவளுக்குப் பக்கத்தில் சற்று ஓரமாகக் கிடந்த சாக்குக் கட்டிலில் அசந்து தூங்கிக் கொண்டு இருந்தான் அவள் கணவன் கந்தசாமி. பகல் முழுவதும் கூலி வேலை செய்து வந்த சோர்வு அவனுக்கு.

"இப்பதான் எனக்குத் தூக்கம் வந்தது. நீயும் அதுக்குள்ள எழுப்பிப் போட்டா. பக்களத் துரத்த நான் ஒரு வழி பண்றன். நீ பேசாமப் போய்ப்படு".

அன்னம்மாவின் பக்கத்தில் அவளது சின்ன மகள் துளசி தூக்கத்தில் புரண்டாள். அடுத்த அறையில் இன்னும் வெளிச்சம் இருந்தது. அவளது மூத்த மகள் சுந்தரியின் அறைதான் அது.

"மகளும் இன்னும் தூங்காமல் இரிக்காள் போலத் தெரியுது. நம்மட ஊட்டுக்குக் கருக்கல் வேளையில் பொலிஸ் கூடவே வந்த காங்கேயன் அந்த அறையை விட்டுப் போகாமல் மகள் கூடவே இன்னமும் இருக்கானோ.. கடவுளே நான் இப்ப என்னத்தச் செய்யிற. அது ஆபத்தாச்சே. ஏதும் நடக்கக்கூடாதது நடந்துவிட்டால்.. நான்தான் அதை மறந்து அசந்து தூங்கி விட்டனே".

மனது "திக்" என்று அடித்துக் கொள்ளப் பயம் தொற்றிக் கொண்டது அன்னம்மாவுக்கு. பொலிஸ் கூடவே பாதுகாப்போடு வந்த காங்கேயன் பொலிஸை அனுப்பி விட்டு அங்கு நின்று விட்டான். அதுதான் எல்லாப் பிரச்சனைக்கும் இப்ப காரணமாகி விட்டது.

பக்கிளைத் துரத்தியடிக்கக் கல் எதுவும் கந்தசாமிக்கு கிடைக்காமல் போக அடுப்படியில் எரிந்து கிடந்த குறைக்கொள்ளிக் கட்டையை எடுத்து பக்கிள் கத்தும் திசையில் அவன் ஓங்கி விளாசி எறிந்தான். அது "சரக்" என பலா மரத்தின்மேல் விழுந்ததும் அதனால் எழுந்த சலசலப்புச் சத்தத்தில் பக்கிள் சடசடத்துச் சிறகடித்துப் பறந்தோடியது.

நாட்கூலி வேலையில் கிடைக்கிற இரண்டாயிரம் ரூபாவில் ஐந்நூறு ரூபாவை எடுத்துவிட்டு மீதியை மனைவியிடம் கொடுத்து விடுவான் கந்தசாமி. அந்தக் காசில் ஒரு "பியர் ரின்" வாங்கி கொள்வான். சோறு சாப்பிட முன்பு உடல் சோர்வுக்கு பியர் தேவையாக இருக்கும் அவனுக்கு. அன்று பொலிசில் நடந்த சம்பவமும் பொலிஸோடு காங்கேயன் வீட்டுக்குள் வந்த விதமும் கந்தசாமிக்குக் கொலை வெறியை ஏற்படுத்தி இருந்தது. தன் உள்ளக் குமுறலைக் கட்டுப் படுத்த முடியாமல் தவித்தான் கந்தசாமி.

"நான் என்ட ஊர் உறவுகளுக்கு என்ன பதிலச் சொல்ற..".

கந்தசாமிக்குக் கண்ணீர் மடை திறந்தது. அவன் அதனைக் கட்டுப் படுத்த முடியாது மௌனமாக அழுதான். 'ஏழை சொல் அம்பலம் ஏறுமா'. வலுவான பொலிஸ் கரங்களின் பின்புலத்தில் காங்கேயன் இருப்பதால் கையறு நிலையில் ஏதும் செய்ய முடியாமல் தவித்தான் கந்தசாமி.

"ஏழைகள் என்றாலே எல்லாருக்கும் இப்ப இளக்காரமாப் போச்சி. எளிய சாதிக்காரன் காங்கேயனும் என்ட வீட்டுக்குள் வந்து புள்ளையிட அறைக்குள் பூந்திரிக்கான். நான் என்னதான் செய்வன்". தனது இயலாமையை நினைத்து மனதுக்குள் பொருமினான் கந்தசாமி.

"கூலி வேலைக்குப் போனால்தான் என்ட வீட்டு அடுப்பும் எரியும். வேலைக்குப் போகா விட்டால் வீட்டுல உள்ளவங்கள் திங்கிறதுக்கும் ஒரு மண்ணும் கிடைக்காது. அன்னம்மா காலையில் எழும்பி பாலப்பம் சுட்டு விற்றவள். அரிசியும் தேங்காயும் கட்டுக்கடங்காமல் விலையேறி விட்டதால் பாலப்பம் சுட்டு விற்பதைக் கைவிட்டு விட்டாள்". தன் குடும்ப நிலைமையை நினைத்து மனம் உருகினான் கந்தசாமி.

"இந்த விலைக்கு அரிசி.. தேங்காய்.. வாங்கி அப்பத்தச் சுட்டு என்ன விலைக்கு விக்கிற.. நெருப்பில குளிச்சும் எனக்கு எந்தப் பயனுமில்லை". என்று நினைத்து எப்பவோ நிறுத்தி விட்டாள் அப்பம் சுடுவதை அன்னம்மா.

"இதுக்கு ஒரு முடிவு கட்டணும் இண்டைக்குக் காங்கேயனை மரத்தில கட்டி வச்சி அடிக்கணும். இனி எண்ட பெரியப்பா வீட்டுப் பக்கம் அவன் தலைவச்சிப் படுக்கக் கூடாது". கும்மிருட்டில் போய்க் கொண்டிருந்த குட்டிமணி கறுவிக் கொண்டான். அவன் வேறு யாருமில்ல. கந்தசாமியின் தம்பி கதிர்காமனின் மகன்தான் குட்டிமணி.

"இந்த இழவை இப்படியே விட்டால் ஊரே நாறிப் போகும் வெளியில நம்மட சாதிக்காரன் எவரும் தலை காட்ட முடியாது. ஒரு நிமிசமும் நாம் தாமதிக்கக் கூடாது". குட்டிமணி சொன்னதும் கூடவே வந்த மாஸ்டர் மகேசன் அதனை ஆமோதித்தான்.

"காங்கேயனுக்கு இஞ்ச இரிக்கிற பொலிஸ் நல்ல 'சப்போட்' மச்சான். அதுதான் காங்கேயன் பயமில்லாமப் பொலிஸோட கந்தசாமிப் பெரியப்பா வீட்டுக்குள் வந்திருக்கான்". குட்டிமணியின் தம்பி லிங்கன் அறிந்த தகவலைச் சொன்னான்.

"அவனே அம்பட்டன். அம்பட்டச் சாதி நம்மளோட எப்படிடா ஒட்ட முடியும். இது எப்படிடா நடந்திரிச்சி". தனது

ஆத்திரத்தை அடக்க முடியாமல் குட்டிமணி கொதிப்படைந்தான்.

"நம்ம ஊருக்குள் ஒரு காலமும் வராத பிரச்சனை. நம்மட பெரிய மனிசங்களும் பாத்துக் கொண்டு கிடக்கானுகள். ரோசம் மானம் இல்லாதவனுகள் தூ..". கூடவே உதவிக்கு வந்த குமாரும் கோபத்தில் காறித் துப்பினான்.

பக்கத்துக் கிராமத்தின் அம்பட்டச் சமூகத்தை சேர்ந்த காங்கேயனின் தகப்பன் கிட்டினன் நீண்ட காலமாகவே அந்தக் கிராமத்தில் சலூன் வைத்துத் தொழில் நடத்தி வருபவர். கிராமத்திலுள்ள வீடுகளுக்கு போய் முடி வெட்டிச் சவரம் செய்வார். அவர் வீடுகளுக்கு முடி வெட்ட வருவதைக் கண்டாலே சிறுசுகள் ஓட்டம் பிடிப்பார்கள். சிறுவர்களுக்கு அவரைக்

கண்டாலே பயந்தான். அவரும் வேலி ஓரமாக இருக்கும் மர நிழலில் குந்தி இருந்துதான் முடி வெட்டுவார். சுற்றிவர உள்ள வீட்டுச் சிறுவர்கள் அங்கு கொண்டு வரப்படுவார்கள். அவர் "சைட்டு"க்கு போடும் கை மெசின் "கிலி"யை உண்டுபண்ணும். கை மெசினைப் போடும் போது அது சில இடங்களில் தலைமயிரைப் புடுங்கி எடுக்கும். அந்த வலியில் உயிர் போய் வரும் சிறுவர்களுக்கு.

''நல்லா ஒட்ட வெட்டிடுங்க கிட்டினன்''.

அப்பபாமார் சொன்னதோடு முகச்சவரன் செய்யப் பக்கத்தில் கதிரையைப் போட்டு அமர்ந்து இருந்தார்கள்.

''சரி.. சரி நீ எழும்புடா. அடுத்து ஆர்டா. வந்து குந்தியிருடா''.

கிட்டினரிடம் இருந்து விடுபட்டவர்கள் 'கிளிசரியா' மரத்தில் குழையை எட்டி முறித்து முதுகில் விழுந்து கிடந்த முடியைத் தட்டிவிட்டு முழுகுவதற்கு ஆற்றுக்கு ஓடினார்கள். 'அந்தக் கிராமத்தின் கிழக்கு எல்லையில் பாயும் மூங்கில் ஆறுதான் ஊரவர் எல்லோரையும் குளிப் பதற்கு அரவணைக்கும்'. இனி இரண்டு மாதத்துக்கு பிறகுதான் முடி வெட்ட வருவார் கிட்டினன். கிட்டினன் ஊருக்குள் முடி வெட்டப் போனால் மகன் காங்கேயன் சலூனுக்குள் முடி வெட்ட வருபவர்களுக்கு முடிவெட்டி முகச் சவரம் செய்வான்.

காங்கேயனுக்கு இருபத்தைந்து வயது. நடிகர் முரளியின் சாயல் அவனுக்கு. கந்தசாமியின் மகள் சுந்தரியை ஒருநாள் கோயிலில் கண்டான். அவளும் அவனைப் பார்த்து விட்டாள். அவளைப் பார்த்த மறு கணமே பிரியம் கொண்டு விட்டான் காங்கேயன். சுந்தரிக்கும் அவளை அறியா மலே காங்கேயன் மேல் காதல் வந்து விட்டது. அடிக்கடி கோவிலில் சந்தித்துக் கொண்டனர். காதல் குலம் கோத்திரம்.. சாதியைப் பார்க்குமா. இருபது வயதான சுந்தரிக்கு அவனது சாதிபற்றி எதுவும் தெரியவில்லை. அவன்மேல் ஏற்பட்ட காதலே தெரிந்தது. பத்தாம் வகுப் போடு பள்ளிப் பக்கமே போகாதவள். நல்லது கெட்டது தெரியாத வயது. அவளுக்குக் காங்கேயனைப் பிடித்திருந்தது அவ்வளவுதான்.

''சுந்தரி உனக்கு என்னயப் புடிக்குமா''.

''ம்ம்.. ம் புடிக்கமலா உங்கிட்ட நான் கதைக்க வந்தன்''.

''உங்கட ஆக்கள் உன்னக் கலியாணம் கட்டிக்க என்னய உடுவாங்களா''.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது.

ஆனால் எனக்கு உன்மேல் இரிக்கிற காதல்தான் தெரியுது''.

அப்பாவியான சுந்தரி அன்று ஒரு நாள் கோயில் திருவிழாவில் தனியாக மறைவிடத்தில் வைத்துக் கதைத்ததை நினைத்து பார்த்தான் காங்கேயன்.

''சுந்தரி என்ட காதலுக்கு ஓம் சொல்லிப் போட்டாள் அவள நான் கை விடமாட்டன். எனக்கு என்னதான் நடந்தாலும் பாத்துக் கொள்ளலாம்''. மனதில் உறுதி செய்து விட்டான் காங்கேயன்.

''சுந்தரியோட ஆக்கள் இத எப்படி ஏத்துப் பாங்க. நான்தான் இதுக்கு ஒரு முடிவு எடுக்கணும். சுந்தரி பாவம். அவள் துணிந்து முடிவு எடுக்கமாட்டாள்''. துணிந்து காரியத்தில் இறங்கினான் கார்த்திகேயன்.

பொலிஸ் நிலையத்துக்குள் முடி வெட்டப் போகும் காங்கேயனுக்கு நிலையப் பொறுப்பு அதிகாரி உள்ளிட்ட அனைவரும் நல்ல பழக்கம்.

''சேர்''.

பொலிஸ் பொறுப்பதிகாரி முன் பவ்விய மாகப் பணிந்து நின்றான் காங்கேயன்.

''எப்பவும் நீ இப்படி இல்லடா. காங்கேயன் உனக்கு ஏதாச்சும் வேணுமா''.

''அது.. வந்து.. சேர்''. அவன் சொல்லத் தயங் கினான். வெட்கப் பட்டான்.

''சின்னதாக "கெல்ப்" ஒண்ணு எனக்கு நீங்க பண்ணும் சேர்''.

''ஓ..கே சொல்லுடா. நான் பண்றன்''.

''நான் லவ் பண்றன் சேர். அவங்க உயர்ந்த சாதிக்காரங்க என்னைய அவங்க சேத்துக் கொள்ள மாட்டாங்க சேர்''.

''ஓ அப்படியா. உன்னய விரும்பிறாளா அவளும்''.

''ஆமாங்க சேர்''.

சுந்தரியை அவன் தீவிரமாக "லவ்'' பண்ணும் விடயத்தைச் சொல்லி முடித்தான். விபரத்தை முழுமையாகக் கேட்ட பொலிஸ் அதிகாரி சுந்தரியின் தாய் அன்னம்மாவைப் பொலிஸ் ஸ்டேசனுக்கு அழைத்துப் பக்குவமாக எடுத்துச் சொல்லி காங்கேயனுக்குக் கல்யாணம் கட்டிக் கொடுக்குமாறு பணித்து விட்டார்.

அவள் என்ன செய்வாள் பயந்து போனாள். பாவம் ஏழைகள். பொன்னம்மாவுக்குப் பொலிசுக் குப் பணிந்து போவதைத் தவிர வேறு வழி

தெரியவில்லை. கூலி வேலைக்குப் போன கணவனும் வரவில்லை. மகளைக் கண்டிக்கத் திராணியற்று நின்றாள். அந்தச் செய்தி காட்டுத் தீ போல ஊருக்குள் பரவி விட்டது.

“பொலிசை எதிர்த்து நிக்க முடியுமா.. பாவம் அன்னம்மா”. பக்கத்து வீட்டு பரிமளம் பரிதாபப் பட்டாள்.

“அன்னம்மா நீ என்ன.. அந்த அம்பட்ட னுக்குக் கலியாணம் கட்டி வைக்கப் போறயா. ஊர் உலகம் உங்களக் காறித் துப்பி விடுமே பாத்து நடந்துக்க”.

ஆசாரங்களைக் கடைப் பிடித்துச் சாதி மிதப்பில் வாழும் அந்த சமூகத்துக்கு இது ஒரு பெரும் இடியாவே இறங்கியது. பொலிஸ் தலையிட்டதால் அவர்களுக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை.

“அந்தப் பெட்டையும் அவன விரும்பித்தாள். அதுதான் இப்ப பிரச்சினை. நாம எப்படி இதில தலையிட முடியும். விசயம் பொலிஸ் வரை போய் விட்டது. நம்மட ஊர்ப் பஞ்சா யத்தப் பொலிஸ் கேக்க மாட்டானுகள்”. அந்த ஊரின் கோயில் வண்ணக்கர் பொலிசுக்குப் போகத் தயக்கங் காட்டினார்.

“கந்தசாமி அன்னம்மா இருவரையும் எடுப்பித்து இதுக்கு ஒத்துக்க வேணாம் எண்டு எடுத்துச் சொல்லுவம்”.

“அதுகளால எப்படிச் சொல்ல முடியும். பயந்து போய்க் கிடக்குதுகள். பொலிஸ் சொல் வதை மீற முடியுமா. எதுவும் சரிவராது. கொஞ்சம் விட்டுப் பாப்பம். யோசிச்சு முடிவு எடுத்துக் காலையில பொலிசுக்குப் போவம்”. கோயில் முன்றலில் அன்று கூடிய பெரிய மனுசனுகள் கலைந்து போய் விட்டனர்.

குட்டிமணி குழுவினர் விடவில்லை. கந்தசாமி வீட்டைக் எந்நேரமும் கண்காணித்தனர். குட்டி மணி தன் பெரியப்பா கந்தசாமியின் குடும்பம் அவமானப்படுவதை நினைக்கவே இரத்தம் கொதித்தது குட்டிமணிக்கு.

“ஊருக்கே எங்கட பெரியப்பா குடும்பத்தால் அவமானம் ஏற்பட இனி ஒரு துளியும் இட மளிக்கக் கூடாது”. முடிவு எடுத்து விட்டான் குட்டிமணி.

அன்று முன் இரவில் பொலிஸ் கொடுத்த தைரியத்தில் காங்கேயன் பெரியப்பா கந்தசாமி வீட்டுக்குப் போய் சுந்தரியின் அறைக்குள் இருக்கின்ற தகவல் கிடைத்ததும் துடித்து எழுந்தனர் குட்டிமணி குழுவினர்.

“இன்று இரவு அவன் அங்கு தங்கினால் எல்லாமே நாறிப் போயிடும். இனி நாம் தாமதிக்கக் கூடாது. அந்த வீட்டுக்குள்ள வர அவனுக்கு என்ன தைரியம் இருக்கணும். அவனைப் பலா மரத்தில கட்டி வைச்சு வெளுக்கணும் மச்சான்”.

“சரிடா அவன்ட உயிருக்கு ஆபத்து வராமப் பாக்கணும். அவன அடிச்சி அவண்ட கையக்கால உடைக்க வேணும்”. மாஸ்டர் மகேசன் ஆலோசனை சொன்னான்.

குட்டிமணி குழுவினர் அனைவரும் திடீரென கந்தசாமியின் வீட்டுக்குள் புகுந்தனர். காங்கே யன் இதனைக் கனவிலும் எதிர் பார்க்க வில்லை. அவர்கள் உடனே அதிரடியில் இறங்கினர். புடரியில் பொல்லால் விழுந்த அடியில் நிலைகுலைந்து போனான் காங்கேயன்.

“அவனப் புடிச்சிக் கட்டுங்கடா”.

“டேய் என்னைய உடுங்கடா. நான் ஒருவரை யும் சும்மா உடமாட்டன். எல்லாரையும் இப்பலே பொலிசில் அடைக்கிறன் இருந்து பாருங்கடா”. சத்தமிட்டான் காங்கேயன்.

“டேய் என்னடா.. அவ்வளவு திமிறா உனக்கு. பொலிசக் காட்டி இனி எங்களப் பய முறுத்த முடியாது பாத்துக் கொள்”.

“உனக்கு எங்கட பொண்ணுதான் வேணுமா. உண்ட சாதியில உனக்குப் பொண்ணு இல்லையா. அடிங்கடா அவன”. அடி பலமாக விழுந்தது அவனுக்கு. வலி பொறுக்காமல் சத்தமிட்டான் காங்கேயன்.

“அவன் கத்துற சத்தம் வெளிய வரக் கூடாது. அவன் வாயைக் கட்டுங்கடா முதலில்”.

காங்கேயன் கையிரண்டும் பிணைக்கப் பட்டு வாயும் கட்டப்பட்ட நிலையில் பலா மரத்தில் பிணைக்கப்பட்டான். காரியங்கள் துரிதமாக நடந்தன.

“சுந்தரி வெளியில வாடி. உன்னாலதான் இதெல்லாம். நான் உன்னைக் கொன்று போட்டு தூக்குக்குப் போறன்”. அவள் தமையன் குட்டிமணி ஆக்ரோசத்துடன் கத்தினான்.

“அவள் தெரியாமச் செஞ்சி போட்டாள். அவள நீ ஒண்டும் செய்யாத மனே. இவன்தான் அவள மயக்கிப் போட்டான்”. தகப்பன் கந்தசாமிக்கு மகள் மேல் பரிதாபம் ஏற்பட்டது.

“பெரியப்பா ஊருக்குள்ள நீங்க தலை நிமிர்ந்து வாழ முடியுமா சொல்லுங்க. எப்படி அவனை வீட்டுக்குள் வர ஒத்துக் கொண்டீங்க”. குட்டிமணி தனது பெரியப்பா கந்தசாமியைத் திட்டித் தீர்த்தான்.

“மெனே.. எனக்கு என்னடா தெரியும். பொலிஸோடு வந்து ஊட்டுக்க போனான். நான் என்னடா செய்வன்”.

சற்று நேரத்தில் ஆட்டோ வந்தது. சுந்தரியை ஏற்றிக் கொண்டு ஆட்டோ மறைந்து போனது. சுந்தரி அழுது ஆர்ப்பரித்தாள். குட்டிமணி ஓங்கிவிட்ட அறையில் மயக்கமுற்றாள் சுந்தரி. சுந்தரியின் தங்கை துளசி பயத்தில் உறைந்து போய் அறை மூலையில் பதுங்கிக் கொண்டாள். அக்கம் பக்கம் இருந்தவர்களுக்கு இருட்டில் நடப்பது எதுவும் தெரியவில்லை.

“ஏதோ சம்பவம் நடக்குது”. என்பது மட்டும் புரிந்தது. பொலிசுக்குப் பயந்து எவரும் வெளியே வரவில்லை. பரிமளம் கம்பி வேலிக்குக் கீழால் புகுந்து வந்து இருட்டில் மறைந்து நின்று கொண்டு எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டாள்.

“அட நம்மட குட்டிமணி ஆக்கள்தான் நல்லாச் செஞ்சிருக்கானுகள்”.

மனதுக்குள் மகிழ்ந்த பரிமளம் அங்கு வந்த சுவடே தெரியாமல் இருட்டில் மறைந்து போய் விட்டாள். மரத்தில் கட்டப்பட்ட காங்கேயன் மரத்தில் இருந்து அவிழ்க்கப்பட்டு வாசலில் மல்லக்க கிடத்தப் பட்டான் அவன் மயக்க நிலையில் இருந்தான். அவன் கால் வீங்கி இருந்தது.

“பெரியப்பா நான் சொல்றதக் கவனமாகக் கேளுங்க. நாங்க இப்ப போறம். காங்கேயன் மயக்கமாக கிடக்கான். மயக்கம் போனதும் அவன் கைக்கட்ட அவுத்துவுட்டுத் துரத்தி விடுங்க’’.

குட்டிமணி குழுவினரும் அன்று இரவே தலைமறைவாகி விட்டனர். கார்த்திகேயன் நேரே பொலிசுக்கு போவான்.. பொலிஸ் தேடும்.. என்பது அவர்கள் ஊகித்ததுதான். சுந்தரி இரவோடு இரவாக நகரத்தில் உள்ள உறவினர் வீட்டுக்குக் கொண்டு செல்லப் பட்டாள்.

“சுந்தரி அக்கா உங்களால் எவ்வளவு பிரச்சன பாருங்க நாம போற இடம் இப்ப பொலிசுக்குக் தெரியக் கூடாது பாத்துக்கோ”. கூடவே ஆட்டோவில் பயணித்த குட்டி மணியின் சகோதரி பக்குவமாகச் சொன்னாள்.

“ஏனக்கா நீ அவன விரும்புன அவன் ஆரு. அந்தச் சாதி நமக்கு ஒத்து வருமா. அத நீ யோசிக்க மாட்டியா. உனக்கு எங்களப்பத்திக் கவலை இல்லையா. நம்பட ஊர் உறவு என்ன சொல்லும்”.

“நானு என்னதான் செய்வன். இனக்கு அவனப் புடிச்சிருக்கு. காங்கேயன் நல்லவன். என்னய உயிரா நேசிச்சான். நானும் அவனை நேசிச்சன். நான் வேற எதையும் யோசிக்கல்ல”.

“அக்கா உன்னால நம்ம குடும்ப மானம் போகக் கூடாது புரிச்சுக்கோ”. சுந்தரி அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. நடந்ததை நினைத்துப் பார்த்தாள்.



''என்னால காங்கேயன் உயிருக்கு ஆபத்து ஏதும் ஏற்படுமோ''. உள்ளம்

உடைந்து அழுது தீர்த்தாள் சுந்தரி. கூடவே வந்த குட்டிமணியின் சகோதரியிடம் தனது உள்ளக் கிடக்கையைப் பகிர முடியாமல் தடுமாறினாள்.

''கடவுளே நீதான் காங்கேயனைக் காப்பாத்தி என்னோடு சேர்த்து விடு. காங்கேயன் எனக்கு வேணும். எங்க காதலை வாழவிடு இறைவா''. ஆட்டோ பயணத்தின் போது மனதுக்குள் பிரார்த் தனை செய்து கொண்டாள் சுந்தரி.

காங்கேயன் மயக்கம் தெளிந்தான். கைக் கட்டைக் கந்தசாமி அவிழ்த்து விட்டதும்.. நொண்டி நொண்டி அழுதபடியே நேரே பொலிஸ் நிலையம் போனான். பொலிஸ் அதிகாரி யிடம் முறையிட்டான்.

''காங்கேயன் நீ பயப்பட வேணாம். நான் பாத்துக் கொள்றன்". பொலிஸ் அதிகாரி நம்பிகை யூட்டினார்.

''உனக்கு அடிச்சவங்களை நீ அடையாளம் காட்டுவியா".

''தெரியும் சேர். அவர்களது வீடும் தெரி யும் சேர். நீங்கதான் சேர் சுந்தரியக் கண்டு புடிச்சித் தரணும்".

''நீ பயப்புடாத நான் இருக்கன். கான்ஸ்டபிள் கூடவே வருவாங்க. அவர்கள் எல்லாரையும் "அரஸ்ட்'' பண்ணிக் கொண்டு வரட்டும். உனக்கு அவர்கள் முன்னால் சுந்தரியை ஸ்டேசனில் வைச்சு "ரிஜிஸ்தர் மெரேஜ்'' பண்ணி வைக்கிறன்".

நிலையப் பொறுப்பு அதிகாரி உத்தரவிட்டார். பொலிஸ் ஜீப் ஊருக்குள் அன்று அதிகாலை விரைந்தது.

''மச்சான் குட்டிமணி நாம போலீசில் பிடி பட்டால் அடித்தே நொறுக்கிப் போடுவா னுகள்".

''குமாரு சொல்றது சரிதான் குட்டிமணி. இதுக்கு ஒரு வழிய தேடணும் நாம இப்போ தைக்கு ஊரைவிட்டு ஓடிப்போய் எங்காவது ஒழிக்கிறதான் ஒரே வழி". மாஸ்டர் மகேசன் வழிப்படுத்தினான்.

''எத்தனை நாளைக்கு ஒழிக்கிறதோ தெரியல்லையே".

''இப்ப நாம பொலிசில் புடிபடக் கூடாது. புடிபட்டால் காரியம் கெட்டுப் போகும். எனக்கும் தொழில் பிரச்சனை''. நிலமையை மாஸ்டர் மகேஸ் புரிய வைத்தான். குட்டிமணி உள்ளிட்ட அனைவரது வீடுகளும் போலீஸார் முற்றுகைக்கு உள்ளானது.

''பகல் பன்னிரெண்டு மணிக்குள்ள பொலிசில் அவர்களை ஒப்படைக்காது விட்டால் உங்க எல்லாரையும் கொண்டு போய் "லொக்கப்'' பில் போடுவம்". வீட்டில் இருந்தவர்களையும் பொலிஸ் எச்சரித்தது. பயத்தில் மிரண்டு போயினர்.

''பொலிசில் எல்லாரும் வந்து உடனே சரணடையுங்கள்''. வீட்டில் இருந்து அடிக்கடி போன் அழைப்பு. குட்டிமணி குழுவினர் பயத்தில் மிரண்டு போய் மாஸ்டர் மகேசன் நண்பன் முரளி ஊடாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜமால்டீன் உதவியை நாடினான்.

''மகேஸ் நீ மட்டும் உடனடியாக வா. ஏ.எஸ்.பியிடம் நாம் கதைப்பம்''.

அன்று இரண்டு மணி போல பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியின் மேசைமேல் இருந்த போன் அலறியது.

''சேர் நீங்க சொல்லுங்க". பொறுப்பதிகாரி பணிவுடன் கதைத்தார்.

''அங்கு என்ன நடக்குது. ஒரு பிரச்சனை இப்போ ஊர்ப் பிரச்சினையாக்கி விட்டீர். இனி அங்கு ஊரே திரண்டு வரும். உமக்கு அது புரியுதா".

''சேர் நீங்க.."

"மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பு போல்" ஆனார் பொலிஸ் பொறுப்பதிகாரி.

''ஊர் ஏற்றுக் கொள்ளாத காதல் விவகாரம். சாதிப் பிரச்சனை அது. சமூகங்களுக்குள் ஊடுருவ விடக் கூடாது. சாதிப் பிரச்சனை ஊரில் தலை தூக்கினால் பொலிசால் அதைக் கட்டுப்படுத்த முடியாது. பெரும் ஆபத்து ஏற்பட்டு விடும். நீர் அவனைத் துரத்தி விடு. அந்தப்பிரச்சனையை இத்தோட முடித்து விடு".

போனை வைத்து விட்டார் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர். அதிர்ச்சியில் உறைந்து போனார் பொறுப்பதிகாரி. காலையில் இருந்தே பொலிஸ் நிலையத்தில் இருந்த காங்கேயன் இரவில் விழுந்த அடியின் வலியால் அவஸ்த்தைப்பட்டான். அப்போது பொலிஸ் பொறுப்பதிகாரி அவனை அழைத்தார்.

''இது ஊர்ப் பிரச்சனையாகிப் போய் விட்டது காங்கேயன். உம்மை அந்த சமூகம் எப்படி ஏற்கும். அந்தச் சுந்தரியும் ஊரே விட்டே போய் விட்டாள். இரண்டு ஊர்களுக்கு இடையே பெரிய கலவரம் ஏற்படும் அபாயமும்

உருவாகியுள்ளது. நீரும் சலூன் தொழில் இந்த ஊரில் செய்ய முடியாது. போய் விடு".

பொறுப்பதிகாரி காங்கேயனைக் கைகழுவி விட்டார். பொலிஸ் நிலையத்தைவிட்டு வெளியேறிய அவனுக்கு உள்ளம் குமுறியது. சுந்தரி கிடைக்காது போன அவமானம் அவனைப் பாடாய்ப் படுத்தியது.

"நான் காதலைத் தொலச்சுப் போட்டு இனி என்னத்துக்கு இருக்கணும்".

"காங்கேயா எங்கடா போறா".

"எங்கேயோ கேட்ட குரல் போல இருக்கே". திரும்பிப் பார்த்தான் காங்கேயன்.

அவனிடம் வழமையாக முடி வெட்டும் ஆட்டோ ஓட்டுனர் பரசுராம்.

"எனக்கும் நடக்க முடியல்ல. ஆட்டோவில போவம்". காங்கேயன் ஆட்டோவை நெருங்கினான்.

"காங்கேயா கடைக்குப் போறியா".

"பரசுராமண்ண கடை திறக்கல்ல. அப்பாவும் பயந்து போய் வீட்டில கிடக்காரு. நான் பொலிசில கிடந்து வாறன். உங்களுக்குத் தெரியுமே. என்னை வீட்டில கொண்டு விடுங்க. எல்லாரும் பயந்து போய்க் கிடக்காங்க".

"எனக்கு எல்லாம் தெரியும்டா. நீ ஏறு கொண்டு போய் விடுறன்".

"அண்ணை வேற என்ன தெரியும் உங்களுக்கு".

"நீ முதல்ல ஏறுடா சொல்றன்".

"சுந்தரி வீட்டுல நீ அடிபட்டுக் கிடந்ததை நான் பாத்தன். என்னால எதுவும் செய்ய முடியல்ல. நான்தான் சுந்தரிய ஆட்டோவில கொண்டு போய் ரவுணில விட்டன்". உயர்ந்த சாதியிலும் ஒரு மனிதம் இருந்ததைக் காங்கேயன் கண்டு கொண்டான்.

"அண்ணை நீங்க முதலில என்ட வீட்ட ஆட்டோவ விடுங்க. சில பொருட்கள் அங்க எடுக்கணும். இண்டைக்கு முழுநாளும் ஆட்டோ எனக்கு வேணும். ஆட்டோவில் "பெற்றோல்' நிரப்பிக் கொள்ளுங்க காசத் தாறன்".

"என்னடா சொல்றா காங்கேயா".

"அண்ண நீங்கதான் உதவி செய்யணும். உங்களக் கடவுள் போலத்தான் நான் பாக்கிறன்".

"சரிடா நீ என்னன்டு சொல்லு. நான் செய்றன். என்னோட வா".

"உடனே ரவுணுக்குப் போவம். சுந்தரிய ஒழிச்சி வைச்சிக்கிற வீட்ட எனக்குக் காட்டுங்க. என் காதல் மேல் எனக்கு நம்பிக்கை இரிக்கி. சுந்தரி என்கூட வருவாள். நீங்க எங்களக் கொண்டு போய் மூதூரில சித்தி வீட்டுல விடுங்க. நான் சுந்தரியக் கைவிடமாட்டன். நான் முழுசா உங்களத்தான் நம்புறன் அண்ணை".

"சரிடா உனக்கு நான் உதவி செய்றன். நீ கவலைப்படாத".

"அண்ணை சாதியக் காட்டி எங்கட காதலக் கொல்லப் பாக்கிறாங்க".

"காங்கேயா சாதித் திமிர் இன்னும் எங்கடை ஆக்களுக்கு விட்டுப் போகல்ல. அதுக்கு நீதான் சாவு மணி அடிக்கணும் ".

"அண்ணை நீங்களும் அந்தச் உயர்ந்த சாதிதானே. உங்களிட்ட இரிக்கிற மனிதம் ஏன் அண்ணை உங்கடை ஆக்களிட்ட இல்லாமப் போச்சி".

"அது எங்கட உயர்ந்த சாதி மனிசரின் வறட்டுக் கௌரவம். 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாரதியார் சொன்னதுகூட எங்கட சாதிக்கு இன்னும் மண்டையில் ஏறல்ல காங்கேயா. சரிடா அது கிடக்கட்டும். இப்ப நீ செய்யப் போறது சாதாரண காரியமில்லடா".

அன்று கருக்கல் வேளை நகரில் பாதுகாப்பாக இருந்த சுந்தரி எவருக்கும் தெரியாது பரசுராம் துணையுடன் காங்கேயன் கூடவே காணாமல் போனாள். சாதி வெறி பிடித்த சுந்தரியின் ஊரவர்களுக்கு நள்ளிரவுதான் செய்தி தெரிய வந்தது. அவர்கள் சிலர் சேர்ந்து காங்கேயன் வீட்டுக்குப் போய் அடாவடித்தனம் செய்தனர். அதே நேரம் பரசுராம் ஆட்டோ மூதூர் நகரைச் சென்று அடைந்தது.

"அண்ண நீங்க செஞ்ச இந்த உதவியை ஒரு நாளும் நான் மறக்க மாட்டன்". இதைப் வைச்சுக் கொள்ளுங்க.


"சரிடா காங்கேயன். நான் இதப்பத்தி மூச்சு விடமாட்டன். இப்ப நீ செஞ்சிருப்பது சாதாரண காரியமல்ல. இது ஒரு அக்கினிப் பிரவேசம். காங்கேயா கவனமாக இரு. ஊர்ப் பக்கம் இப்போதைக்கு நீ வர வேணாம். உன்னக் கண்டாலே அடிச்சுக் கொன்று வாவியில போடுவானுகள்". பரசுராம் புறப்பட்டார்.

"சுந்தரி நாம விலங்க உடைச்சி நெருப் பாற்றைத் தாண்டி இருக்கம். நீ கவலைப்படாத சுந்தரி. உனக்கு நானிருக்கன். நாம வாழ்ந்து காட்டுவம்". சுந்தரியின் கண்களில் கசிந்த கண்ணீரைத் துடைத்து விட்டான் காங்கேயன்.

❍❍❍

# எருக்கலம்பிட்டி புதுப்பள்ளிவாசல் தர்ஹா மற்றும் கப்பலொலி தர்ஹா

## (இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுத் தொல்லியலை நிறுவுவதில் முதன்மையானவை)





**லத்பான் றோஸின்**
(பேராதனைப் பல்கலைக்கழகம்)

எருக்கலம்பட்டி பிரதேசம் என்பது இலங்கை மன்னார் தீவில் கிழக்கு திசையில் மூன்று பக்கங்கள் கடலாலும் மேற்கே தரை யாலும் சூழப்பட்ட ஒரு குடாப் பிரதேசமாகும். இந்தப் பிரதேசத்தின் பிரதான எல்லைகளாக பின்வறுவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

- வடக்கு - கடல்
- மேற்கு - தலைமன்னார் வீதியில் ஒலை தெருவாய் சந்தியிலிருந்து மினாரா ஊடாக கடற்கரைக்குச் செல்லும் பாதை.
- தெற்கு - ஊசி முகாந்துரை தொடக்கம் இரண்டாம் வட்டார எல்லை வரை கடலாக வும் அதனைத் தொடர்ந்து மன்னார் தலைமன்னார் வீதியும்
- கிழக்கு - கடல்

**புதுப்பள்ளிவாசல் தர்ஹா** (Shrine)

இலங்கையில் இப்பிரதேசத்தின் அமைவிடம் வரலாற்றுரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. ஏனெனில் கடல் வழிப் பாதை ஊடாக பிரயாணம் செய்து வருபவர்கள் ஏதோ ஒரு வகையில் இப்பிரதேசத்தை பயண வழியில் தங்குமிடமாகவும், ஏற்றுமதி இறக்குமதி செயல்முறை செய்வதற்கு மிகவும் இலகுவான பிரதேசமாகவும் அரபு தேசத்த வர்களும் வெளிநாட்டவர்களும் கண்டு பயன் படுத்தியமையாகும்.

ஏதோ ஒரு வர்த்தக நோக்கில் வந்த அரேபியர்களூடாக இப்பிரதேசத்தில் 8ம் நூற் றாண்டின் முதற் பகுதியிலே முஸ்லிம்கள் குடியேறி வாழ்ந்துள்ளார்கள் என்பதை வரலாற்று ஆசிரியரான ***அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன்*** என்பவரின் கருத்தினூடாக நாம் அறியலாம். இதன் அடிப்படையில் ஆரம்பகால அரேபியர்களின் வருகையில் அடிப்படையில் பிரதான இரண்டு இறை நேசர்கள் அடக்கம் பெற்றுள்ள இடம்தான் புதுப்பள்ளிவாசல் தர்ஹா (Shrine) ஷரீபாகும்.

எருக்கலம்பட்டிக்கு மேற்கு திசையிலுள்ள கடற்கரைப் பரப்பின் வடகரையில் தர்ஹா நகர் குடியிருப்பு பகுதியில் இந்த தர்ஹா அமைந்திருக்கின்றது. இங்கு 40 முழம் நீளமான (60 அடி) ஒரு ஸியாரமும் அதற்கு சற்று அருகில் சாதாரண அளவினான ஒரு இறைநேசப் பெண்ணினது ஸியாரமும் (Shrine) காணப்படுகிறது. இந்த 40 முழ நீளமான ஸியாரம் இயற்கையாகவே தோன்றி முற்காலத்தில் வாழ்ந்த ஒரு நல்லடியாருக்கு கனவில் ஒரு இறைநேசரின் (Wali - Friends of Allah) ஸியாரமாக காட்டப்பட்தாக இன்றுவரை நம்பப்படுகிறது.

அதேபோல் கடலில் அடைந்து வந்த அரபு எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மூன்று பெட்டி களில் இரண்டு ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக தலைமன்னார் கப்பலொலி தர்ஹாவிலும் அந்த ஆணினது சகோதரனான மற்றையது இந்த புதுப்பள்ளிவாசலிலும் அடக்கம் செய்யு மாறு கனவில் அப்போதைய நல்லடியார் ஒருவருக்கு காட்டப்பட்டதற்கு இணங்க இங்கு அடக்கம் செய்யப்பட்டிருப்பதாகவும் நம்பப் படுகிறது. அதன் அருகில் அடக்கம் செய்யப் பட்டிருக்கும் பெண்ணினது ஸியாரம் (Shrine) பற்றிய மேலதிக தகவல்கள் எதுவும் கிடைக்க வில்லை.

இங்கு பல அற்புத நிகழ்ச்சிகள் நடை பெற்று வந்திருப்பதால், ஊர்மக்கள் அதனை கண்ணியப்படுத்தி பாதுகாத்து வருகின்றனர். தீராத நோய் உள்ளவர்கள், பிள்ளைப்பேறு இல்லாதவர்கள், பேய் பிசாசு பிடித்தவர்கள் போன்றோர் உத்தரவு கிடைக்கும்வரை இந்த தர்ஹாவில் நாட்கணக்கில் தங்கி இருந்து வருவது வழக்கமாக காணப்படுகிறது.



இவ்வாறு வந்தவர்களின் அக்குரணையைச் சேர்ந்த ஒரு இளந்தம்பதியினர் பிள்ளை பேறுக்காக நேர்ச்சை வைத்து இங்கு தங்கி இருந்ததாகவும் அவர்களுக்கு குழந்தை கிடைத்த மகிழ்ச்சியில் நேர்சையாளர்கள் தங்கி இருப்பதற்கு வசதியாக சில நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுத்ததோடு தர்ஹாவைச் சுற்றி சுற்று மதிலும் கட்டிக் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த அல்ஹாஜ் என் எம் சாலிகு. என்பவர் ஐவேளை தொழுகையை நிறைவேற்றுவதற்காகத் தொழுகை அறை ஒன்றையும் அங்கு அமைத்துக்கொடுத்தார். மக்கள் ஊரைவிட்டு விரட்டியடிக்கப்பட்ட பின் அங்குள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டிருந்தாலும் தர்ஹா (*Shrine*) பாதுகாக்கப்பட்டுள்ளது. இது அங்கு அடக்கம் பெற்றுள்ள இறைநேசரின் கராமத்தாக (அற்புதம்) நோக்கப்படுகிறது.

இன்றும் பிற முஸ்லிம்கள் கிராமங்களில் இருந்து வந்து நேர்ச்சை (*The vow made to a deity*) கொடுத்துச் செல்பவர்களும் உள்ளனர். 1970 ஆம் ஆண்டுகளில் இங்கு உத்தரவுக்காக தங்கியிருந்தவர்களால் அக்காலப் பகுதியில் அதிகமான மக்கள் குடும்பங்களாக ஓலைக் கொட்டில்கள் அமைத்தும் இந்த தர்ஹாவைச் சுற்றி நாட்கணக்கில் தங்கி இருந்துள்ளனர். அத்தோடு கொடியேற்றி கந்தூரி (*A festival celebrated by Muslims annually in memory of Muslim saints*) கொடுக்கும் நிகழ்ச்சிகளும் நடைபெற்று வந்ததாக அறிய முடிகிறது.

**கப்பலொலி தர்ஹா** (Shrine)

ஏற்கனவே கூறப்பட்டதை போன்று இதே போன்ற 40 முழம் நீளமான (60அடி) இரண்டு ஸியாரங்கள் தலைமன்னார் கிராமத்திலும் காணப்படுகின்றன. இது தலைமன்னார் ***கப்பலொலி தர்ஹா*** என அழைக்கப்படுகிறது. இங்கும் பல கராமத்துகள் (அற்புதங்கள்) நடைபெறுகின்றன. பிற ஊர்களில் இருந்தும் இன, மத வேறுபாடுகள் இன்றி பலரும் இவ் இடத்தை தரிசித்து செல்கின்றனர்.

இது எக்காலத்தைச் சேர்ந்தது என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் கிடைக்கவில்லை. இருப்பினும் வாய்வழி மூலமாக நம்பப்பட்டு வருகின்ற செய்திகளின்படி கடலில் மிதந்து வந்த இரண்டு நீளமான பொட்டிகளை கண்டு அங்குள்ள கிறிஸ்தவ மக்கள் எடுப்பதற்காக முயற்சித்ததாகவும், அவை பிடிபடாமல் போகவே அங்கிருந்த இந்துக்களில் சிலர் முயற்சித்தும் பிடிபடவில்லையாம்.

பின்னர் சில முஸ்லிம்கள் அவைகளை எடுப்பதற்கு முயற்சிக்கவே அவர்களுக்கு இலகுவாக கிடைத்ததாகவும் அவைகளை அவர்கள் தலைமன்னார் பழைய பாலத்தடியில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் பின்னர் ஒருவருக்கு கனவில் தோன்றி அந்த இரண்டு பெட்டிகளையும் எடுத்து தற்போது அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தில் அடக்குமாறு வேண்டப்பட்டதற்கு இணங்க தற்போதைய இடத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் நம்பப்படுகிறது.

தாராபுரத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற போஸ்ட் மாஸ்டர் நவ்பர் என்பவரின் தகவலின் படி 2000ஆம் ஆண்டில் அதன் அருகில் முகாமிட்டிருந்த கடற் படையினர் அரை நிர்வாண உடையுடன் அந்த தர்ஹாக்களுக்கு அருகில் உள்ள கிணற்றில் குளித்துக் கொண் டிருக்கும்போது அங்கு உருவம் ஒன்று வந்து அவர்களை தடுத்ததாகவும் கடற்படையினர் உருவத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்ட போது உருவம் அவர்கள் மீது தாக்குதல் நடாத்தியதால் அவர்களின் ஒருவர் இறந்தும், ஒன்பது பேர் புத்தி பேதலித்தவர்களாக ஆனதாகவும் அக்கடற்படை முகாம் அதிகாரி தன்னிடம் தெரிவித்து இவர்களது சக்தி பற்றி தன்னிடம் விசாரித்ததாகவும் கூறினார்.

ஒருமுறை சானான் என்றழைக்கப்படும் ஒரு மரமேறி நுங்கு வெட்டுவதற்காக அதன் அருகில் நின்ற பனை மரத்தில் ஏறியபோது அங்கு தர்ஹா காத்துக் கொண்டிருந்தவர்கள் கூறினார்களாம் அதாவது இங்கு மெய்யுறக்கம் கொண்டுள்ள அவ்லியாக்கள் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் இவ்வாறு மரம் ஏற வேண்டாம் என்றும், அதற்கு அந்த மரமேறி அவர் கீழே இருக்கிறார் மரம் மேலே இருக் கிறது என்னை அவரால் ஒன்றும் செய்ய இயலாது எனக் கூறி கத்தியை ஓங்கிய போது அக்கத்தி அவனது கழுத்தை வெட்டியதாகவும் அவ்விடத்திலேயே அவன் விழுந்து இறந்த தாகவும் வாய்மூல கதை ஒன்று இருந்து வருகிறது.

இந்த ஸியாரத்தில் அடக்கப்பட்டுள்ள வர்களை ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஆக கனவில் கண்டவர்களும் உள்ளனர். அதே போல் பிறமதத்தவர்கள் இவை முதல் மனிதன் ஆதாம் மற்றும் ஏவா ஆகியோர்களது கல்ல றைகள் என்று நம்பிக்கை கொண்டு வருவ தையும் காணக்கூடியதாக உள்ளது ஆனால் இஸ்லாத்தில் இதற்கு எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை.



**புதுப்பள்ளிவாசலிலுள்ள 40 முழம் நீளமான ஸியாரமும் சாதாரண அளவிலான ஒரு பெண்ணினது ஸியாரமும்**

எனவே மேற்படி விடயங்களை அடிப்படை யாகக் கொண்டு இவ்விரண்டு தர்ஹாக்களையும் நோக்கும்போது பின்வரும் முடிவுகளை எம்மால் பெற முடிகிறது.

- இவ்விடம் சமய நல்லிணக்கத்தை பேணு கின்ற ஒரு தளமாக இன்று வரை காணப் படுகிறது.
- உலகில் 40 முழ மனிதர்கள் வாழ்ந்த காலப் பகுதியிலே இலங்கையில் முஸ்லிம்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு பாரிய சான்றாக இவ்விடம் காணப்படுகிறது.
- புராதன காலத்தில் அரபு முஸ்லிம்களுக்கும் இலங்கைக்கு இடையிலான தொடர்பினை நிறுவுவதற்கு ஒரு சான்றான தளமாக இப்பிரதேசம் காணப்படுகிறது.
- இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று ரீதியான தொன்மையை நிறுவுவதற்கு இறை நேசர்களின் ஸியாரக்கள் மிகவும் பங்களிப்புடையது என்பதை புலப்படுத்துகிறது.
- யுத்த காலத்தைக் கடந்தும் இன்று வரை இவ்விடம் எவ்வித சேதாரங்களும் இன்றி பாதுகாக்கப்படுகின்றது என்றால் அவ்விடத்தில் அடக்கம் பெற்றுள்ள இறைநேசர்களின் கராமத்தே அதற்கு பிரதான காரணமாகும்.

**உசாத்துணைகள் :**


அப்துல் ஹக் முஹம்மத் அரூஸ், (2020), எருக் கலம்பிட்டியின் பூர்வீகமும் அங்கு வாழும் இறைநேசர்களும், எருக்கலம்பட்டி கல்வி வட்டம்.

மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் வரலாறும் பண்பாடும் வரலாற்று ஆய்வு நூல் முஸ்லிம் சமய பண் பாட்டலுவல்கள் திணைக்களம் - கொழும்பு.

எருக்கலம்பிட்டி முஸ்லிம்களின் வரலாறும் பாரம் பரியங்களும் - எம். கே. எச். முஹம்மது

*Sitrambalam, S.K. 1992. Kingdom of Jaffna Thirunelvely, University of Jaffna publications*

*Sir Twynan W.C. 1900. Report on the Ceylon " Pearl Fisheries of Ceylon" The journal of the Ceylon Branch of the Royal Asiatic Society.*

*An interesting Ethnical Group from Mannar "Ceylon Historical Journal – 1110, Journal-1110, July 13-17-Peris.*


❍❍❍

**சிறுகதை**



# பேச்சுத் திருமணம்



**கலைமாமணி**
**கா. தவபாலன்**

மோகன் பேராதனைப் பல்கலைகழகத்தில் படித்த காலத்தில் மாணவர் போராட்டங்களில் ஈடுபட்டவன். பெண்ணுரிமை, சீதன முறை ஒழிப்பு, சாதி மறுப்பு, சுரண்டல் எதிர்ப்பு போன்ற தலைப்புகளில் பட்டிமன்ற மேடைகளில் பேசித் திரிந்தவன். படிப்பு முடிந்து சோதனைகளும் பாஸ் பண்ணியபின் உத்தியோகம் கிடைத்து கொழும்புக்குப் போனான். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அங்கத்தவரானபின் தனது பேச்சுத் திறமையை மேலும் வளர்த்துக் கொண்டான்.

இவன் தேவையில்லாத விடயங்களைப் பற்றிப் பேசித் திரிகின்றான். இவனுக்கு ஒரு கால்கட்டுப் போட்டு விட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று எண்ணிய இவனது பெற்றோர் மகனுக்குத் தோதான எத்தனையோ இடங்கள் பார்த்தும் ஒன்றும் சரிவந்தபாடாக இல்லை. பெண் அழகாக இருக்கவேண்டும், பட்டதாரியாக இருக்க வேண்டும், சீதனம் தர வேண்டும், குடும்பப் பாங்கான பெண்ணாக இருக்க வேண்டும். இவை பெற்றோரின் முக்கிய நிபந்தனைகள்.

"எல்லாம் சரிதான். ஆனால் சீதனம் வாங்காமல் திருமணம் செய்ய வேண்டுமென்பது எனது கொள்கை. நான் இது பற்றி மேடைகளில் நிறையப் பேசியுள்ளேன். எனக்கென்று வரும்போது மாற்றிப் பேச முடியாது." என்றான் மோகன்.

தம்பி, நான் சொல்வதைக் கேள்.

மேடையில் பேசிய எல்லாவற்றையும் அமுல்படுத்தியவர்கள் இவ்வுலகத்தில் எவரும் இலர். சும்மா முஸ்பாத்தியாக பேசிய எல்லாம் வேதவாக்காக மாறிவிடுமா என்ன. சொத்து பத்து இருக்கவேணும், பெண்கள் அணிந்து திரிய நகை வேணும், தங்கையின் கலியாணச் செலவுகளுக்கு donation வாங்க வேணும். நாம் வசிக்கும் வீடு உனது தங்கைக்கு சீதனமாகக் கொடுக்க வேணும். எனவே திருமணம் செய்யப் போகும் உனக்கு வசிக்க ஒரு வீடு வேணும். ஆகவே எப்படிப் பார்த்தாலும் தமிழர் திருமண விவகாரங்களில் சீதனம் என்பது ஒரு முக்கிய அம்சமாகும். தயவுசெய்து இதை விளங்கிக்கொள்.

கொள்கை, இலட்சியம் என்று எதைப் பேசினாலும் இலங்கையில் எந்த ஒரு மாற்றத்தையும் கொண்டு வரமுடியாது என்ற யதார்த்ததை மோகன் முதன்முறையாக உணர ஆரம்பித்தான்.

இது இவ்வாறிருக்க வவுனியா நகரிலிருந்து ஒரு டீச்சர் பெண்ணைப் பேசி வந்தார்கள். பெண்ணின் பெயர் வசந்தி. ஜாதகம் பார்த்து பொருத்தம் என்று அறியப்பட்டது.

சீதனம் பேச வேண்டுமென்றார் அப்பா. அம்மாவும் அதை வழிமொழிந்தா. மகன் வேண்டாமென்றான்.

சரி, அதைப் பிறகு பார்ப்போம். முதலில் மற்ற விஷயங்கள் பொருந்தி வருமா என்று பார்ப்போம் என்றார் அப்பா. ஆயினும் பெண்ணின் தகப்பனை ரகசியமாக சந்தித்து என்ன சீதனம் கொடுப்பீர்கள் என்று கேட்டு விட்டார்.

வயல், தோட்டம், மேட்டுக் காணி, காசு,

நகை எல்லாம் கொடுப்போம் என்றார் பெண்ணின் அப்பா.

கோவிலில் பெண் பார்க்கப்பட்டது. உயரம் 5”4” அளவில் இருக்கும். பச்சை நிற சாறியும் அதற்கேற்ற ரவிக்கையும் அணிந்திருந்தாள். நீளமான தலை மயிர், மா நிறம், அளவான உடல் வாகு. அம்மா கேட்டா தம்பி, பெண்ணைப் பிடித்ததா என்று.

மகன் பெண்ணின் அழகில் மயங்கியோ என்னவோ ஓம் என்று சொல்லி விட்டான். மற்ற எல்லாம் தருவார்களாம். வீடு தர மாட்டார்களாம் பரவாயில்லையா என்றா அம்மா.

வீட்டைக் கட்டிக் கட்டிக்கொள்ளலாம் தானே என்றான் மகன். குடியிருக்க ஒரு வீடு வேணும் தானே, வீட்டோடு வேறிடம் பார்ப்போமா என்றார் அப்பா.

பெண்ணைப் பார்த்து ஓம் என்று சொல்லிய பின் இனி குழப்ப முடியாது என்றான் மாப்பிள்ளை. எமது ஊர்களில் தோட்டம், வயல் செய்யும் வசதி உள்ளது ஆகவே உழைத்து வீடு கட்டலாம் என்று மாப்பிள்ளை மேலும் கூறினான்.

சரி, உனது விருப்பப்படியே செய்வம் என்றார் அப்பா.

தேவர்கள் பூ மாரி பொழிய திருமணம் ஜாம் ஜாம் என்று நடைபெற்று முடிந்தது.

வசந்தி வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியை. மோகனும் கொழும்பிலிருந்து இடமாற்றம் பெற்று வவுனியாவுக்கு வந்து சேர்ந்தான்.

வசந்தி சொன்னாள், தனது தாய் வீட்டிலேயே கூட்டுக் குடும்பமாக வாழ்வோம் என்று.

அது பிரச்சனைக்குரிய விடயம். வாடகைக்கு வீடு எடுத்து தனிக் குடித்தனம் போவோம் என்றான் மோகன்.

ஓம், அப்படிச் செய்யலாம், வாடகை வீட்டில் இருந்துகொண்டு எமக்கென்று ஒரு வீட்டைக் கட்டிக் கொள்வோம் என்றாள் வசந்தி.

வீடு கட்டக் காசு வேண்டுமே!

எமக்கு தந்த காணியில சீதனக் காசை வைத்து வீட்டைக் கட்டத் தொடங்குவம். காணாட்டி வங்கியில லோன் எடுத்து சமாளிக்கலாம். சீதனமாக வந்த வயல் தோட்டத்திலும் பயிர் செய்து லோனைத் திருப்பிக் கட்டலாம் என்றாள் வசந்தி.

ஓம் வசந்தி, சூப்பர் ஐடியா. அப்பிடியே செய்வம் என்றான் மாப்பிள்ளை.

தாரமும் குருவும் தலைவிதிப்படி!

❍❍❍

# எல்லாம் வினாவே

பலரோடு பழகிய மனம்
சிலரை மட்டும் ஆழமாக்கி விடுகின்றது
சிந்திக்க தொடங்கியதில் இருந்து
ஏனோ
சில உறவுகள் சிதறிக் கொண்டே செல்கின்றது
உண்மையில்
வாழ்க்கை ஒரு மாயாஜாலம் அல்லவா?
மாயமான விந்தைகளை காட்டி
சில நேரம்
மரணப்படுக்கை வரை கொண்டு செல்கின்றது
நான் இப்போது எங்கு தவறு கண்டு கொள்வது
என்னிலா...?
மனதிலா...?
உறவிலா....?
எல்லாம் வினாவே.



**குமாரசூரியர் யர்சினி**
**(கவியாழ்)**
மாவடிச்சேனை, வெருகல்,
திருகோணமலை.

சிறுகதை



# கனவு




**சுந்தரிமணியன்**
புதூர்
இந்தியா.


**வை**கறையில் எழுந்த குளிர்ந்த காற்று நர்மதாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. பின்பனிக் காலத்தில் ஒரு பக்கம் குளிராகவும் ஒரு பக்கம் வெப்பத்தையும் வாரி வழங்கிக் கொண்டிருந்தது. அவளது கணவன் மணிமாறன் நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவனது அருகில் சென்று அவனது தலை முடிக் கற்றைகளைக் கோதியவள் அவன் நெற்றியில் தன் இதழ்களைப் பதித்தாள். சட்டென தூக்கம் கலைந்த மணிமாறன்,

“என்னடா தூங்கும்போது கொஞ்சுற. விடிஞ்ச பிறகு வச்சிக்கலாம்” என்றவுடன்,

“இன்னிக்கு ரொம்ப அழகா இருக்கீங்க. அதான்” என்று முகத்தைத் தோள்பட்டையால் வலித்தாள்.

“இரு உன்னைய எந்திரிச்ச பிறகு வச்சிக் கறேன்” என்றான். அவனை விட்டு நகர்ந்து தோட்டத்துப் பக்கம் வந்தாள். தோட்டத்திலிருந்த பூவரச மரங்களிலும் மாமரங்களிலும் அணில்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு கீச் கீச் சென்று கத்திக்கொண்டும் தவிட்டுக் குருவிகள் ராகமிட்டுக் கொண்டும் பக்கத்தில் இருந்த மின்சாரக் கம்பிகளில் இரட்டைவால் குருவிகள் அமர்ந்து கொண்டும் அந்த இளங்காலையைப் பொலிவாக்கிக் கொண்டிருந்தன.

நர்மதா இன்னிக்கு என்ன டிபன் செய்யலாம் மாறன் போனவாரமே பூரி கேட்டார். பேசாமல் பூரி செய்து சென்னா மசாலா செய்துவிடலாம்னா சென்னா ஊறப் போடவில்லை. பூரி கிழங்கு செய்துவிடலாம் என்று முடிவு-செய்து அவன் எழுமுன் எல்லாவற்றையும் முடித்துவிடும் நோக்கத்தோடு பாத்ரூம் போய் குளித்துவிட்டு வந்து, கிச்சனுக்குள் நுழைந்தாள். ஒரு மணிநேரத்தில் எல்லாவற்றையும் முடித்து வந்து மணிமாறனை எழுப்பினாள். மாறன் எழுந்து பல்துலக்கி நர்மதாவிடம் வந்தான். அவள் தேநீர் தந்தவுடன் வாங்கி அருந்திவிட்டு,

“என் தங்கமே உன்னைய மாதிரி பொண்டாட்டி கிடைக்க நான் என்ன புண்ணியம் பண்ணினேன்னு தெரியல” என்று அவள் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளினான். அவள் அகமகிழ்ந்து போய் சிரித்தாள். அவளின் கபடமில்லாத உள்ளத்தின் அழகு முகத்தில் பிரதிபலித்தது.

“நல்லா ஐஸ் வைக்கிறீங்க. எனக்கு ஜலதோசம் வந்துடப் போகுது” என்றவளைப் பார்த்து,

“இல்லப்பா. நிஜமாத்தான் சொல்றேன். இப்ப உள்ள மனைவிங்க வீட்ல இருந்துட்டே புருசனை என்ன வேலை வாங்கலாம்னு யோசிக் கறாங்க. ஆனா நீ வேலைக்குப் போய்ட்டும் ஒரு நாள் கூட என்னை வேலை வாங்குனது இல்ல” என்று அகமகிழ்ந்தான். இவர்களின் மகிழ்ச்சியைக் கண்டு கிளிகளும் தோட்டத்திலிருந்து கீச் கீச் என்று கத்தி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வாழ்த்தின.

“சரிப்பா குளிச்சிட்டு வாங்க. உங்களுக்குப் பிடிச்ச பூரியும் கிழங்கும் பண்ணியிருக்கேன். சாப்பிடலாம்” என்றதும் பாத்ரூமிற்குள் நுழைந்தான். குளித்து முடித்தவுடன் சாமி கும்பிட்டு, டைனிங் டேபிளுக்கு வந்தான். சுடச்சுட பூரியும் கிழங்கும் நர்மதா பரிமாற ஆவலாக உண்ண ஆரம்பித்தான். சாப்பிட்டு முடித்தவுடன்,

“நல்லா இருக்குடா” என்று மனம் குளிர்ந்து பாராட்டினான். மகிழ்ச்சியோடு சிரித்தவள்,

"சரிப்பா நாளைக்கு எங்க அப்பா அம்மாவ பாத்துட்டு வரலாம்னு இருக்கேன். நீங்க என்ன சொல்றீங்க?" என்றவளைப் பார்த்தவன்,

"சரி சந்தோசமா போயிட்டு வா" என்றவனிடம்,

"ஏம்பா நானா போக எனக்குத் தெரியாது. நீங்க வந்தீங்கன்னா, அவங்க சந்தோசப் படுவாங்க"

"எனக்கும் வரணும்னு ஆசையாத்தான் இருக்கு. எனக்கு ஒரு வேலையிருக்கே. முடிச்சுட்டு வர மதியம் ஒன்னு ஆகும்" என்றவுடன் அவள் முகம் வாடுவது கண்டு,

"சரி நீ முன்னாடி கிளம்பிப் போ. நான் மதியம் சாப்பாட்டுக்கு வந்திர்றேன்" என்றவுடன் மலர்ந்தவள், "நான் போய் நாளைக்குப் போட டிரஸ் எடுத்து வைக்கிறேன்" என மான்குட்டி மாதிரி துள்ளிக்குதித்து ஓடினாள்.

இப்படியாக நடந்தபோது படக்கென கதவு திறக்கும் சத்தம்கேட்டு கண் விழித்தாள். சே எல்லாம் கனவுதானா? நிஜமில்லையா?

"ஏய் நர்மதா விளக்கு வக்கிற நேரமாச்சு. இன்னுமா தூக்கம்? சோம்பேறி எழுந்து வீடு கூட்டு" என்று ஆங்காரமாய்க் கத்திய மணிமாறன் அவளது இடுப்பில் ஓங்கி மிதித்தான். வலியில் ஆவென அலறியவள் அவனிடமிருந்து கெட்ட நாற்றம் வர அவன் குடித்திருக்கிறான் என்பது அறிந்து அதிர்ந்துபோய் அரக்கப் பரக்க எழுந்து துடைப்பத்தைக் கையில் எடுத்தாள். அவன் குடித்திருந்தால் என்ன செய்வான் என்று அவனுக்கே தெரியாது. இன்று கிடைத்த அடி கொஞ்சம்தான். கோபம் அதிகமாக இருந்தால் கையில் கிடைத்ததை எல்லாம் எடுத்து வெளுப்பான்.

இவ்வளவு நேரம் கண்டதெல்லாம் கனவா? மணிமாறன் இந்தக் கனவுல கண்ட மாதிரி என்னிக்குவாது அன்பா இருந்திருக்கானா? அப்பா அம்மாவ பார்த்து எத்தன நாளாச்சு? இந்தக் கனவுல கண்ட மாதிரி மணிமாறன் என்னிக்காவது சந்தோசமாக அப்பா, அம்மாவ பார்க்க விட்ருக்கானா? நம்மளால கனவுல மட்டும்தான் குடிகாரனைக் கட்டுனதுக்கு மகிழ்ச்சியா இருக்க முடியும்போல என்று நினைத்துக்கொண்டாள். கனவின் பிரதிபலிப்பு முகத்தில் மகிழ்வைத் தர வலியை மறந்து வேலை பார்ப்பதில் மும்முரமானாள் நர்மதா.

○○○

# போர்

ஏக தலைவன் நானென்றே
எங்கும் இடரின் கூக்குரலாய்!
நாக மாயே தீண்டுகின்ற
நஞ்சாய் மனிதம் அழிவினிலே!

சோக மொன்றே பொழுதாகிச்
சொரியும் கண்ணீர்க் கடலாக
போகு மிடமும் அறியாது
புழுங்கித் துடிக்கும் பாலகர்கள்!

புனிதர் பட்டம் நாடிநின்று
புரிவ தெல்லாம் பெருங்கொடுமை!
மனிதம் அழிக்கும் போராலே
மருகிப் போகும் மனிதநேயம்

கனிய வளங்கள் கருக்குவதால்
கதியை யிழக்கும் உலகியலும்!
தனித்த மனிதர் ஆணவத்தால்
தரனி யெங்கும் தடுமாற்றம்!

மனிதம் இல்லாப் போராலே
மாசாய்க் கண்டது அழிவொன்றே
இனியும் இங்கே போர்வேண்டாம்
இடுக்கண் களைய உதவிடுங்கள்!

கனிந்த ஆயுள் ஒருமுறையே
கருக்குஞ். செயலை நிறுத்திடுங்கள்!
தனித்துத் துடிக்கும் குழந்தைகளின்
தவிக்கும் குரலும் கேட்கலையோ!

மதங்கள் எல்லாம் அன்பினையே
மனத்தில் நிறுத்தி நிற்கையிலே
அதர்மப் போர்கள் மதப்பேரால்
ஆயிர மாயிர முயிர்ப்பலிகள்!

சிதறு காயாய் வாழ்க்கையையே
சிதற டிக்கும் வெற்றிகளில்
அதர்மம் ஒன்றே தளைப்பாகி
ஆயுள் இழந்து மகிழ்விங்கே!

**கீத்தா பரமானந்தன்**

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்...



பேராசிரியர்
துரை.மனோகரன்

## நினைவில் என்றும் நிலைத்து நிற்பவர்

ஞானத்தின் ஸ்தாபகரும், அதன் முன்னாள் ஆசிரியரும், எழுத்தாளருமான ***தி. ஞானசேகரனின்*** மறைவு, அவரை அறிந்தவர்களுக்கும், ஞானத்தோடு தொடர்பு கொண்டவர்களுக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தும் நிகழ்வாக அமைந்து விட்டது. ஞானசேகரனும், நானும் யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மாணவர்கள். நான் அங்கு ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது, அவர் அப்போதைய எச்.எஸ்.ஸி (தற்போதைய க.பொ.த. உயர்தரம்) வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். அப்போது அவர் பொலிடோல் பொன்னர் என்ற நாடகத்தை எழுதி, அதனை இயக்கி, கதாநாயகன் பாத்திரமாகிய பொன்னராகவும் சிறப்பாக நடித்திருந்தார். முழு நகைச்சுவை நாடகமாகிய அதில் இடம்பெற்ற "ஓசி எண்டால் பொன்னன் பொலிடோலும் குடிப்பான்" என்ற வசனம் இப்போதும் என் ஞாபகத்தில் உள்ளது. இந் நாடகத்தின் மூலம், அவர் முதன்முதலில் ஒரு நாடக ஆசிரியர், நடிகர், இயக்குநர் என்ற முறையிலேயே எனக்கு அறிமுகமானார். பின்னர் தான் அவர் சிறுகதை, நாவல் துறைகளிலும் கால் பதிக்கத் தொடங்கினார் என்று நினைக்கிறேன். அவரது சில நூல்களுக்கு நான் அணிந்துரை வழங்கியுள்ளேன்.

ஞானசேகரனது எழுத்துச் சாதனைகள் பலரும் அறிந்ததே. சிறுகதை, நாவல்துறைகளில் அவர் தமது சிறந்த ஆளுமையைப் பதிவு செய்தமை போலவே, ஞானத்தின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் தமது பங்களிப்பினைத் திறம்பட வெளிப்படுத்தினார். தமக்குப் பின்னரும் ஞானம் சிறந்த முறையில் தொடர்ந்து வெளிவரக்கூடிய ஆக்கபூர்வமான அத்திபாரத்தை அவர் அமைத்திருந்தார் என்பது, அவருக்குப் பெருமைதரும் விடயம் ஆகும். உலகளாவிய ரீதியில் அவரது எழுத்துப் பணிகளும், ஞானத்தின் ஆசிரியப் பணியும், நூல் பதிப்புப் பணிகளும் அவருக்குப் பெருமை சேர்த்துள்ளன. ஒரு நிறைவாழ்வு வாழ்ந்த மனிதராக அவர் எப்போதும் நினைவு கூரத்தக்கவர். ***ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவருக்கு உரிய இடம் தனித்துவமானது***.

## தமிழ்நாட்டில் புதிய சாதனை

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், பலரும் எதிர்பார்த்ததைப்போல ***விஜய்*** வெற்றிவாகை சூடி, ***முதல்வராகவும் பதவி ஏற்றுள்ளார்***. புதிதாகக் கட்சி தொடங்கி, இரண்டே இரண்டு வருடங்களில் தனிக்கட்சியாக எடுத்த எடுப்பில் 108 ஆசனங்களை வெற்றிகொண்டு, பிற கட்சிகளின் உதவியுடன் ஆட்சி அமைத்துள்ளார். ஆனானப்பட்ட ***எம்.ஜி.ஆர்*** கூட நீண்டகால அரசியல் அனுபவத்தின் பின்னரே ஆட்சிபீடம் ஏறமுடிந்தது. ஆனால், அரசியல் அனுபவமே அற்ற, முழுநேரச் சினிமா நடிகராக வலம்வந்த விஜய், தாம் சந்தித்த முதலாவது தேர்தலிலேயே பலரும் ஆச்சரியப்படும் பெரு வெற்றியைப் பெற்றுள்ளமை சாதாரண விடயம் அல்ல. சினிமாக் கவர்ச்சி ஒருபுறமும், தமிழ்நாட்டை ஆண்டுவந்த பழைய கட்சிகள்மீது மக்கள் கொண்டிருந்த கடுமையான வெறுப்புணர்வும் விஜய்யின் வெற்றிக்கு முக்கிய காரணங்கள் எனலாம். முதல் அமைச்சராகப் பதவி ஏற்றபின், அவர் பல கட்சிகளையும் சார்ந்த தலைவர்களையும் சந்தித்து, அவர்களது வாழ்த்துகளைப் பெற்றமை, அவரது அரசியல் நாகரிகத்துக்குச் சிறந்த உதாரணமாகும். 1967இல் ***சி.என். அண்ணாத்துரை*** தேர்தலில் வென்று, முதன்முதலில் ஆட்சி அமைத்த போதும், இதேபோன்ற அரசியல் நாகரிகத்தையே கடைப்பிடித்தார். அதற்குப்பின், எந்தத் தமிழ்நாட்டு முதல்வர்களும் இத்தகைய அரசியல் நாகரிகத்தைக் கடைப்பிடிக்கவில்லை. விஜய்யின் ஆட்சி எந்த முறையில் அமையப் போகிறது என்பதைப் பொறுத்துத்தான் அவரது அரசியல் எதிர்காலம் விளங்கப்போகிறது. அதற்குச் ***சற்றுக் கால அவகாசம் தேவை***.

இவ்வளவு காலமும் திராவிடப் பாரம்பரியக் கட்சிகள் என்ற பெயரில் உலவிவந்த தி.மு.கவும், அ.தி.மு.கவும் உண்மையில் ஊழல் பாரம்பரியக் கட்சிகளாகவே இயங்கிவந்துள்ளன. இரண்டுமே கொழுக்கட்டையும், மோதகமும்தான். தி.மு.கவுக்கு இன்னொரு "சிறப்பும்" இருக்கிறது. கருணாநிதி காலத்தில் இருந்து குடும்ப அரசியலைத் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்திய "பெருமை" தான் அது. ஊழலைத் தமிழ்நாட்டு அரசியலில் அறிமுகப்படுத்திய "முன்னோடி"யாகவும் ***கருணாநிதி*** விளங்குகிறார். அவர் அரசியலில் அறிமுகப்படுத்திவைத்த ஊழல் செயற்பாட்டை, காலப்போக்கில் இன்னொரு கட்டத்துக்கு எடுத்துச்சென்ற "புகழ்" ***ஜெயலலிதா***வுக்கு உரியது. தமிழ்நாட்டு மக்கள் பொறுமையோடு காத்திருந்து, ஊழல் பாரம்பரியக் கட்சிகளுக்கு நல்ல "பாடம்" கற்பித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டு மக்கள் ***ஸ்டாலினுக்கும்***, அவரது கட்சிக் கும், நல்ல புத்தி புகட்டியும், அவர் தமது மகன் உதயநிதியையே எதிர்க்கட்சித் தலைவர் ஆக்கியிருக்கிறார்!

இந்தமுறை தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் இடம்பெற்ற இன்னொரு நல்ல அம்சம், ***சீமான்*** என்ற ஏமாற்றுப்பேர்வழியின் படுதோல்வியாகும். அவர் ஈழத்து விடுதலைப் போராட்ட முக்கியஸ் தரின் பெயரை, தமது அரசியல் பிழைப்புக்காகப் பயன்படுத்திவந்துள்ளார். அவரின் உள்ளும் புறமும் அறிந்தவர்கள், அவர் விடயத்தில் ஏமாறவேமாட்டார்கள். இலங்கைவாழ் தமிழ் மக்களில் ஒருசாராரும், புலம்பெயர் தமிழ் மக்களில் ஒருசாராரும் அவரை இன்னமும் நம்பி ஏமாந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழ் நாட்டு மக்களில் பெரும்பாலானோர், அவரின் பருப்பு இனியும் வேகாது என்பதைத் தேர்தலில் சரியாகக் காட்டியிருக்கிறார்கள். உண்மையில் அவர்களைப் பாராட்டவேண்டும்.

## இருவேறு நிகழ்வுகள்

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் நிகழ்ச்சிகளுக்கு ஒருபோதும் குறை வில்லை. அண்மையில் என்னை மகிழ்வித்த இரு நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்றன. தற்போது இப்பல்கலைக்கழகத்தில் எம்.ஏ கற்கையை மேற்கொண்டிருக்கும் இளம் படைப்பாளிகளான ***எஸ். சுடர்நிலா***வும், ***யே. கிறித்து ராஜா***வும் முறையே ***தனித்தலையும் சூரியன்*** என்ற கவிதைத் தொகுதியையும், ***கடற்கொலைகள்*** என்ற சிறுகதைத் தொகுப்பையும் தந்துள்ளனர். தனித்தலையும் சூரியன் வெளியீட்டு நிகழ்ச் சிக்குத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் தலைமை வகித்தார். வாழ்த்து ரையைத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஆன் யாழினி சதீஷ்வரனும், நூல் அறிமுக உரையை ர. மதுமிதனும் நிகழ்த்தினர். நூல் விமர்சனத்தைக் கவிஞர் முல்லை முஸ்ரிபா வழங்கினார். அடுத்த நாள் நடைபெற்ற கடற் கொலைகள் சிறுகதைத் தொகுப்பு நிகழ்ச்சிக்கும் பேராசிரியர் பிரசாந்தன் தலைமை தாங்கினார். வாழ்த்துரையைத் தமிழ்த்துறைச் சிரேஷ்ட விரிவுரையாலர் கலாநிதி எம்.எம். ஜெயசீலனும், நூல் அறிமுக உரையைப் பிரகலாதன் நிஷங்கனும் வழங்கினர். நூல் விமர்சன உரையை நான் நிகழ்த்தினேன்.

சுடர்நிலாவின் கவிதைத் தொகுதி, அவர் எதிர்காலத்தில் சிறந்தவொரு கவிஞையாகப் பிரகாசிக்கப் போகிறார் என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. அதேபோன்று, கிறித்துராஜாவின் சிறுகதைத் தொகுப்பு, நமது நாட்டுக்கு ஒரு நல்ல சிறுகதைப் படைப்பாளி கிடைத்துள்ளார் என்பதை வெளிப்படுத்தும் முறையில் விளங்குகிறது. இவர்கள் இருவரும் ஞானத்தில் எழுதிவருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இருவரும் தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது எம்.ஏ மாணவர்களாகவும் விளங்குகின்றனர் என்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

***கண்டி கலை கலாசாரச் சங்க***த்தின் நிகழ்ச்சி ஒன்று அண்மையில் கண்டியில் இடம்பெற்றது. அதன் ஸ்தாபகர் கலைஞர் ராஜா ஜென்கின்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கையின் முதல் தமிழ் நாவலாசிரியர் சித்திலெப்பை, பத்திரிகையாளர் க.ப. சிவம், பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கர் ஆகியோர் நினைவுகூரப்பட்டனர். பலர் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில், இளம் பாடகி சுருதிக்காவின் இனிய பாடலும் இடம்பெற்று, பலரையும் கவர்ந்தது. நடன ஆசிரியை பகீரதியின் இரு மாணவிகளின் அருமையான ஒரு நடனமும் நடைபெற்றது. இசைக்கலைஞர் சுனிலின் இனிய சக்ஸபோன் இசை செவிகளுக்குச் சிறந்த விருந்து.

❍❍❍

சிறுகதை



# சொல்லாத செய்திகள்



-கஸ்ஸாலி அஷ்ரஃப்-

**பா**டசாலை விடுமுறை வந்தது. பெற்றோர், பாதுகாவலர் சிலர் வந்து தம் பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர்.

கணவன் விட்டுச்சென்றதற்குப் பிற்பாடு பிள்ளைகளைப் பராமரிக்க வழியற்ற நிலையில் இஹ்ஸானாவின் உம்மா வெளிநாடு செல்லும் முடிவுக்கு வந்தார். உம்மாவும் மௌத்து வாப்பா பச்சை குடிகாரன். பிள்ளைகளைப் பொறுப்பாக யாரிடமும் விட்டுச்செல்ல முடியவில்லை. பிள்ளைகள் இன்னும் அனாதரவாகி விடுவார்களோ என்ற அச்சத்தில் வெளிநாட்டு எண்ணத்தைக் கைவிட்டுவிட்டார்.

ஒன்றும் ஓடாத நிலையில் யாரோ ஒருவரது வழிகாட்டலில் இஹ்ஸானாவை எங்கள் நிலையத்திலும், ஆண் பிள்ளையை வேறொரு நிலையத்திலும் சேர்த்துவிட்டார். கொழும்பில் ஒரு வீட்டில் தங்கிநின்று வேலை செய்வதனால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டுதான் வயதாளி வாப்பாவின் மருத்துவம் மற்றும் செலவுகளைச் சமாளிக்க முடிகின்றது.

முன்பெல்லாம் விடுமுறைகளுக்குப் பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்துச் செல்லும் அவர், கடந்த சில ஆண்டுகளாக அப்படிச் செய்வதில்லை. இருந்த குச்சு வீட்டையும் மாமா அபகரித்துக் கொண்டதற்குப் பிறகு எங்குதான் போய்த் தங்க? ஆறுநாள் குறுகிய விடுமுறை என்பதனால் தாத்தா வீட்டுக்கு அழைத்துச்செல்ல முடியும். அப்படிச் செய்வதாயினும் பெல்மதுல்ல சிறுவர் நன்னடத்தை அலுவலகத்துக்குச் சென்று அனுமதிக் கடிதம் எடுத்து வரவேண்டும். அதற்கென ஒருநாள், இங்கு வந்து அழைத்துச் செல்ல ஒருநாள், விடுமுறை முடிவடைந்ததும் மீண்டும் வந்து ஒப்படைக்க ஒருநாள் எனக் காலம் கழிந்துவிடும். இந்தத் தடைகளையெல்லாம் தாண்டி அழைத்துச் செல்ல நினைத்தாலும் வேலை செய்யும் வீட்டு எசமானி லீவு தர ஒரேயடியாக மறுத்துவிட்டாராம். "எங்கடவர் மிச்சம் காலத்துக்கு பொறகு லண்டனிலிருந்து வரப்போற. வேலவெட்டி நெறயிருச்சிய. இப்பிடி லீவெடுக்கியெண்டா போக வேண்டியதுதான்...."

விபரம் தெரிந்த காலத்திற்குப் பிறகு வீட்டையோ ஊரையோ இஹ்ஸானா கண்டதில்லை. வாப்பா யாரென்றே தெரியாது. இரண்டாம் பெண்டாட்டியுடன் இரத்தினபுரி ஜன்னத்து பள்ளிவாசலுக்கு அருகில் வசிப்பதாக உம்மா சொல்லக் கேட்டிருக்கிறாள். குடும்பத்தைப் பற்றி விசாரிப்போருக்கு பட்டும் படாமலும் பதில் சொல்லிச் சமாளிப்பாள். நிலையத்திலுள்ள மற்றப் பிள்ளைகளைப் போலவே விடுமுறையில் செல்ல அவளுக்கும் ஆசைதான். பெற்றோருடன் வீடு செல்லும் சகாக்களைப் பார்த்துப் பெருமூச்சு விடுவதோடு சரி.

•••

முன்பெல்லாம் வருடத்துக்கு தவணை விடுமுறை மூன்றுதான். ஆகக்கூடினால் இடையிலொரு நோன்பு விடுமுறை வரும். நாட்டின் காலநிலை போலவே அதுவும் இப்போது அடிக்கடி குழம்பிப் போயுள்ளது.

டித்வா புயலின் தாக்கத்தின் காரணமாகப் பாடசாலைகளுக்குத் திடீரென விடுமுறை வழங்கப்பட்டது. அசாதாரண சூழ்நிலை காரணமாக பிள்ளைகளை அழைத்துச்செல்ல பெற்றோர் வரவுமில்லை.

ஓரிடத்தில் அடைபட்டுக் கிடக்காமல் சுதந்திர மாகச் சுற்றித் திரிய வாய்ப்புக் கிடைப்ப தனால் விடுமுறை என்றாலே பிள்ளை களுக்குக் கொண்டாட்டம்தான். உம்மா வாப்பாவோ, பொறுப்பான ஒருவரோ வந்து அழைத்துச் செல்வார்கள். ஆனாலும், எதிர்பாராமல் வந்த விடுமுறையால் எங்கள் நிலையப் பிள்ளைகளுக்கோ வளவுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கவேண்டி வந்தது.

ஓரளவு சுமுக நிலைக்குப் பின்னர் பாடசாலை மீண்டும் ஆரம்பமாகியது. ஆனால் ஒரு வாரத்திலேயே மீண்டும் வந்தது டிசம்பர் விடுமுறை.

மறுநாள் காலையிலேயே சிலர் வந்து தம் பிள்ளைகளை அழைத்துச்சென்றனர். பின்னேரம் இன்னும் சிலர் வந்திருந்தனர். இருபத்திரண்டு பேரில் ஒன்பது பிள்ளைகள் இப்படியாக வீடுகளுக்குச் சென்று விட்டனர்.

“உம்ம வாருண்டு, பெரியும் மூட்டுக்கு சரி கூட்டி கொண்டு போகும்” இப்படிக் கனவு கண்ட இஹ்ஸானாவுக்கோ ஏமாற்றமே பரிசாகக் கிடைத்தது. தனது வயதை ஒத்த பெரியும்மா மகளுடன் பலதையும் கதைக்க வேண்டுமென்ற நீண்டநாள் எண்ணத்தில் மண் விழுந்தது.

இஹ்ஸானா தங்கிநிற்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் முகாமையாளராக நான் கடமை யாற்றுகிறேன். சிறுவர் அபிவிருத்தி நிலைய மென்றால் பலருக்குப் புரியாதி ருக்கலாம் “அனாதை மடுவம்” என்றால் புரிந்து கொள்வார்கள்.

அன்றாட நடவடிக்கைகளுக்காக முகாமை யாளரோடு, நிறுவனத்தை இயக்குவதற்கு நிர்வாக சபையொன்றும் காணப்படுகின்றது. பிள்ளைகளின் தேவைகளைக் கவனிப்பதற்காக “கெயா கிவர்ஸ்”, சமையல்காரர், சாரதி, சிற்றூழியர்கள் எனப் பலர் இருக்கிறார்கள். நிறுவனத்துக்குச் சொந்தமான வேனில் பிள்ளைகள் பாடசாலைகளுக்கும் அனுப்பப் படுகிறார்கள். பொழுதுபோக்கு அம்சங்கள், விளையாட்டு என்பவற்றுக்கும் குறைவில்லை. பெண்கள் பகுதி ஒரே நிர்வாகத்தின் கீழ் தனியாக இயங்குகின்றது. மாகாண, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக் களம், பிரதேச நன்னடத்தை அலுவலகம் ஆகியவற்றின் மேற்பார்வை வழிகாட்டலில் நிலையம் இயங்குகின்றது.

நீதிமன்றக் கட்டளையின்படியோ, திணைக் கள அனுமதிப்படியோ இங்கு பிள்ளைகள் அனுமதிக்கப்படுகிறார்கள். பொதுவாக நீதி மன்றங்களால் அனுப்பப்படுபவர்களே அதிக மானவர்களாக இருப்பார்கள்.

பெற்றோரால் கைவிடப்பட்டவர்கள், தாயோ தகப்பனோ இருவருமோ இல்லாத வர்கள், தகப்பனால் பாலியல் வன்புணர்வுக்கு



உட்படுத்தப்பட்டவர்கள், பெற்றோர் பிரிந்து வாழ்வதால் நிர்க்கதியான நிலைக்கு ஆளாகிய பிள்ளைகள், வாழ்க்கைத் துணை இன்னொரு வருடன் ஓடிப்போனதால் பிள்ளைகளை அனுசரிக்க வக்கற்றவர்களின் பிள்ளைகள் எனப் பல்வேறு வகையினர் சிறுவர் நிலையங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். பிள்ளைகளின் உணவு மற்றும் தேவைகள் நிலையத்தால் பொறுப்பேற்கப்படும். அன்பளிப்பாக இடைக் கிடை விசேட உணவுவகைகளும் வரும். நல்ல பெருநாட்களில் உடுப்புகளுக்கும் குறை விருக்காது.

என்னதான் வசதிகளைச் செய்து கொடுத் தாலும் பெற்றோர், உற்றாரைப் பிரிந்து வாழும் ஏக்கவுணர்வு, வளவுக்குள் அடைபட்டுக்கிடக்கும் கூண்டுக்கிளி வாழ்க்கை என்பன பிள்ளைகளது மனதுகளைக் கலாய்த்துவிடும்.

எங்கள் நிலையத்திற்கு நீதிமன்றத்தால் நேரடியாக ஒப்படைக்கப்பட்டவர்களில் றிஸ்லா, நஸ்லா, ரமீனா மூவரையும் உறவினர்களென யாரும் இதுவரை வந்து பார்த்ததில்லை. உம்மா வாப்பா யாரென்றே அறியாத பிறப்புச் சான்றிதழ்கூட இல்லாதவர்கள் அவர்கள். மூவரும் பதினெட்டு வயதைத் தாண்டியவர்கள். பத்து வருடங்களுக்கு மேலாக நிலையத்தில் தங்கிநிற்பவர்கள். கையளிக்க யாருமில்லாத தனால் நிலையத்தில் எடுபிடி வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

சிரித்துப் பேசியவாறு விடுமுறைக்காக உம்மாவுடன் நிலையத்தை விட்டும் வெளியேறிக் கொண்டிருக்கிறாள் பஹீமா. அதைக் கண்டு விட்டு, ''பாக்கவே ஒத்தரும் வாரில்ல நாங் கெங்க போகவன்?'' என மனதுக்குள் பொருமு கிறாள் பர்வீனா.

றிஸ்லாவின் கூச்சல் தொடங்கிவிட்டது. வழமையாகவே எடுத்ததற்கெல்லாம் மற்றவர் களுடன் மோதிக்கொள்பவள் அவள். பெற்றோர் வரும் நாட்களில் ஆட்டம் கொஞ்சம் ஓவராகத்தான் இருக்கும். அருகில் வரும் சின்னப் பிள்ளைகளுக்குச் சிலவேளை அடியும் விழும்.

வீடு செல்லத் தயாராக இருக்கும் பயாஸாவை என்னென்னவோ சொல்லி பஸ்மினா குழப்புகிறாள். இப்படியான நாட்களில் இது வெல்லாம் சகஜமே.

நீதிமன்றக் கட்டளைப்படி வேறொரு நிலையத்திலிருந்து எங்கள் நிலையத்திற்கு அனுப்பப்பட்ட ரஹீமா ஒரு மூலைக்காகி அழுது கொண்டிருக்கிறாள். கட்டுக்கடங்காத தன்மையால் ''ஹோம்'' மாறிமாறி இறுதியாக இங்கு வந்து சேர்ந்தவள் அவள். உறவென வாப்பா வழியில் மாமி ஒருவர் மாத்திரமே. இருந்துவிட்டு ஒருநாள் தொலைபேசி உரை யாடலோடு சரி.

ரஸ்லாவின் உம்மாவுக்கு மகளை வீட்டுக்கு அழைத்துச்செல்ல ஆசைதான். போக்கு வரத்துக்குப் பணமில்லாத நிலை ஒருபுறம், மற்றப் பிள்ளைகளை வைத்துவிட்டு வர முடியாத நிலை மறுபுறம்.

விடுமுறை காலம் போகட்டும், பெருநாள் களுக்காகவாவது பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் செல்லாத பெற்றோரே ஆண் பெண் இரண்டு பிரிவுகளிலும் அதிகம். ''ஸ்தாபன கமிடு'' கூட்டங்களில் என்னதான் உறைக்கும்படி சொன்னாலும் அவர்களின் மண்டையில் ஏறாது. எத்தனை முறை அறிவித்தாலும் கூட்டங்களுக்குப் பெற்றோர் வருகை மிகக் குறைவாகவே இருக்கும். தந்துவிட்டுச் செல்லும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்வதும் கடினமாக இருக்கும்.

விடுமுறையில் சென்ற பிள்ளைகள் அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்குள் திரும்பிவிடுவார்கள். போகாத பிள்ளைகள் சிலரால் சிலவேளை வலியச் சண்டைகளும் தொடங்கிவிடும்.

உம்மா கொண்டுவந்த கேக்கைப் பங்கிடு கிறாள் ரிகாஸா. தனக்குக் கிடைத்த துண்டை சஹாமா வீசுவது தென்படுகின்றது.

பிள்ளைகளில் பாதிப்பேருக்கு மேல் வீடு செல்லவில்லை. ஆனால், செல்லாத அவர்களின் சொற்களும் நடத்தைகளும் ஆயிரம் செய்திகளை தேசத்துக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

❍❍❍




ஞானம் ஏப்ரல் 2026 (இதழ் 311) கிடைக்கப்பெற்றேன். கலை இலக்கியவாதிகள் பெரும்பாலானோரைக் கௌரவித்து தனது ஞானம் இதழின் அட்டைப்படத்திலிருந்து அழகு பார்த்தவரையே ஞானம் அட்டைப்படத்தில் கண்ணுற்றபோது உள்ளத்தில் தோன்றிய உணர்வைச் சொல்வதற்கு என்னிடம் வார்த்தைகளில்லை.

“ஞானம்” சாகித்தியரத்னா தி.ஞானசேகரன் அவர்களின் ஆற்றுகைகள் இலக்கியம் சார்ந்த செயற்பாடுகள், எழுத்துக்கள், சாதனைகள், பெற்ற விருதுகள் எல்லாவற்றையும்விட தனிப்பட்ட ரீதியில் நான் போற்றிப் பணியவேண்டிய கடப்பாடுகள் அனேகம் என்பேன்.

1991ஆம் ஆண்டிலிருந்து எழுதத்தொடங்கிய நான் (16 வயதிலிருந்து) யுத்தகாலத்தில் கிட்டத்தட்ட இருபத்தாறு வருஷங்கள், எனது பேனாவை இறுகமூடி வைத்திருந்தேன். மீண்டும் 2007ல் எழுத முனையும்போது ஞானம் இதழிலேயே எழுதத் தொடங்கினேன். 2011ல் எனது 15 சிறுகதைகளைக் கொண்ட ஒரு தொகுதியை (ஒரு சிறுகதை மட்டுமே ஞானம் இதழில் பிரசுரமானது). “ஞானம்” வெளியீடாகத்தானே கொழும்பில் பதிப்பித்து வடமராட்சிக்கு நேரில் வந்து, கொற்றாவத்தை செட்டித்துறை சித்தி விநாயகர் திருமண மண்டபத்தில் சுமார் ஐநூறு பேருக்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தில் தனது வெளியீட்டுரையுடன் வெளியீடு செய்து விட்டுச் சென்ற அந்த மகத்தான பணியை எப்படி என்னால் சாதாரண ஒன்றாக எண்ணிக்கொள்ள முடியும்? அத்தொகுதிக்கு 2012க்கான கொடகே தேசிய சாகித்திய விருது கிடைக்கின்ற செய்தியை முதலில் ஐயாவுக்கே நன்றியுடன் அறிவித்திருந்தேன்.

இவ்விதழில் எனது ஆசான் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களது “சொல்லெழுகை இசை தமிழுக்குப் புதிதன்று” எனும் கட்டுரை வழமைபோலவே புதிய தகவல்களோடு கனதியாக இருந்தது.

கவிஞர் சோ.ப.வின் தமிழாக்கம் ஆங்கிலப் புலமை வாய்ந்த ஒரு பெருங் கவிஞராலேயே இயலும் என்பதை நிரூபித்தது. தமிழ்மணி அகளங்கனின் இராமாயணச் சிந்தனைகள் 6 - அங்கபங்கம் செய்தோரைத் தர்க்க நியாயங்களோடு சுவைபட எடுத்துக்கூறுகிறது.

கவிதைகள் பற்றி எழுத இங்கு இடம் போதாமையினால் தவிர்க்கின்றேன். சிறுகதைகள் தரமானவை. அதிலும் இளம் எழுத்தாளர் பிரியதர்ஷினியின் “பேத்தியா” சிறுகதை ஆரம்பத்தில் ஆரம்ப எழுத்தாளருடைய நடையாக இருந்தாலும் பின்னர் அற்புதமாக நகர்த்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருந்தது.

பேராசிரியர் துரை.மனோகரனின் பத்தி எழுத்துக்கள் இடைநிறுத்தப்படாது தொடரப்பட வேண்டும். எஸ். சுடர்நிலாவின் “திருமாவளவனின் பத்தி எழுத்துக்கள்” பற்றிய பார்வை பெறுமதியானது. எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் வழமைபோலவே உளவியலில் தனது ஆய்வோடு பயணித்து பயனுள்ள கட்டுரையாகத் தந்திருக்கிறார். “அகமுகிகள்”, “புறமுகிகள்” என்கின்ற சொற்பதங்களின் அர்த்தங்களை அறிய இடறுப்பட்டேன். மொத்தத்தில் யாவும் பெறு மதியானவை.

**– கொற்றை பி.கிருஷ்ணானந்தன்**

❍ ❍ ❍

ஞானம் ஏப்பிரல் 2026 (இதழ்.311) கையிற் கிடைத்தவுடன் வழமையாக ஏற்படும் மகிழ்ச்சிக்கு மாறாக ஓர் இனம்புரியாத கவலைதான் எனக்கு ஏற்பட்டது.

இற்றைவரை ஞானத்தை வழிநடாத்தி வந்த அந்தப் பெருந்தகையை நாம் இழந்துவிட்டோமே என்ற ஏக்கத்தின் சுவடுகளே அந்தக் கவலைக்கு காரணமாக அமைந்துவிட்டதென்றால் மிகையல்ல.

இரு தசாப்தங்களுக்கு மேலாக தனது சஞ்சிகைமூலம் பல சிறந்த படைப்பாளிகளை இலக்கிய உலகத்திற்கு அறிமுகப்படுத்தியதுடன், பல புதிய படைப்பாளிகளுக்கும் களம் தந்ததுமாத்திரமல்ல.

பல்வேறுபட்ட சிறப்பு மலர்களை வெளியிட்டும், தனது எழுத்தாளுமையை வெளிப்படுத்தும் விதமாக பல நல்ல நாவல்கள், சிறுகதைகள் எனப் படைத்து வாழ்வாங்கு வாழ்ந்தும் தமிழ் இலக்கிய உலகில் தனக்கென ஓர் இடத்தை பொன்னெழுத்துக்களால் பொறித்துக்கொண்ட பெருமை பெரியவர் ஞானம் ஞானசேகரனையே சாரும்.

அப்படியான பெருமைக்குரியவரின் பிரிவுத்துயரால் ஏற்பட்ட துயரங்களால் ஓய்ந்து விடாமல் அவரின் அரிய பணிகளை எந்தவித தொய்வும் ஏற்படாது முன்னெடுத்துச் செல்லும் தற்போதைய ஞானம் ஆசிரியருடன், துணை ஆசிரியருடையதும் பணிகள் ஞானம் வாசகர்களுக்கு நெஞ்சை நெகிழவைத்து ஆறுதலளிக்கின்றன.

அந்த வகையில், சாஹித்தியரத்னா தி. ஞானசேகரன் பற்றியதான அரிய நல்ல பல தகவல்களை "சேகரம்" எனும் மகுடத்தின்கீழ் ஞானம் ஆசிரியர் சிறப்பாக இவ்விதழில் தொகுத்து வழங்கியிருந்தமை இவ்விதழுக்கு "மகுடம்" சூடியதாக அமைந்துள்ளமை பாராட்டுதற்குரியது.

மேலும், இவ்விதழில் இடம்பெற்றுள்ள அனைத்துப் படைப்புகளும் சிறப்பாக அமைந்துள்ளன என்றாலும் விரிவஞ்சி அவற்றை இங்கு தரமுடியவில்லை.

**– ஷெல்லிதாசன், திருகோணமலை.**

○ ○ ○



## பவளவிழா

# கே. பொன்னுத்துரை

எழுத்தாளரும், ஊடகவியலாளருமான கே. பொன்னுத்துரை அவர்களின் பவளவிழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 25–4–2026 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பலரும் நிகழ்வில் கலந்துகொண்டு பவளவிழா நாயகரை வாழ்த்தி மகிழ்ந்தனர். இந்நிகழ்வில் **பணிநிறைச் செல்வர்** எனும் மகுடத்தில் பவளவிழா மலர் வெளிவந்தமை முத்தாய்ப்பாய் அமைந்தது.

கலாபூசணம் பொன்னுத்துரைக்கும் ஞானம் குடும்பத்திற்கும் நான்கு தசாப்தங்களுக்கும் மேலான தொடர்பு உள்ளது. மேலும், ஞானம் சஞ்சிகையில் **சமகால இலக்கிய நிகழ்வுகள்** எனும் பதிவுகளை பலகாலமாக எழுதிவருபவர், ஞானம் கலை இலக்கியப் பண்ணை நடாத்தும் இலக்கியச் செயற்பாடுகளில் முன்நின்று இயங்குபவர். அனைத்துக்கும் மேலாக ஞானம் குடும்பத்தினரிடம் என்றென்றும் அன்புசெலுத்தும் நெகிழ்ந்த உள்ளம் கொண்டவர்.




2024ஆம் வருடம் ஏப்ரல் மாதம் பொன்னுத்துரையின் 73ஆவது அகவை நிறைவின்போது அவரை ஞானம் அட்டைப்பட அதிதியாக கௌரவித்து மகிழ்ந்தது. ஆரோக்கியத்துடன், நீண்ட ஆயுளுடனும் இலக்கிய உலகிற்கு தொடர்ந்தும் தொண்டாற்றவேண்டும் என ஞானம் வாழ்த்தி மகிழ்கின்றது.

○○○





**கல்வியில் சமநீதியின் எய்துகை – (2024)**
**கலாநிதி கௌரி சண்முகலிங்கன்**

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த, வகை - 2 பாடசாலை களை மையமாகக்கொண்டு மேற்கொண்ட நுண்ணாய்வின் நூல் வடிவமாகும். சமநீதி இல்லாத கல்வி, சமூகத்தின் வளர்ச்சிக்கும் நாட்டின் எதிர்காலத்திற்கும் சவாலாக அமையும் என்பது ஆசிரியரின் முடிவாகும். இலங்கையில் கல்வியில் சமத்துவத்தை ஏற்படுத்து வதற்கான பல திட்டங்கள் கொண்டுவரப்பட்டாலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் சமநீதி பேணப்படவில்லை. கல்வியில் சமநீதியின் பண்புத்தரத்தின் எய்துகையை அதிகரிப்பதற்காக பல முடிவுகள் நூலாசிரியரால் முன்மொழியப்பட்டுள்ளன.

**விடத்தல்தீவு புலவர் முஹம்மது காசிம் ஆலிம் (2025)**
**பதிப்பாளர் மஸாஹிரா கனி**

பாட்டுக்கொரு புலவர் எனப் பெயர்பெற்ற முஹம்மது காசிம் ஆலிம் (1912-1987) புலவர் அவர்கள், தமிழகத்தில் வாழ்ந்த காசிம் புலவருக்கு சமமாக கருதப்படுபவர். சன்மார்க்க கடமைகள் தொடங்கி மாற்றுமத சித்தாந்தங்கள்வரை பேசவும் - எழுதவும் திறன்பெற்ற புலவர் அவர்கள், சீறாப்புராணம், ராஜநாயகம், புதுகுஷ்ஷாம் முதல் அந்தாதிகள், கீர்த்தனை, மசலா, முனாஜாத்து, கும்மி, கசீதா, நொண்டி நாடகம், கபுகாபு நாடகம், தூதுப்பாடல்கள் போன்றவற்றில் பாண்டித்தியம் பெற்றவர் என்பது கவனிப்புக்குரியது. புலவர் அவர்கள், நாவல், கவிதை, வரலாறு, நாடகம் என 9 நூல்களை எழுதியவர். புலவர் பற்றிய செய்திகள் உள்ளடங்கிய கட்டுரைகள், கவிதைகள் தொகுக்கப்பட்டு நூலாக்கப்பட்டுள்ளது. வரவேற்புக்குரிய முயற்சி.





**மணிமேகலை சிறப்பு மலர் – (2026)**
**கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு**

2026ஆம் வருடம் மே மாதம் கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய 'ஈழமும் மணிமேகலையும்" ஆய்வரங்கில் வெளியிடப்பட்ட சிறப்பு மலராகும்.
"மணிமேகலை : மறுவாசிப்பு" எனும் தொனிப்பொருளில் பன்னிரு கட்டுரைகள் மலராசிரியர் தெ. மதுசூதனனால் இம்மலரில் தொகுக்கப்பட்டுள்ளன.

## கிடைக்கப் பெற்றவை...

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/Magazine/38/2026

## குருதி படிந்த தேசம் (2025) – மாவை வரோதயன்





1965ஆம் வருடம் பிறந்து, 43 வருடங்களே வாழ்ந்து, ஈழத்து இலக்கியத்தில் தனக்கென ஒரு சுவட்டினை விட்டுச்சென்ற, மாவை வரோதயனின் கவிதைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. அறுபதாம் ஆண்டு நிறைவாக வெளிவரும் இச்சிறிய தொகுப்பில் 40ற்கும் மேற்பட்ட கவிதைகள், அவரின் மகன் அருணனால் தொகுக்கப்பட்டுள்ளன.
"மனித இருப்பின் நகைப்புக்குரிய பக்கங்களை மாவை வரோதயன் கவிதையாக்கினார் எனலாம்" என இவரின் கவிதைகள் பற்றி பேராசிரியர் சி.சிவசேகரம் குறிப்பிட்டுள்ளார்.
காலத்தின் தேவை.




### கொலைச்சொல் (2025) பிரமிளா பிரதீபன்

எட்டுச் சிறுகதைகளை உள்ளடக்கிய தொகுப்பு.
"எல்லாக் கதைகளிலும் மேற்பரப்பில் சுனாமிகளை உருவாக்கிக் கொண்டு, அடிநீரோட்டத்தில் உளவியல் சலனமின்றி ஓடுகின்றது - இது பிரமிளாவின் தனிச்சொத்து. தீவிரமான மனவோட்டங்களை - உணர்வும் பதற்றமும் தர்க்கமுமாக மனிதமனச் சலனங்கள் அனைத்தையும் சொற்களுக்குள் தேக்கி வைக்கும் அற்புதமான கதைசொல்லி பிரமிளா. ஒடுக்கப்பட்டவர் பெண்ணா, ஆணா என்றெல்லாம் பேதமில்லை. எவர் ஒடுக்கப்படுகின்றாரோ அவர் பக்கம் நின்று கதை சொல்கின்ற லட்சியவாத கட்டுப்பட்டித்தனமற்ற எழுத்து" என மோ. செந்தில்குமார் குறிப்பிட்டுள்ளார்.



### விருத்தப் பாமழை ஆயிரம் (2024) செ. அன்புராசா

நான்கு வருடங்கள் அயராது மரபுக்கவிதை எழுதும் பயிற்சியில் ஈடுபட்டு, 2020 தொடங்கி 2024 வரை எழுதிய ஆயிரம் விருத்தப்பாக்களை நூல் உள்ளடக்கியுள்ளது. ஊழல், ஒழுக்கமின்மை, கொரோனாப் பெருந்தொற்று, இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் அரசியல் மாற்றங்களும் போன்றன இவ்விருத்தப்பாக்களின் பாடுபொருட்களாக அமைந்துள்ளன. "சாற்றுகின்ற விருத்தங்கள் காதுகளில் விழுந்து சரியான தலைவர்கள் உருவாக வேண்டும் (பாடல் - 774)" என்பதின் வாயிலாக கவிஞரின் மனதை அறிந்துகொள்ளலாம். நல்ல முயற்சி.

# கிடைக்கப் பெற்றவை...

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195

ISSN 2478-0340
9 772478 034009